விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

உலகெங்குமுள்ள உறவு களுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No : 021 222 5392
(C-4575)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 28 புதன்கிழமை (11.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 144

## இளைஞர்கள் சிலர் குழப்புகின்றனர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை சிறப்பாக இயங்கவிடாது சபையில் உறுப்பினர்களாக உள்ள ஒரு சில இளைஞர்களே குழப்புகின்றனர் என எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கடுமையாக குற்றம் சாட்டியுள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மைத்திரி பிரிட்டன் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரண்டு நாள் பயணமாக நேற்று இரவு பிரித்தானியாவுக்குப் புறப்பட்டுள்ளார்.

நாளை பிரித்தானியாவில் நடைபெறவுள்ள ஊழல் ஒழிப்பு தொடர்பான அனைத்துலக மாநாட்டில் பங்கேற்கவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன் லண்டன்

24ஆம் பக்கம் பார்க்க....

# தரக்குறைவான பேச்சுக்களுடன் வடக்கு அமர்வில் கூச்சல் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் தீர்வுத் திட்ட முன்வரைபு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தனிடம் முதலாவதாக வழங்கப்படாமல் சபாநாயகரிடம் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் கையளிக்கப்பட்டமையால் நேற்றைய தினம் சபையில் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கத்துவ உறுப்பினர்களிடையே பெரும் மோதல் இடம்பெற்றது. இதன்போது தமிழ் மக்கள் பேரவையும் இடையிடையே அங்கு வலிந்து இழுக்கப்பட்டது. இதனால் நேற்றைய சபை அமர்வு தேநீர் இடைவேளையின் பின்னர் கூச்சல் குழப்பங்களுடனேயே நடத்திச் செல்லப்பட்டதுடன் தரக்குறைவான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. (23-ம் பக்.)

## "ராஜபக்ஷ பெயர் இல்லை"

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய பனாமா இரகசிய ஆவணங்களில் ராஜபக்ஷ குடும்பத்தினது பெயர் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெருமையுடன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சர்வதேச தாதியர் தின நிகழ்வுகளில் கலந்து கொளவதற்காக மகிந்த ராஜபக்ஷ சென்றார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## தரம் - 5




## நாமல், யோஷிதவிடம் நேற்று விசாரணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர்களான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் யோசித ராஜபக்ஷ ஆகியோரிடம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு விடுத்த அழைப்பின் பேரிலேயே

23ஆம் பக்கம் பார்க்க....

## கிரீடம் சூட்டியவர்களே எதிர்ப்பது கவலைக்குரியது

### ஆளும் கட்சியினருக்கு அகிலதாஸ் சாட்டை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வடக்கு மாகாண சபை தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு கிரீடம் சூடி ஆட்சிக்கு கொண்டுவந்தார்கள், இப்போது அவர்களே அவரை எதிர்ப்பது கவலைக்குரியதாக உள்ளது என வடக்கு மாகாண சபை ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர் அகிலதாஸ் சாட்டைப் பதில் கொடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின்

24ஆம் பக்கம் பார்க்க....

## பொருளாதார மத்திய நிலையத்துக்கு தாண்டிக்குளத்தில் காணி வழங்கப்படும்

### நீண்ட இழுபறிக்குப் பின் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் அமையவுள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்குரிய காணியை வழங்குவது தொடர்பில் நேற்றைய தினம் சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை உறுப்பினர்களின் சரியான தீர்மானம் இன்றி பெரும் இழுபறி நிலை ஏற்ப்பட்டது.

எனினும் இறுதியில் தாண்டிக் குளத்தில் காணியை வழங்குவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விவாதத்தினால் விவசாய அமைச்சர், சுகாதார அமைச்சர் ஆகியோரிடையேயும் கருத்து முரண்பாடுகள் காணப்பட்டன. வடக்கு மாகாண சபையின் நேற்றைய

24ஆம் பக்கம் பார்க்க....

## மீனவர் பிரச்சினை குறித்து மோடி - மைத்திரி பேச வேண்டும்

### வடக்கு மீனவர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக இந்திய பிரதமர் மோடி மற்றும் தமிழ்நாட்டு அரசுடன் பேசிதீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் என வட மாகாண மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 14-ம் திகதி சனிக்கிழமை இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ள இருப்பதால் அங்கு சென்று இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக அந்நாட்டு அரசுடன் பேசிதீர்க்கமான ஒரு

24ஆம் பக்கம் பார்க்க....

## சிறைச்சாலைகள் தரமுயர்த்தப்படும்

(கொழும்பு)

இலங்கை சிறைச்சாலைகள் சர்வதேச தரத்திற்கு தரமுயர்த்தப் படும் என அரசாங்கம் தெரிவித் துள்ளது.

இலங்கை சிறைச்சாலை முறைமையை மனிதாபிமானதாகவும், ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட சர்வதேச தரத்திற்கு அமையவும்

23ஆம் பக்கம் பார்க்க....

## இந்திய இராஜதந்திரிகள் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு



23ஆம் பக்கம் பார்க்க....

## சொந்த மூளையில் இயங்காது முதலமைச்சருடன் முட்டுவது அழகல்ல

### மோதலை தவிர்க்குமாறு பிரதி அவைத் தலைவர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் தீர்வு திட்டத்தினை சபாநாயகரிடம் முதலில் சமர்ப்பித்ததை யாராலும் பிழையென கூற முடியாது என தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைகள் வடக்கு மாகாண சபையினை மதிப்பதில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் ஐம்பத்து இரண்டாவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

24ஆம் பக்கம் பார்க்க....

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
### மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை.
### ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

வட்டாரம் :- 01
ஆதன இலக்கம் :- 133 (புதிய இலக்கம்)
குரங்கிலிப்பான் ஒழுங்கை
கிராம சேவையாளர் பிரிவு :- J/130 சுதுமலை தெற்கு

வட்டாரம் 01 குரங்கிலிப்பான் ஒழுங்கை ஆதன இலக்கம் 133 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்கு பகுதி உடுவில் கோவிற்பற்று தாவடி இறை "பெரியபுலம்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 00.81) கொண்ட இவ்வாதனமானது இல 22 கொன்டடி றோட், குருநகர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த நல்லையா யோசவ்வும் பெண் யூடிற்றா ஆகிய இவர்களால் யுவசக்தி லேன் சுதுமலை தெற்கு, மானிப்பாயைசேர்ந்த கந்தையா குணரத்தினம் என்பவருக்கு பிரிசித்த நொத்தாரிஸ் திரு.தம்பையா வேலாயுதம் அவர்களால் எழுதப்பட்ட 4839 ஆம் இலக்க 2015.12.29 ஆம் திகதிய அறுதி உறுதிப்படி தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நிலஅளவையாளர் திரு.ஏ.அருள்நேசன் அவர்களால் வரையப்பட்ட 2468A இலக்க 2016.04.20 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "பெரியபுலம்" நிலப்பரப்பு 01 குளி 00.81
கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இரு ப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கந்தையா குணரத்தினம் என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

4535


# வாள்வெட்டு, கொள்ளையினை தடுக்க முதலமைச்சர் உத்தரவிட வேண்டும்

## வடக்கு உறுப்பினர்கள் கோரிக்கை

வடக்கு மாகாண முதலமைச்சர் யாழில் தற்போது நடைபெறும் வாள்வெட்டு, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த நிலை தொடருமாயின் யாழில் ஒருவருமே வாழ முடியாத நிலை காணப்படும்.

மக்களும் இவ்வாறான சமூக விரோத சூழ்நிலைகளில் ஈடுபடுபவர்களை சுற்றி வளைத்து பிடிக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில், தற்போது யாழில் புதிய நிலை ஏற்பட்டுள்ளது, அதாவது பாலியல், கொலைகளில் ஈடுபடுவர்களுக்கு ஆதரவாக சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகுவதில்லை என அறிகின்றோம். இதனை வரவேற்கும் அதேவேளை வாள்வெட்டுக்களில் ஈடுபடும் நபர்களுக்கு ஆதரவாகுவதனையும் சட்டத்தரணிகள் தவிர்க்க வேண்டும். தற்போது நடக்கும் குற்றச் செயல்களை கண்டு யாராவது ஆயுதம் ஏந்தினால் அது வேறு விதமாக அமைந்து விடும். ஆகையால் இது தொடர்பில் அனைவரும் கவனம் செலுத்த வேணடும். மேலும் வடக்கு மாகாண முதலமைச்சர் தன்னுடைய அதிகாரங் களை பயன்படுத்தாமல் உள்ளார்.

பொலிஸாருக்கு கட்டளையிடும் அதிகாரம் முதலமைச்சருக்கு உண்டு. இந்த விடயம் சமுதாயத்திலிருந்து முற்றாக அகற்றப்பட வேண்டும். சிவில் பாதுகாப்பு கூட்டங்களில் பொலிஸாரினை, அழைத்து கட்டளை இட முடியும், யாழ்.மேல் நீதிமன்றம் விசேட அதிரடிப்படையை அழைப்பது போன்று முதலமைச்சரும் விசேட அதிரடிப் படைக்கு உத்தரவிட முடியும் என எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

மேலும் இந்த குற்றச்செயல்களுக்கு மீற்றர் வட்டி, லீசிங்க்கு வாகனம் வழங்கும் நிறுவனங்களுமே காரணமாகும். இவர்கள்தான் இந்த சட்டவிரோத குழுக்களை பணம் கொடுத்து வைத்துள்ளனர். இன்று பல இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமை யாகி அதற்காகவே கொலை செய்யும் நிலைக்கு சென்றுள்ளனர்.

வாள்வெட்டு, கொள்ளைச் சம்பவங்கள் யாழ்.நகர பகுதி களில்தான் அதிகமாக நடைபெறுகின்றது. இதில் மாணவர் களும் ஈடுபடுகின்றமை கவலைக்கிடமாக உள்ளது. நாம் எதற்காக போராடினோமோ அதனை இழக்க போகின்றேம் என்ற அச்சம் தோன்றுகின்றது. ஆகவே இவை எல்லாவற்றி னையும் வடக்கு மாகாண சபை கவனத்தில் எடுக்க வேண் டும் என அவர் தெரிவித்தார்.

ஒன்பது மாகாணங்களிலும் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மத்திய அரசுதான் அதனை கையாளுகின்றது. யாழில் மட்டும் இந்த சட்டம் ஒழுங்கு சீர் குலைகின்றது. வாள்வெட்டு அதிகரிக்கின்றது? எமது இளம் சமுதாயம் மன ரீதியாக அழிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு காரணம் என்ன? என்பது தொடர்பில் மாகாண சபையால் ஆய்வு செய்தோமா?

கலை பண்பாட்டை, பாதுகாக்கும் பொறுப்பு மாகாண சபையிடம் இருக்கும்போது நாம் இவை தொடர்பில் என்ன செய்தோம்? இது திட்டமிட்டு எம்மை அழிக்க திணிக்கப் படுகின்றது. யாழில் மட்டும் அதிகரிக்கும் நோக்கம் என்ன? சட்டம் ஒழுங்கு சம்பந்தமான மாநாட்டினை முதலமைச்சர் கூட்டி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.(செ-4)

## வாகன விபத்து இருவர் படுகாயம்

கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி வீதியோர மின் கம்பத்துடன் மோதியதில் சாரதி மற்றும் முச்சக்கர வண்டியில் பயணித்த குடும்பப் பெண் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். பண்ணை சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஊர்காவற்றுறை நாரந்தனையைச் சேர்ந்தவர்களான ஜோன் மேரி டிலக்ஷன் (வயது-24) என்ற சாரதியும் பென்சன் திறலக்ஷ் மேரி மாகிரேட் (வயது-63) என்ற குடும்பப் பெண்ணுமே படுகாயமடைந்தவராவர்.

மேற்படி விபத்து குறித்து யாழ்ப்பாண பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. (செ-30)




இரணைப்பாலை புனித
பற்றிமா அன்னை ஆலய
திருவிழாவும் மாபெரும் விளையாட்டு நிகழ்வும்

13.05.2016 வெள்ளிக்கிழமை
காலை 6.45 மணிக்கு திருவிழா திருப்பலியும்
அதனைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகளாக
ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும்
மரதன் ஓட்டப் போட்டியும் இடம்பெறும்.

பிற்பகல் மைதானப்போட்டிகளும்
இரவு பரிசில் வழங்கலும்
இசை நிகழ்வும் இடம்பெறும்

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

(C-4578)

தொடர்புகளுக்கு
S. குணசீலன் (தலைவர்)
077 1643 508
S. விமல் (செயலாளர்)
077 0793 008

சென். அன்ரனீஸ்
விளையாட்டுக் கழகம்
இரணைப்பாலை.


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 14 - 03 - 1924



மறைவு 16 - 04 - 2016

## அமரர் பஸ்தியாம்பிள்ளை சோமசுந்தரம்

கடந்த 2016.04.16 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 2016.05.14 சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 2016.05.16 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதனால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இறுதிக்கிரியை, இறுதியாத்திரை ஆகியவற்றில் கலந்து கொண்டு துயர் பகிர்ந்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் உதவிகள் புரிந்தவர்களுக்கும், அன்னார் சுகவீனமுற்றிருந்த வேளை உதவி புரிந்த மருத்துவர்கள், மருத்துவமனைப் பணியாளர்கள் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அன்பர்கள், நண்பர்கள், உறவுகளுக்கும் எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தயவு கூர்ந்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

24/3 2ஆம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(4536)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை தர்மசிவநேசன் (ரவி)



வரணி இயற்றாலையை பிறப்பிடமாகவும் நடமியன் வரணியை வதிவிடமாகவும் கொண்ட **வேலுப்பிள்ளை தர்மசிவநேசன் (ரவி)** *10.05.2016 அன்று காலமானார்.*

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-தங்கம்மாவின் அன்பு மகனும், நிர்மலாவின் அன்புக் கணவரும், கௌசிகா (இராமநாதன் கலைப்பீட மாணவி), சங்கித்மன் (சுவிஸ்), யனுசிகா (வரணி மத்திய கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்பு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.05.2016 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 2.00 மணி அளவில் நல்லடக்கத்திற்காக கொடிகாமம் வேவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடமியன்,
வரணி.

(சி-4577)

தகவல்:குடும்பத்தினர்.
0777425214, 0771726599

# மகிந்தவின் ராணுவப் பாதுகாப்பிற்கு சர்வதேசத்தை நாடவேண்டியதில்லை

## அமைச்சர் டிலான் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**நாட்டின் பாதுகாப்பு குறித்தோ, மகிந்தவின் இராணுவப் பாதுகாப்பு குறித்தோ ஏற்படும் பிரச்சினைகளுக்கு உள்நாட்டிலேயே தீர்வினைக் காணவேண்டும் என அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் டிலான் பெரேரா தொடர்ந்தும் பதிலளிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இராணுவப்பாதுகாப்பு அகற்றப்பட்டமைதொடர்பானபிரச்சினையை கூட்டு எதிர்க்கட்சியினர் சர்வதேசத்திற்கு கொண்டு செல்வதாக குறிப்பிட்டுள்ளனர். இலங்கையின் பாதுகாப்பு குறித்த பிரச்சினைகளுக்கு உள்நாட்டிலேயே தீர்மானங்கள்எடுக்கப்பட வேண்டும்என்று கூறியவர்களே இன்று சர்வதேசத்தை நாடுகின்றனர்.


தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் அதிகரித்திருந்த காலத்திலும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பாதுகாப்பு முழுமையாக மகிந்த ராஜபக்ஷவினால் அகற்றப்பட்டிருந்தது.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு தற்போது அகற்றப்படவில்லை. அவரின் பாதுகாப்பு பிரிவில் இருந்து மீளப்பெற்றுக்கொள்ளப்பட்ட இராணுவத்திற்கு பதிலாக அதே அளவு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

# கடும் வெயிலையும் பொருட்படுத்தாது நிரந்தர நியமனம் வழங்கக்கோரி தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம்

## வடக்கு மாகாண சபை முன்பாக முன்னெடுப்பு





(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் தமக்கான நிரந்தர நியமனம் கோரி நேற்றைய தினம் வடக்கு மாகாண சபை முன்பாக கடும் வெயிலுக்கு மத்தியிலும் போராடத்தில் ஈடுபட்டனர். நேற்றுக்காலை எட்டு மணியளவில் முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டம் தொடர்ந்து நீடித்தது.

இதன்போது நூற்றுக் கணக்கான தொண்டர் ஆசிரியர்கள் பங்கு பற்றி தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரியிருந்தனர். சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வரும் நாம் எவ்வித வேதனமும் கொடுப்பனவும் இன்றியே பணியாற்றி வருகின்றோம்.

யுத்தத்திற்கு மத்தியிலும் எமது மாணவர்களின் கல்விக்காக தொடர்ந்து பணியாற்றி வருகின்றோம். நிரந்தர நியமனத்திற்கான தகுதி காண் பரீட்சையிலும் தோற்றி உள்ள நாம், தொடந்தும் நிரந்தர நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டு வருகின்றோம். இப்படியே நாம் தொடர்ந்தும் வேதனம் இன்றி வேலையில் ஈடுபட்டால் எமது எதிர்காலம் என்ன ஆகும்? என போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொண்டர் ஆசிரியர்கள் தெரிவித்தனர். இதன்பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்களை சந்தித்த வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, உறுப்பினர்களான இ.ஆனோல்ட், லிங்கநாதன், ரிப்கான், எஸ்.சுகிர்தன் ஆகியோர் இது தொடர்பில் தாம் தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தனர்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு உதவி ஆசிரியர்கள் என்ற வகையில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்க வேண்டும் என்றும் தமக்கு இன்னும் சிலகாலம் தருமாறு கூறிய கல்வி அமைச்சர் த.குருகுலராஜா அங்கிருந்து விலகி சென்றார். (இ-4)

# வற்வரியின் அதிகரிப்பு சாதாரண மக்களையே பாதித்துள்ளது -திஸ்ஸ

வற் எனப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் அதிகரிப்பானது நாட்டின் சாதாரண மக்களுக்கே அதிக பாதிப்பை ஏற்படுத்தி இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ விதாரண இதனைத் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை கூறினார். இந்த மாத ஆரம்பத்தில் இருந்து வற்வரியின் அதிகரிப்பு அமுலுக்கு வந்தது. இதன் ஊடாக சிறு கடைகள் வரையில் அதன் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் சாதாரண மக்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை வற்வரி அதிகரிப்புக்கு எதிராக புறக்கோட்டை பகுதியில் முன்னிலை சோசலிச கட்சியினால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டிருந்தது. இதன் போது இந்த வரி அதிகரிப்பை இரத்து செய்து முறையான வரிக்கொள்கை ஒன்றை அமுலாக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது என்றார். (இ-5)

### மகிந்தவின் கூட்டத்திற்கு சென்றோருக்கு

# பொதுமன்னிப்பு வழங்கப்படலாம்



சுதந்திரக்கட்சியின் மேதினக் கூட்டத்திற்குச் செல்லாமல் மகிந்தவின் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படலாம் என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா,

காலியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மேதினக் கூட்டத்தில் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் பிரதேச அரசியல்வாதிகள் பலர் வருகை தரவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் கிருலப்பனையில் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்கள்.

அவ்வாறானவர்களை கட்சியை விட்டும் நீக்குவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், கிருலப்பனை கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு பொது மன்னிப்பு ஒன்று வழங்கப்படும் சாத்தியம் உள்ளது.

இந்த விடயத்தில் கட்சியின் மத்திய செயற்குழுவே என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும். எதிர்வரும் சில நாட்களுக்குள் மத்திய செயற்குழு இது தொடர்பில் கூடி முடிவெடுக்கவுள்ளது.


அந்த வகையில் கிருலப்பனை மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் குறித்து என்ன முடிவு எடுக்கப்படும் என்பதை தற்போதைக்கு உறுதியாக தெரிவிக்க முடியாதிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சிறுத்தை தாக்கி ஒருவருக்கு காயம்

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கியூ தோட்ட தேயிலை மலையில் வேலை செய்துகொண்டிருந்த சிவகுமார் (வயது 35) என் பவர் சிறுத்தையின் தாக்குதலுக்குள்ளாகிய நிலையில் டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை தேயிலை மலையில் வேலை செய்து கொண்டிருந்தவரை, தேயிலை செடியின் கீழ் பதுங்கியிருந்த சிறுத்தை, திடீரென பாய்ந்து தாக்கியுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

# ATM க்கு படையெடுத்த குளவிகள்



அநுராதபுரத்தில் அமைந்துள்ள வங்கியொன்றின் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரத்தை (ATM) குளவிகள் சூழ்ந்துள்ளமையினால் அதிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்வதில் வாடிக்கையாளர்கள் பாரிய சிரமங்களுக்கு முகங்கொடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வாடிக்கையாளர்களின் நலன் கருதி குளவிக் கூட்டை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக குறித்த வங்கியின் முகாமையாளர் தெரிவித்தார். (இ-5)

# பி.சி.சி.ஐ தலைவர் பதவியிலிருந்து சஷாங்க் மனோகர் ராஜினாமா

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவர் பதவியை சஷாங்க் மனோகர் ராஜினாமா செய்தார்.

இவர் விரைவில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படவுள்ளதாக பிசிசிஐ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது சஷாங்க் மனோகர் ஐசிசி சேர்மனாக இருந்து வருகிறார்.

வரும் ஜுன் மாதம் ஐசிசி மாநாடு நடைபெறவுள்ளது. இந்தத் தருணத்தில் சஷாங்க் மனோகரின் பிசிசிஐ பதவிக்காலமும் ஐசிசி சேர்மன் பதவிக்காலமும் முடிவுக்கு வருகிறது.

என்.சீனிவாசனுக்குப் பதிலாக சஷாங்க் மனோகர் பிசிசிஐ தலைவர் பதவிக்கு ஒக்டோபர் 2015-ல் நியமிக்கப்பட்டார். இது அவரது 2-வது பதவிக்காலம் என்பது குறிப்பிடத்தக்கது. ஜக்மோகன் டால்மியா மறைவையடுத்து சஷாங்க் மனோகர் ஒக்டோபர் 2015-ல் பிசி சிஐ தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

பிசிசிஐ செயல்பாடுகளில் சீர்திருத்தம் கோரும் முன்னாள் நீதிபதி முத்கல் கமிட்டியின் பரிந்துரைகள் மீதான தீவிர விசாரணை உச்ச நீதிமன்றத்தில் காரசாரமாக நடைபெற்று வரும் நிலையில், சஷாங்க் மனோகர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.



ஐசிசியின் புதிய விதிமுறைகளின்படி ஐசிசி தலைவராக பதவியேற்பவர் தன் சொந்த நாட்டு கிரிக்கெட் சபைப் பதவியில் இருப்பது கூடாது. இந்த அடிப்படையில்தான் அவர் தற்போது தனது பிசிசிஐ தலைவர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

ஐசிசி தலைவர் பதவிக்கு மனு தாக்கல் செய்ய மே 23-ம் திகதி கடைசியாகும். தற்போது பிசிசிஐ தலைவர் பதவியை இவர் ராஜினாமா செய்ததையடுத்து ஐசிசி தலைவர் பதவிக்கு மனோகர் பெயரை பிசிசிஐ முன்மொழிய வேண்டும்.

மனோகர் ராஜினாமா செய்ததையடுத்து ஒரே ஆண்டில் 2-வது முறையாக பிசிசிஐ தலைவரில்லாத அமைப்பாக மாறியுள்ளது. தற்போது பிசிசிஐ செயலர் அனுராக் தாக்கூர் சிறப்பு பொதுக்கூட்டத்தை நடத்தி 2 வாரங்களுக்குள் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஐபிஎல் சேர்மன் ராஜிவ் ஷுக்லா, பிசிசிஐ செயலர் அனுராக் தாக்கூர் ஆகியோர் தலைவர் பதவிக்கான போட்டியில் முதனிலை வகிக்கின்றனர். முன்னாள் பொருளாளர் அஜய் ஷிர்கே, நடப்பு துணைத் தலைவர் கங்கா ராஜு ஆகியோரும் பிசிசிஐ தலைவர் பதவிக்கான போட்டியில் உள்ளனர். (க)

# குழந்தை, மனைவிக்காக முதல்முறையாக ஐ.பி.எல் ஆட்டத்தை கைவிடும் ரெய்னா



இந்திய அணியின் முன்னணி பட்ஸ்மேன்களில் ஒருவர் ரெய்னா. ஐ.பி.எல். போட்டிகளில் ஒரு ஆட்டத்தை கூட தவறவிடாமல் அனைத்து ஆட்டத்தில் ஆடியவர் என்ற சாதனையை படைத்தவர்.

இந்தநிலையில் ரெய்னா முதல்முறையாக ஐ.பி.எல். ஆட்டத்தை தவறவிடுகிறார்.

ரெய்னாவின் மனைவி பிரியங்கா கர்ப்பமாக உள்ளார். விரைவில் அவருக்கு முதல் குழந்தை பிறக்க இருக்கிறது. இதற்காக ரெய்னா தனது மனைவி வசிக்கும் நெதர்லாந்து நாட்டுக்கு நேற்றுமுன்தினம் புறப்பட்டு சென்றார்.

இதனால் குஜராத் லயன்ஸ் அணி அடுத்து பெங்களூர் அணிக்கு எதிராக விளையாடும் ஆட்டத்தில் (மே-14) விளையாடமாட்டார். ஐ.பிஎல். ஆட்டத்தை விளையாடமல்போவது அவருக்கு இதுவே முதல் முறையாகும்.


இதனால் மக்கல்லம் அல்லது ஆரோன் பிஞ்ச் ஆகியோர் குஜராத் அணியின் அடுத்த ஆட்டத்துக்கு கப்டனாக பணியாற்றலாம் என்று தெரிகிறது.

ரெய்னா ஐ.பி.எல். போட்டியின் முதல் 8 சீசனில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக ஆடினார். அந்த அணிக்கு 2 ஆண்டு தடை விதிக்கப்பட்டுள்ளதால் குஜராத் லயன்ஸ் அணிக்காக இந்த சீசனில் ஆடுகிறார். 29 வயதான ரெய்னா ஐ.பி.எல். போட்டியில் 143 ஆட்டத்தில் விளையாடி 3985 ரன் எடுத்துள்ளார். ஸ்டிரைக் ரேட் 41.45 ஆகும். ஒரு சதமும், 26 அரை சதமும் எடுத்துள்ளார்.

அவருக்கு அடுத்தபடியாக டோனி 139 ஆட்டத்திலும், ரோகித்சர்மா 138 ஆட்டத்திலும், தினேஷ் கார்த்திக் 137 ஆட்டத்திலும் விராட் கோலி 132 ஆட்டத்திலும் ஆடி உள்ளனர். (க)

# ஒழுக்கத்தில் சமாதானம் கிடையாது பாகிஸ்தான் பயிற்சியாளர் ஆர்தர்

உலக கிண்ண இருபது-20 தொடரில் அடைந்த படுதோல்விக்கு பின் பாகிஸ்தான் கிரிக்கெட்டில் அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டன. பயிற்சியாளர் பதவியில் இருந்து வக்கார் யூனுஸ் விலகியதையடுத்து, தென்னாபிரிக்காவை சேர்ந்த மிக்கி ஆர்தர் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். இங்கிலாந்து சுற்றுப்பயணத்திற்கு முன்பாக, பாகிஸ்தான் அணியுடன் மிக்கி ஆர்தர் இணைவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



இதனிடையே ஒழுக்கத்தில் எவ்வித சமாதானமும் செய்து கொள்ளப்போவதில்லை என மிக்கி ஆர்தர் கூறியுள்ளார். பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சு நல்ல நிலையில் உள்ளதாகவும், பேட்டிங்கில்தான் முன்னேற்றம் காண வேண்டும் என்றும், பாகிஸ்தான் அணிக்கு பயிற்சியாளராக பணியாற்றுவது சவாலானது என்றும் மிக்கி ஆர்தர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இன்சமாம் உல் ஹக் தலைமையிலான புதிய தேர்வு குழு, ஒழுங்கீனமான நடத்தை காரணமாக அகமது செஷாத், உமர் அக்மல் ஆகியோரை இங்கிலாந்து சுற்றுப்பயணத்திற்கான அணியில் இருந்து நீக்கியது குறிப்பிடத்தக்கது. (க)

# நல்லூர் நாடகத் திருவிழா; நூல் வெளியீட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திருவிழாவில் கடந்தாண்டு மேடையேற்றப்பட்ட நாடகங்களின் எழுத்துருக்கள், பட்டறிவுக் குறிப்புக்கள், விமர்சனங்கள் என்பவற்றின் தொகுப்பாக 'நல்லூர் நாடகத் திருவிழா 2015' என்ற நூல் வெளியிடப்படவுள்ளது. இதன் வெளியீட்டு விழா இன்று மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நாடக எழுத்தாளரும் நெறியாளருமான தேவநாயகம் தேவானந்த் இதனை தொகுத்துள்ளார்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக இந்தியத் துணைத்தூதுவர் கௌரவ ஆ.நடராஜன பங்குகொண்டு நிகழ்வை சிறப்பிக்கின்றார். நிகழ்வின் சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளரயன் கதிரவேல் கமலேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். நாடக அரங்கக் கல்லூரியின் தலைவர் குழந்தை ம.சண்முகலிங்கம் சிறப்புரையையும் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வெளியீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர். நூலின் மதிப்பீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மொழிபெயர் பலகின் இணைப்பாளர் கலாநிதி க.ஶ்ரீ கணேசன் வழங்கவுள்ளார்.

நூலின் நயப்புரையை தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் து.இளங்குமரன் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவன முகாமையாளர் நா.கமலதாஸ் ஆகியோர் வழங்கவுள்ளனர். நூலை இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் சுப்பிரமணியம் கிருஸ்ணகுமார் பெற்றுக்கொள்வார்.

நிகழ்வில் செயல் திறன் அரங்க இயக்கத்தினால் நடத்தப்பட்ட 'நாடகத் தயாரிப்பு' பயிற்சியில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. நாடகமும் அரங்கியலும் கற்கின்ற மாணவர்களுக்கு பயனுள்ளதாக உள்ள இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் கலை ஆர்வலர்கள், நாடகத்துறை சார்ந்தோர், ஆசிரியர்கள் மற்றும் மாண வர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கு மாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (செ-4)

# கால்பந்து பயிற்சியின் போது கமரூன் வீராங்கனை மரணம்



கமரூன் கால்பந்து வீராங்கனை ஒருவர் பயிற்சியின் போது மாரடைப்பால் மரணமடைந்துள்ளது சோகத்தை ஏற்படுத்தியுள் ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு எதிரணி வீரருடன் பயங்கரமாக மோதிக்கொணடதில் கமரூன் வீரர் பேட்ரிக் எகோங் மைதானத்திலே பரிதாபமாக உயிரிழந்தார்.

அதற்குள் கமரூன் கால்பந்து வீராங் கனை ஜீனி கிறிஸ்டெல்லி (26வயது) என்பவர் மாரடைப்பால் மரணமடைந்துள்ளார்.

கோல் கீப்பரான ஜீனி, போட்டிக்கு முன்பாக பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது நெஞ்சு வலியால் அவதிப்பட்டுள்ளார்.

உடனே அவரை அருகில் இருந்த மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். ஆனால் அவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர் மாரடைப்பால் இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர். இந்த தகவலை கமரூன் கால்பந்து கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (க)

# மக்களின் நாடியை வெட்டி இரத்தத்தை போசணையாக்குகின்றது நல்லாட்சி அரசு

## அநுரகுமார எம்.பி. குற்றச்சாட்டு



**சாதாரண மக்களின் நாடியை வெட்டி அவர்களின் இரத்தத்தை போசணைக்கு எடுக்கும் ஆட்சியே தற்போதைய நல்லாட்சி என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

பத்தரமுல்ல கட்சி அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த அரசாங்கம் விட்டுச்சென்ற கடனை அடைப்பதற்காகவே தற்போது நாட்டில் வற்வரி அதிகரிக்கப் பட்டுள்ளதாக அரசாங்கம் கூறிவருகின்றது. கட்னை அடைப்பதனால் நாட்டில் ஊழலில் ஈடுபட்டவர்களிடம் இருந்து பணத்தை பெற்று கடனை அடைக்கலாமே, ஏன் சாதாரண மக்களின் இரத்தத்தை உறிஞ்சுகிறார்கள் என் அநுர கேள்வி எழுப்பினார்.

வற்வரி அதிகரிக்கப்பட்டாலும் மக்களின் அத்தியாவசியப் பொருட்களுக்கு வரி அதிகரிக்கப்படாது எனக்கூறிய அரசு, தற்போது விலை அதிகரித்துள்ள அனைத்து பொருட்களுமே மக்களின் அத்தியாவசியப் பொருட்களுக்குள் அடங்கும் என சுட்டிக் காட்டினார்.

முன்னர் 8%வும்11 % வும் இருந்த சேவை மற்றும் பொருட்களின் வரி தற்போது 15% ஆக அதிகரிக்கப்பட்டு மககளின்வாழ்வாதாரநிலையை பெரிதும் பாதித்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் கூறினார்.

அத்தியாவசியப் பொருட்களுக்கான விலை அதிகரிக்கப்படவில்லை என கூறி வரும் அரசு, உணவு, மருந்து, தொலைத்தொடர்பு, மின்சாரம், நீர் போன்ற அனைத்திற்கும் விலையை அதிகரித்துள்ளது. இதன் மூலம் ஒரு விடயம் புலப்படுகின்றது. "இந்த அரசாங்கத்திற்கு அத்தியாவசியப் பொருட்கள் என்றால் என்ன என்பது தெரியவில்லை" என குற்றம் சுமத்தினார்.

வரும் வாரத்தில் நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில், கடந்த அரசு விட்டுச் சென்ற கடனை, வரியை உயர்த்துவதன் மூலமே அடைக்கலாம் எனக் கூறிக்கொண்டு, கட்சி அலுவலகங்கள், வாகனங்கள், தங்களுடைய வீட்டு கட்டுமானப்பணிகள் என தற்போதைய அரசாங்கமும் பணத்தை செலவு செய்கின்றது என அநுரகுமார திஸாநாயக்க தெளிவூட்டி னார்.

மேலும் மக்களின் பணமானது பல நாடுகளில் கறுப்புப் பணமாக சேமித்து வைகக்கப்பட்டுள்ளது. அவை தொடர்பில் சில தகவல்கள் கண்டறியப்பட்டாலும் கூட மேலும் பல நாடுகளில் இருக்கும் அதிகளவான கறுப்புப் பணம் பற்றி இதுவரை கண்டறியப்படவில்லை என சுட்டிக் காட்டினார்.

மேலும் விசாரணைகள் முடிவடைந்து குற்றங்கள் நிரூபிக்கப்பட்ட நிலையிலும், குற்றவாளிகளை கைது செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கமே தடுத்து நிறுத்தியுள்ளதாக இதன்போது மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-5)

## நியமனத்தில் தொடர்ந்து புறக்கணிப்பு






நிரந்தர நியமனம் வழங்குவதில் தாம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண தொழில நுட்ப சங்கத்தினர் வடக்கு மாகாண சபை முன்பாக நேற்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இப்போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த மாணவர்கள் தொழில்நுட்ப கல்லூரிகளில் நில அளவையாளர், பொறியியல்,போன்ற பல பிரிவுகளில் கல்வி கற்று முடித்து, தற்போது நீண்ட காலமாக வேலையற்று இருக்கின்றோம், அரச நியமனம் வழங்கும் போது, ஏதோ ஒரு காரணத்தினால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றோம்.

க.பொ.த உயர்தர பிரிவில் சித்தி இல்லை என பல காரணங்கள் கூறப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர், ஆளுநர், பிரதம செயலர், அமைச்சுக்களின் செயலர் ஆகியோருக்கு பல தடவைகள் தெரியப்படுத்தி உள்ளோம் எனினும் நடவடிக்கை எதுவும் இல்லாமல் தொடர்ந்தும் நாம் புறக்கணிக்கப்பட்டு வருகின்றோம்.

எமக்கு நியமனம் வழங்குவதில் கல்வி தகைமை இல்லை என கருதினால் பரீட்சை ஒன்றை நடத்தி அதனூடாக எம்மை உள்வாங்க முடியும.

ஆகவே உடனடியாக இது தொடர்பில் எமது முதலமைச்சர் கவனமெடுத்து செயற்பட வேண்டும் என்றனர். (இ-4)

## கொலையின் முக்கிய ஆதாரமான இறுவெட்டு பொலிஸாரின் வசம்

அண்மையில் நொச்சியாகமயில் கொலை செய்யப்பட்ட சரத் பண்டார எனப் படுமஎஸ்.எப்.பண்டார கொலை தொடர்பாக இடம்பெறும் விசாரணைக்கு முக்கியமானதாக நம்பப்படும் இறுவெட்டு, திரப்பனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எஸ்.எப்.பண்டாரவின் சகோதரனால் இந்த இறுவெட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி இரவு உந்துருளியில் வந்த இரணடு பேர், குறித்த இறுவெட்டை தன்னிடம் கொடுத்து, இதனை பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு கோரியதாக எஸ்.எப்.பண்டாரவின் சகோதரன் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார். (இ-5)

## இராசி பலன்

11.05.2016

(சித்திரை 28,புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு

பஞ்சமி பிற்பகல் 4.33 மணிவரை

புனர்பூசம் பின்னிரவு 3.42 மணிவரை

சுபநேரம் 4.24-5.54 மணிவரை

இராகுகாலம் 11.54-1.24 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சூரி சுக,புத | | சந் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மூலம் இரவு 9.50 இற்கு கட-சந் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வளர்ச்சிப் பாதைக்கு வித்திடுவீர்கள், தேக நலனில் அக்கறை காட்டுவீர்கள், சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மேடம்** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், தொழில் வளர்ச்சி அதிகரிக்கும் நாள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லபடியாக நடைபெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சிகண்டு பெருமையடைவீர்கள், அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனைகளைக் கேட்பீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிறருக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற இறைவனைப் பிரார்த்திப்பீர்கள்.

**மகரம்** தேவைகள் பூர்த்தியாகும் நாள், பழைய பிரச்சினைகளைத் தீர்க்க முழுமூச்சுடன் செயற்படுவீர்கள், கௌரவமான நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சந்தோசம் தரும் செய்திகளைக் கேட்கலாம்.

**தனுசு** உறவினர்கள் உங்களின் வீடுகளுக்கு திடீரென வரலாம், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டுக் கொள்வது நல்லது, வேலையில் சிறு மன உளைச்சல்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**துலாம்** தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கொடுக்கல்-வாங்கல்களில் ஏற்பட்ட வில்லங்கம் அகலும், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், திறமைகள் வெளிப்படும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள், ஆரோக்கியமான நாள்.

## யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு உள்ளிட்ட

# சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஐவருக்கும் 20 ஆம் திகதி வரை மறியல்

## யாழ்.நீதிமன்றம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகரப் பகுதி புறநகரங்களில் அண்மைக் காலமாக கொள்ளையடித்தல், வாள்வெட்டு சம்பவங்கள் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதாகிய ஐவருக்கும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை யாழ்.நீதிமன்றம் விளக்கமறியல் விதித்துள்ளது.

ஐவர் கொண்ட இளைஞர் குழுவை யாழ்ப்பாணம் குற்றப்புலனாய்வு பிரிவினர் நேற்று முன்தினம் மாலை கைது செய்திருந்தனர். இவ்வாறு கைது செய் யப்பட்டவர்களிடம் இருந்து உள்ளூர் தயாரிப்பான கைக்குண்டுகள், வாள், கத்தி, கைக்கோடரி உள்ளிட்ட ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இக்குழுவினர் மீது யாழ்ப்பாணம், சுன்னாகம்,கோப்பாய், மானிப்பாய பகுதியில் உள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனடிப்படையில் மேற்குறித்த குழுவினரை கைது செய்ய யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பிரிவினர் கடந்த இரண்டு கிழமைகளாக கடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் போது இவ் ஐவரும் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டனர்.

இக்குழுவினர் கடந்த மாதங்களில் கொள்ளை. மோட்டார் சைக்கிள் அபகரிப்பு, அத்துமீறி வீடுடைப்பு, சொத்துக்களிற்கு சேதம் விளைவித்தல், வாளால் வெட்டி காயப்படுத்தல் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரிய வருகின்றது. அத்துடன் இக்குழுவிற்கு மானிப்பாய் தனு றொக் என அழைக்கப்படும் நபரே தலைவராக செயற்பட்டு வந்துள்ளார்.

இவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் எல்லைக்குட்பட்ட பகுதியில் இதுவரை இடம் பெற்ற முக்கிய சட்ட விரோத செயற்பாடுகளை நடத்திய தாக தெரிவிக்கப் படுகின்றது. தட்டார்தெரு சந்தி பகுதியில் வாள் வெட்டு, இந்துக் கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியரின் வீடுடைப்பு, கொக் குவில் பகுதியில் பல்சர் ரக மோட்டார் சைக்கிள் அபக ரிப்பு, கந்தர்மடம், அரியாலை பகுதி வீடுடைப்பு, சிங்கள சுற்றுலா பயணிகள் பேருந்து உடைப்பு, நாயன் மார்கட்டு வீடுடைப்பு, மோட்டார் சைக் கிள் அபகரிப்பு ஆகிய செயற் பாடுகளுடன் நேரடியாக தொடர்பு உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த ஐவரினையும் நேற்றைய தினம் யாழ்.நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்கரன் முன்னிலையில் யாழ்.பொலிஸார் ஆஜர்படுத்திய போது, ஐவரினையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டுள்ளார். (இ-4)

## யாழில் அதிகரித்துள்ள குற்றச்செயல்கள் ஜனாதிபதியின் கவனத்திற்குச் செல்லும்

### அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதுடன், வாள் வெட்டு சம்பவங்கள், குழு மோதல்கள் போன்றனவும் அதிகரித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

சங்கரத்தை கல்வி, கலாசார அபிவிருத்தி சபையும், கிராம அபிவிருத்திசங்கமும் இணைந்து நடத்திய ஆண்டு விழா நிகழ்வும், புலமை பரிசில் பரீட்சியில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

சங்கரத்தை ரட்ன சிங்கம் மணி மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன் போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

குறித்த விடயம் தொடர்பில் பொலிஸ்மா அதிபருடன்விரிவாக கலந்துரையாடியுள்ளேன்.

இன்னும் இரண்டு வாரங்களுக்குள் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுவோர்கள் கைது செய்யப்படுவார்கள் என பொலிஸ்மா அதிபர் உறுதியளித்துள்ளார்.

மேலும் குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்.

இளைஞர்கள் மத்தியில் இன்று ஏற்பட்டுள்ள வேலையில்லாப் பிரச்சினையும் இதற்கு காரணமாகும். எனவே, வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என அவர் மேலும் தெரித்துளளார்.(இ-5)

## அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களின் இலட்சிய வழிகாட்டிகளாக திகழவேண்டும்

### அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு




(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கள் மாணவர்களுக்கான வழிகாட்டிகள். மாணவர்களுக்கு பாடங்களைத் தெளிவாகப் புரிய வைத்துப் பரீட்சைகளில் சித்தி அடையவைப்பதில் வழிகாட்டிகளாக விளங்குகினறார்கள். இது வாழ்வதற்கு உழைப்பதற்கு அவசியமானது.

ஆனால், இது மட்டும் போதாது. மாணவன்வாழ்க்கையிலும் நல்லதொரு மனிதனாக வெற்றிபெற வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் மாணவர்களின் இலட்சிய வழிகாட்டிகளாகவும் திகழ வேணடும் என்று விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் வித்தியாலயத்தின் புதிய மாடிக்கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சி அடைந்துளளது. மாணவர்கள் ஒழுகக விழுமியங்கள் சிதைந்து பல்வேறு சமூகப் பிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

இதனை, நீண்ட காலமாகப் போருக்குள் வாழ்ந்த ஒரு சமூகத்தின் சிதைவாகப் பார்ப்பவர்களும் உண்டு. எமது இளைய தலைமுறையினர் திட்டமிட்டு தவறான பாதைக்கு இழுத்துச் செல்லப்படுகின்றார்கள் என்று சொல்பவர்களும் உண்டு. காரணங்கள் எவையாக இருந்தாலும்,எமது மாணவர்கள் தவறான பாதையில் செல்வது தடுக்கப்பட வேண்டும்.

மாணவர்கள் தங்கள் பெரும்பகுதி நேரத்தை ஆசிரியர்களுடனேயே செலவிடுகிறார்கள். இதனால் ஆசிரியர்கள் மாணவர்களை வழிப படுத்துவதில் மிகப் பெரும் பங்கு ஆற்ற முடியும்.

பாடப் புத்தகங்களுக்கு மேலாக வாழ்வாங்கு வாழ்ந்த சமூகப் பெரியோர்கள் பற்றி, இலட்சியவாதிகள் பற்றி மாணவர்களிடையே எடுத்துச்சொல்லி அவர்களை இலட்சிய புருஷர்களாக வளர்ப்பதற்குத் தூண்ட முடியும். அதுமட்டுமல்லாமல் ஆசிரியர்களும் மாணவர்களின் இலட்சிய வழிகாட்டிகளாக ஆக முடியும். தங்கள் நடை, உடை, பாவனை, சிந்தனை, செயல் என்று எல்லாவற்றிலும் நேர் பட வாழும் ஆசிரியர்களை மாணவர்கள தங்கள் இலட்சிய வழிகாட டிகளாக இலகு வில் ஏற்றுக் கொள்வார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் வித்தியாலய அதிபர் யோ.ஜெகஆனந்தம் தலைமையில் நடைபெற்ற கட்டடத் திறப்பு நிகழ்ச்சியில் யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, உதவிக் கல்விப்பணிப்பாளர்கே.மைதிலி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள். (இ-5)

## காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் முன்னாள் பணியாளர் சங்கத்தின் கலந்துரையாடலும் ஒன்றுகூடலும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் முன்னாள் பணியாளர்கள் சங்கத்தின் கலந்துரையாடலும் ஒன்றுகூடல் நிகழ்வும் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் கந்த சுவாமி கோவில் மேற்கு பக்கமாகவுள்ள பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சூர்யா சைவ உணவகத்தின் மேல் மாடியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் முன்னாள் பணியாளர்களையும் பணியாளர்கள் இல்லாத விடத்து பணியாளர்களின் குடும்ப அங்கத்தவர் ஒருவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை முன்னாள் ஊழியர்கள் ஒன்றியம் அறிவித்துள்ளது. (இ-95)

## இராஜயோக நிலையத்தின் புதிய கிளைத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினரின் புதிய கிளைத்திறப்பு விழா சங்கானையில் பட்டினசபை என்ற முகவரியில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

புதிய ஆரம்பம் புதிய வாழ்வு என்ற தலைப்பில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் இலங்கை பிரம்ம குமாரிகளின் இராஜயோக நிலையங்களின் தேசிய பொறுப்பாளர் பிரம்மகுமார் கணேஷ் கலந்துகொள்ளவுள்ளார். (இ-5)








யாழபபாணம தேசிய கலவியியற கலலூரியின தமிழ மனறததின முததமிழ விழாவும 'வர்சங்கலி' மலர வெளியீடும கடநத 07ஆம திகதி சனிககிழமை காலை 8.30 மணிககு கலலூரியின கலையரங்கில கலலூரியின பீடாதிபதி ச.அமிரதலிங்கம தலைமையில நடைபெறறது.இநநிகழவிறகு சிறபபு விருநதினராக தெனகிழககு பலகலைககழக மொழிததுறை முதுநிலை விரிவுரையாளர க.இரகுவரனும, கௌரவ விருநதினராக கொககுவில இநது அதிபர வே.ஞானகாநதனும, யாழபபாணம ஸரானலி வதி, இலங்கை வங்கி நிறைவேறறு அதிகாரி த.கணேசமூரததி ஆகியோர கௌரவ விருநதினரகளாக கலநது சிறபபிததனர.மனறததால வெளியிடபபடட 'வர்சங்கலி' மலரின நயபபுரையினை யாழபபாண பலகலைககழக தமிழததுறை முதுநிலை விரிவுரையாளர த.அருநதாகரன நிகழததியிருநதார. முதறபிரதியை திருமதி.பரமேஸவரி சிவகுமாரன பெறறுககொணடார.மனறககாபபாளர பா.பாலகணேசன, விரிவுரையாளர மு.கௌரிகாநதன, மனறததலைவர க.யசோதரன ஆகியோரின உரைகளும, சிறபபு படடிமனறமும, முகிழநிலை ஆசிரியரகளின கலைநிகழவுகளும இடமபெறறன.

# மக்களை பலப்படுத்துவதற்காகவே அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி அறிவுரை

(கொழும்பு)

**தனது அதிகாரத்தை பலப்படுத்துவதற்காக அன்றி தம்மை அதிகாரத்தில் அமரச்செய்த மக்களை பலப்படுத்துவதற்காகவே அதிகாரம் பயன்படுத்தப்படல் வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுரை வழங்கியுள்ளார்.**

மக்கள் வழங்கும் அதிகாரத்தைப் பலப்படுத்து வதற்காகவும் மற்றவர்களின் அதிகாரத்தை இல்லாதொழிப்பதற்காகவும் அதிகாரத்தை பயன்படுத்தும் அரசியல்வாதிகளிடையே ஒருபோதும் தனது அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தாத லலித் அத்துலத்முதலி போன்றோர் முன்மாதிரியாக திகழ்ந்தனரென ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற காலஞ்சென்ற லலித் அத்துலத்முதலியின் நினைவு தின வைபவத்தில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மக்கள் மனங்களில் அன்றுபோல் இன்றும் மறக்க முடியாத ஒரு நபராக திகழ்ந்த லலித் அத்துலத்முதலி ஒருபோதும் தனது அதிகாரத்தை பலப்படுத்துவதற்காக உபயோகிக்கவில்லை என்பதுடன் ஊழல் மோசடிகள் மற்றும் முறைகேடுகள், அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்யாத ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிய அரசியல்வாதியாவார் என இதன் போது ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சுதந்திரத்திற்குப் பின் இந்நாட்டில் தோன்றிய அரசியல்வாதிகளுள் நேர்மையான மற்றும் மனிதாபிமானம் படைத்த லலித் அத்துலத்முதலி , அன்று பாராளுமன்றத்தில் நடந்து கொண்ட விதமும் பாராளுமன்றத்தில் அவர் உரையாற்றிய விதமும் அரசியல்வாதிகளுக்கு முன்மாதிரியாக உள்ளதென ஜனாதிபதி தெரிவித்தார்.

அவர் ஆரம்பித்த கருத்திட்டங்களுள் மகாபொல புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம் மக்கள் மனதில் என்றும் அழியாத ஒரு கருத்திட்டமாக உள்ளதெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அன்று தொடக்கம் இன்று வரை அதிகாரத்திற்கு வந்த அனைத்து அரசாங்கங்களும் அதை வலுவடையச் செய்து முன்கொண்டு சென்றதாக நினைவுகூர்ந்தார்.

மகா சங்கத்தினர் உள்ளிட்ட மதப் போதகர்கள், சபாநாயகர் கரு ஜயசூரிய, லலித் அத்துலத்முதலி மன்றத்தின் தலைவர், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அறிஞர்கள், தயந்த அத்துலத்முதலி உள்ளிட்ட லலித் அத்துலத்முதலி குடும்ப உறுப் பினர்கள் இதில் கலந்துகொண்டனர். (இ-5)

## 500 மில்லியன் அமெ.டொலரில் கிழக்கில் தொழில்நுட்ப பூங்கா

### 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின 'கிழக்கின் முதலீடு' திட்டத்திற்கமைய, சுமார் 500 மில்லியன அமெரிக்க டொலர் முதலீட்டில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ள விஞ்ஞான தொழில்நுட்ப பூங்கா ஊடாக சுமார் 50,000 தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என, குறித்த தொழில்நுட்ப பூங்காவிற்கான முதலீட்டினை மேற்கொள்ளவுள்ள இந்திய முதலீட்டாளரான பத்ரிநாத் தெரிவித்துள்ளார்.

குறித்த தொழில்நுட்ப மையம தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் கிழக்கு மாகாண சபையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு விளக்கமளிக்கும்போதே முதலீட்டாளரான பத்ரிநாத் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாயற்றிய அவர், அண்மையில் கொழும்பில் நடத்தப்பட்ட 'கிழக்கு முதலீடு-2016 என்ற ஒன்றுகூடலின் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்ட பேச்சுக்களின் அடிப்படையில் வஞ்ஞான தொழில்நுட்ப பூங்காவை சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் உருவாக்க இருக்கின்றோம்.

இதனை நிறைவேற்றுவதற்கு மூன்று தொடக்கம் நான்கு வருடங்கள் தேவைப்படும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றபோது, நேரடியாகவும் மறைமுகமாகவும்சுமார்50, 000 தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கின றோம். இங்கே தொழில்நுட்ப மையத்தினை மட்டுமல்லாது சுற்றுலாத்துறை உட்பட பல்வேறு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு அவற்றினையும விருத்தி செய்யும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, இளைஞர யுவதிகளின் தொழில்நுட்பத் திறனை விருத்தி செய்யும் பொருட்டு தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினையும் உருவாக்க திட்டமிட்டுள்ளோம் எனத் தெரிவித்தார். (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா:63 சூரி செவ் 7 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்BSc IT/பொறியியலாளர<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: B/4416 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 42 செவ் 12 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5309 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 14<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/4421 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 29 செவ் 4 இல்<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/5312 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 28 செவ் 7 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/4425 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 13செவ் 12 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/5314 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 44 செவ் 7 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/4428 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 32<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:BA<br>எதிர்பார்ப்பு:விவாகரத்துபெற்றவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5320 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
([illegible])


## பருத்தித்துறை பிரதேச சபையின் புதிய செயலாளராக பாஸ்கரன்

(கரணவாய்)

யாழ்.பருத்தித்துறை பிரதேச சபையின் புதிய செயலாளராக முன்னாள் பூநகரி பிரதேச சபைச் செயலாளர் எஸ். ஸ்ரீபாஸ்கரன் நியமிக் கப்பட்டுள்ளார்.

இதேவேளை பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் செயலாளரான திருமதி சத்தியபாமா வடமாகாண கைத்தொழில் திணைக்களத்திற்கு இடமாற்றப் பட்டுள்ளார்கள்.(இ-5-60)


வீட்டுடன் காணி விற்பனை

கெற்பலியில் 1/2 ஏக்கர் காணியுடன் சேர்ந்த வீடு வளவு மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
076 669 7942
(4520)



நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S. சர்மா குருஜீ
076 725 6024
[4393]
நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்



மணிவிழா வாழ்த்து
திருமதி.திருமகள் கருணீசன்
(பிரதிஅதிபர்)




சேவை விபரம்
க/ பாரதி தமிழ் ம.வி.
1984 -1990
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.
1990- 1995
வ/ பண்டாரிக்குளம் விபுலானந்தா ம.வி.
1995- 1999
க/கண்டி சித்திலெப்பை ம.வி.
1999 -2000
கா/பாரதி தமிழ் ம.வி.
2000- 2005
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை 04.06.2005-09.09.2015

எமது பாடசாலையில் நீண்டகாலம் சேவையாற்றி ஓய்வு பெற்ற எமது ஆசிரியரை சேவை நயப்பு விழா நடைபெறும் இந் நாளில் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகிறோம்.

(சி-4576)
பாடசாலைச் சமூகம்
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை

## பொங்கல் உற்சவத்தையொட்டி துப்புரவு செய்யும் பணி ஆரம்பம்



வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் மற்றும் முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயங்களின் வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு குறித்த பிரதேசங்களில் உள்ள பிரதான மற்றும் உள்ளக வீதிகளை துப்புரவு செய்யும் பணிகள் கரைதுறைப்பற்று பிரதேச சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக குறித்த உற்சவகாலங்களில் பக்தர்களால் நேர்த்திக் கடன்களுக்காக பல்வேறு பகுதிகளிலிருந்தும் பறவைக்காவடிகள் எடுக்கப்படுவது வழமையாகும். அவ்வாறு வரும் காவடிகளுக்கு இடையூறாக வீதியோரங்களில் காணப்படும் மரக்கிளைகள் உட்பட அனைத்து தடைகளும் துப்புரவு பணிகள் மூலம் அகற்றப்பட்டு வருவதுடன் வீதிகளில் காணப்படும் ஆபத்தான பள்ளங்களும் மணல் நிரவப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-301)

### தர்மபுரம் கட்டைக்காடு பகுதியில்

# 2 ஆயிரத்து 575 கோடா போத்தல்கள், 56 கசிப்பு போத்தல்கள் கைப்பற்று

(பரந்தன்)

**தர்மபுரம் கட்டைக்காடு பகுதியில் தேடுதல் நடவடிக்கையின் போது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 10 பரல்களில் இருந்த 2 ஆயிரத்து 575 கோடா போத்தல்கள் இரண்டு கான்களில் இருந்த 56 கசிப்பு போத்தல்கள் என்பவற்றை கைப் பற்றியுள்ளதாகவும் வவுனியாவைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளதாக தர்மபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**



தர்மபுரம்பொலிஸாருக்கு நேற்று முன்தினமிரவு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சத்துரங்க தலைமையிலான குழுவினர் நீண்ட நேர தேடுதல் நடவடிக்கையின் பின் கட்டைக்காடு குளம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பத்து பரல்களில் இருந்த 2 ஆயிரத்து 575 போத்தல்கள் கோடா மற்றும் இரண்டு கான்களில் இருந்த 56 போத்தல்கள் கசிப்பு என்பவற்றுடன் வவுனியாவை சேர்ந்த சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

குறித்த கசிப்பு மற்றும் கோடா என்பன நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் தர்மபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு நேற்று கிளிநொச்சி நீதவான் நீதி மன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (2-312)

# புனர்வாழ்வு பெற்ற பத்துப்பேர் உறவினர்களுடன் இணைவு



வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்ற நான்கு கிராம அலுவலர் உட்பட 10 பேர் நேற்று சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டனர்.

வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் வைத்து புனர்வாழ்வு நிலையப் பணிப்பாளர் கேணல் எம்.ஆர்.ஹமிட்டோனினால் அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டான்.

விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்புகளைப் பேணியவர்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய ஒரு வருட கால புனர்வாழ்வைப் பூர்த்தி செய்த ஆறு பேரும், பொதுநிர்வாக உள்நாட்ட லுவல்கள் அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக 3 மாத புனர் வாழ்வினைப் பெற்று வந்த கிராம அலுவலர் நான்கு பேருமாக மொத்தம் 10 பேரே சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டனர்.

இதன்போது, புனர்வாழ்வு பெற்ற போராளிகளின் பாடல், கருத்துரைகள், அனுபவப் பகிர்வுகள் உள்ளிட்ட நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்நிகழ்வில், புனர்வாழ்வு நிலைய பின்ஆய்வுப் பொறுப்பதிகாரி லெப் கேணல் பெர்னாண்டோ, பூந்தோட்ட புனர்வாழ்வு நிலைய பொறுப்பதிகாரி கப்டன் குணசேகர, இராணுவ அதிகாரிகள், மதகுருமார், முன்னாள் போராளிகள், முன்னாள் போராளிகளின் குடும்பத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## சட்டவிரோதமான வலைகளை பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபட்ட மூவர் கைதாகினர்

முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேப்பாப்பிலவு நந்திக்கடல் நீரேந்துப்பகுதியில் சட்ட விரோத வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட மூவர் முள்ளியவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்த சுமார் 1000 மீற்றர் நீளமான சட்ட விரோத வலைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

முள்ளியவளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து நேற்று காலை 6 மணியளவில் நடத்திய சுற்றி வளைப்பின் போது சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முள்ளியவளைபொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி ஐ.விஜயகோன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த நீரேந்துப் பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையில் மூவர் கைது செய்யப்பட்டதுடன் அவர் பயன்படுத்திய சட்டவிரோதமான வலைத் தொகுதிகளும் கைப்பற்றப்பட்டன. அத்துடன் சுமார் 100 கிலோ கிராமிற்கும் அதிகமான பயன்பாட்டிற்கு உதவாத மீன் குஞ்சுகளும் அவர்கள் வலையில் சிக்குண்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.சந்தேக நபர் மூவரையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை தாம் மேற்கொண்டு வருவதாக முள்ளியவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.அத்துடன் கைப்பற்றப்பட்ட வலைத் தொகுதிகளும் பாரப்படுத்தப்படவுள்ளன. இதேவேளை இவ்வாறான சட்ட விரோதமான நடவடிக்கையினால் குறித்த நீரேந்துப் பகுதியிலுள்ள மீன் குஞ்சுகள் அழிவடையும் அபாய நிலையை எட்டியுள்ளதாகவும் குறித்த கடல் நீரேந்து பகுதியை நம்பி தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டுவரும் நூற்றுக்கணக் கான வீச்சுத் தொழிலாளர்களின் ஜீவனோபாயம் பாதிக்கப்படு வ தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-310)




# நாம் வாழ்ந்து வரும் காணிகளுக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுத்தாருங்கள்

## வவுனியா தமிழ் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அமைச்சர் றிசாத்திடம் கோரிக்கை

50 ஆண்டுகளுக்கு மேலாக நாம் வாழ்கின்ற இந்தப் பிரதேச காணிகளுக்கான அனுமதிப் பத்திரத்தை (பெர்மிட்) பெற்றுத்தருமாறு வவுனியா தமிழ் கிராம மக்கள் அமைச்சர் றிசாத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை வவுனியா தமிழ்க் கிராமங்களான மணிபுரம், பழைய மணிபுரம், சமயபுரம், கணேசபுரம், மலுக்காரமலை ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் கணேசபுர பாடசாலையில் அமைச்சர் றிசாத் பதியுதீனை அண்மையில் சந்தித்த போதே இக்கோரிக்கையை அவர்கள் முன் வைத்தனர்.அவர்கள் தொடர்ந்து தெரிவிக்கையில்

"நாங்கள் பல தசாப்தங்களாக வாழ்ந்து வரும் இந்தக் காணிகளுக்கு இன்னும் அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கவில்லை. காலத்துக்குக் காலம், தேர்தலுக்குத் தேர்தல், இங்கு வரும் அரசியல்வாதிகளிடம் நாம் எத்தனயோ முறை கெஞ்சியும், மன்றாடியும் கேட்டபோதும் எமக்கு எவரும் உதவுகின்றார்கள் இல்லை. இந்தக் காணிகள் எமக்கு சொந்தமாக்கப்படாததனால், நாம் வாழ்க்கையில் பல கஷ்டங்களை எதிர் நோக்குகின்றோம்.

உதவித் திட்டங்களைப் பெற முடியாத நிலை. வாழ்க்கையை ஸ்திரப்படுத்திக்கொள்ள சொந்தமாக வீடு பெற முடியாத நிலையில். கைசேதத்துடன் வாழ்ந்து வருகிறோம்.

வீட்டுத் திட்டத்திலும் நாம் புறக்கணிக்கப்படுகின்றோம். வவுனியாவுக்கு வடக்கே உள்ள தாண்டிக்குளம் பகுதியில், அண்மைய காலங்களில் குடியேறியோருக்கு அனுமதிப்பத்திரம் கிடைத்துள்ள போதும், எமக்கு மட்டும் ஏன் இந்தப் பாரபட்சம் என்று விளங்கவில்லை. இங்குள்ள பனை, தென்னை மரங்களின் வாழ்க்கைக் காலத்தை கணிப்பிட்டுப் பார்த்தால், எமது வரலாற்றுப் பூர்வீகம் நன்கு விளங்கும்.


நாங்கள் பயிர் செய்யும் வயல்களின் அடியிலே அதிசக்தி வாய்ந்த மின் இணைப்புக் கம்பிகளை பொருத்த மேற்கொண்டுவரும் முயற்சிகளை நாம் தடுக்க முடியாத நிலையில் இருப்பதற்குக் காரணம், காணிகள் எமக்குச் சொந்தமில்லாததே" என்றும் அமைச்சரிடம் கூறினர்.


இந்தப் பிரதேசத்தில் சுமார் 800 குடும்பங்கள் ஓலைக் கொட்டில்களில் வாழ்கின்றன. வீட்டுத் திட்டத்திலும் இவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். பாதைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அவற்றையும் புனரமைத்துத் தருமாறும் அமைச்சரிடம் கேட்டனர்.


இந்த கூட்டத்தில் அமைச்சர் றிசாத் கூறியதாவது,

காணி அனுமதிப்பத்திரம் தொடர்பில் சில படிமுறைகளை தாண்ட வேண்டி இருப்பதால் அதற்கான உரிய நடவடிக்கைகளை தாம் ஏற்கனவே எடுத்துள்ளோம்.

அத்துடன் மாகாண, பிரதேச சபைகளின் நிர்வாகத்தின் கீழேயே பாதை விடயங்கள் வருகின்ற போதும், அவர்களுடன் ஆலோசனை நடத்தி மத்திய அரசின் பங்களிப்பை பெற்றுத்தர நாம் நடவடிக்கை எடுப்போம். பாடசாலை குறைபாடுகளையும் முடிந்த வரையில் நிவர்த்தித்துத் தருவோம். குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் இதனைக் கொண்டு வந்து முறையான திட்டமொன்றை வகுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.(2-9)









வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகமும் கொக்காவில் இராணுவ தலைமையகமும் இணைந்து ஏற்பாடு செய்த வடக்கு மாகாண தேசிய வீரர்கள் தினம் நேற்றுக் காலை 9 மணியளவில் முல்லைத்தீவு கொக்காவில் பகுதியில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் இடம்பெற்ற போது... (படங்கள்:- மல்லாவி, பரந்தன் செய்தியாளர்கள்)

# அனைத்து இனங்களைச் சேர்ந்த மக்களும் முப்படையில் இணைக்கப்படல் வேண்டும்

## இதுவே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும் என்கிறார் வடக்கு மாகாண ஆளுநர்

(மல்லாவி)

**இலங்கை பொலிஸ் பிரிவில் அனைத்து இன மக்களும் கடமையாற்றுவது போன்று முப்படையிலும் அனைத்து இன மக்களும் இணைக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும் என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.**



வடக்கு மாகாண தேசிய வீரர்கள் தினம் நேற்று காலை 9 மணியளவில் முல்லைத் தீவு கொக்காவில் பகுதியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலந்து உரை யாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்நிகழ்வில் உயிர் நீத்த வீரர்களிற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதை அடுத்து, 2 நிமிடம் மௌன அஞ்சலியும் இடம்பெற்றது. முப்படையினர் மற்றும் பொலிஸார் இணை ந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர்,செயலாளர், அமைச்சின் செயலாளர்கள், மாவட்ட அரசாங்க அதி பர்கள், பிரதேச செயலாளர்கள், முப்படை உயரதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர்,

30 வருடங்களாக நாட்டில் நிலவிய யுத்தம் பல்லாயிரம் உயிர்களை காவு கொண்டதுடன், வடக்கில் பல்வேறுபட்ட இழப்புக்களை மக்களிற்கு கொடுத்திருந்தது.

இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதையே உயிரிழந்த வீரர்களின் கனவாக இருந்ததாகவும், அவர்களின் கனவிற்காக அனைத்து இனங்களும் ஒற்றுமைப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இலங்கை பொலிஸ் பிரிவில் அனைத்து இன மக்களும் கடமையாற்றுவது போன்று, முப்படையிலும் அனைத்து இனங்களும் இணைக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிப தியினுடைய எதிர்பார்ப்பாகும் என குறிப்பிட்ட அவர், பொலிஸ் பிரிவில் எவ்வாறு அனை த்து இனங்களும் தமது கடமைகளை ஆற்று வ்து போன்று விரைவில் முப்படைகளிலும் அனைத்து இனத்தவர்களும் கடமையாற் றும் வகையில் இணைக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டார். நேற்றையய நிகழ்வில் உயிர் நீத்த படையினரை வடக்கு மாகாண ஆளு நர் நினைவு கூர்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

நன்றியுரையை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வழங்கி இருந்தார். இந்நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளுக்கு வடக்கு மாகாண ஆளுநரினால் நினைவு பரிசில்கள்வழங்கப் பட்டதுடன் கிளிநொச்சிபாடசாலை ஒன்றின் 30 மாணவர்களுக்கு பாடசாலை புத்தக பையும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் இல ங்கை தேசிய கீதம் தமிழ் மற்றும் சிங்கள மொழி யில் பாடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (2-15-312)

# கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரவைகள் இன்மையால் பண்ணையாளர்கள் அவதி

## கிளிநொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் 90 வீதமான கால்நடைகள், திறந்த வெளிகளில் வைத்து பராமரிக்கப்படுகின்ற போதும் அவற்றுக்கான மேய்ச்சல் தரவைகள் இன்மையால் கால் நடைப் பண்ணையாளர்கள் பெரும் சிரமங் களை எதிர்கொண்டு வருகின்றனர் என கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத் தின் உதவிப்பணிப்பாளர் எஸ்.கௌரிதிலகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

"விவசாயத்தையும் கால்நடை வளர்ப் பையும் மிக முக்கிய வாழ்வாதாரமாகக் கொண்ட மாவட்டமாக கிளிநொச்சி மாவட் டம் காணப்படுகின்றது. கால்நடை வளர்ப்பை வாழ்வாதாரமாகக் கொண்ட கால்நடை பண் ணையாளர்கள் தமது கால்நடைகளை, பயிர்ச்செய்கை காலங்களில் பராமரித்துக் கொள்வதற்காக மேய்ச்சல் தரவைகள் இல்லாத நிலை காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண் டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகளும், 7 ஆயிரம் வரையான ஆடுகளும், 2 ஆயி ரத்திற்கும் மேற்பட்ட எருமை மாடுகளும் உள்ளன. இந்தக் கால்நடைகளை பயிர்ச் செய்கை காலங்களில் பராமரிக்கக் கூடிய மேய்ச்சல் தரவைகள் இல்லாத நிலையில் பண்ணை யாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

திறந்தவெளி மேய்ச்சல் தரவைகளில் வைத்து கால்நடைகளை பராமரிப்பதால் அதிகமான இலாபம் கிடைக்கும். மாறாக உள்ளக வளர்ப்பு முறைகளுக்கு பண்ணை யாளர்களை மாற்றுவதற்கு நீண்டகாலம் எடுக்கும். கிளிநொச்சி மாவட்டத்தில் மேய்ச் சல் தரவைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள் பயிர்ச்செய்கை நிலங்களாகவும் குடியிருப்பு நிலங்களாகவும் மாற்றப்பட்டுள்ளன. ஒவ் வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தலா 100 ஏக்கர் நிலம் மேய்ச்சல் தரவைக ளுக்கு ஒதுக்கப்பட வேண்டும். மேய்ச்சல் தர வைகளை இனங்கண்டு அவற்றை பெற்றுக் கொள்வதற்கு வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டு அவற்றை பெற்றுக் கொள்ள நடவடி க்கை மேற்கொள்ள வேண்டும் என்றார்.(2)

# 14ஆவது அனைத்துலக தமிழ் உரைநடை ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கத் தொடக்க நாள் விழா

(வற்றாப்பளை)

கரந்தைத் தமிழ்ச் சங்கமும் தமிழ் ஐயா கல்விக்கழகமும் நடத்தும் 14 ஆவது அனைத் துலக தமிழ் உரை நடை ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கம் தொடக்க நாள் விழா எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் வவுனியா பூந்தோட்டம் அர சினர் தேசிய கல்வியியற்கல்லூரியில் சப்ர கமுவ பல்கலைக்கழக மொழித்துறை, இணைப்பேராசிரியரும் இலங்கை அனைத் துலக உரை நடைத்தமிழ் மாநாடு இயக்குநர் பேராசிரியர் முனைவர் கனக சபாபதி நாகேஸ் வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக உயர் நீதிமன்ற நீதியரசர் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளார்.

சிறப்பு விருந்தினராக இந்தியத்துணைத் தூதுவர் ஏ.நடராஜன் கலந்து கொள்ளவுள் ளார். இதன்போது இரு நூல்கள் வெளியிடப் படும். அதனைத்தொடர்ந்து மாலை நிகழ்வு கள் இடம்பெறும்.

இந்நிகழ்வுகள் வவுனியா தேசிய கல்வியி யியற் கல்லூரி பீடாதிபதி கு.சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறும்.

இதன்போது தமிழ் உரை நடை மாநாட்டுக் கருத்தரங்கம், விவாத அரங்கம், ஐயம் தெளி அரங்கம் என்பன இடம்பெறும். கலை நிகழ்வு களாக இன்னிசை அரங்கம், பரதநாட்டியம் ஆகியன இடம்பெறும். (2)




# திருவிழா திருப்பலியும் மாபெரும் விளையாட்டும்

இரணைப்பாலை தூய பற்றிமா அன்னை ஆலயத் திருவிழாவும் மாபெரும் விளை யா ட்டு நிகழ்வும் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை நடைபெறும். காலை 6.45 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் அதனை தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகளாக ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியும் மரதன் ஓட்டப் போட் டியும் இடம்பெறும். பிற்பகல் மைதானப் போட்டிக்குப் இரவு பரிசில் வழங்கலும் இசை நிகழ்வும் இடம்பெறும். (2)

# SLEAS போட்டிப் பரீட்சைக்கான மாதிரி சம்பவக் கற்கை வினாக்கள்

*ஒரு 1 AB பாடசாலையில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை எவ்வித மாற்றமும் இன்றி அதனை ஒரு சம்பவக் கற்கையாக வழங்கப்படுகின்றது. இவை போன்ற பல சம்பவங்கள் உங்கள் பாடசாலையிலோ அல்லது நீங்கள் சந்தித்த அலுவலகங்களிலோ அல்லது உங்களுடைய வீடுகளிலோ நிகழ்ந்திருக்கலாம். அவற்றை நீங்களும் சுவையான ஒரு சம்பவமாக எழுதி விடய ஆய்வு ஒன்றைத் தயாரித்துப் பாருங்கள்.*



நடராஜா அனந்தராஜ்
B.A.(Hons.), M.A
Dip-In-Edu., Dip-In Jour
SLPS, SLEAS

தேன்தமிழ் கிராமத்தில் ஒரே ஒரு உயர்தர ஆண்கள் பாடசாலையான "நாவலர் இந்துக் கல்லூரி" அன்றும் வழமைபோன்று காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகிக் கலகலப்பாக வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆசிரியர்களும் எவரதும் அழுத்தத்தினால் அன்றித், தாமாகவே சுறுசுறுப்பாக செயற்பட்டுக் கொண்டிருந்தனர். அந்தக் கல்லூரி இலங்கை அரச படைகளினாலும், இந்தியப் படைகளினாலும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் அதன் சகல கட்டடங்களும், கல்வி உள்ளீடுகளும், பாடசாலை ஆவணங்களும் அழிக்கப்பட்டன. அந்தக் கல்லூரியின் ஆரம்ப வகுப்பில் இருந்து, உயர்தர வகுப்பு வரையுள்ள 28 வகுப்புக்களும் அருகாமையில் அமைந்துள்ள பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் தற்காலிக கொட்டகைகளிலும்,சில தனியார் வீடுகளிலும், மரநிழல்களின் கீழும் இயங்கிக் கொண்டிருந்தன.

அந்தக் கல்லூரியில் கடந்த பத்து வருடங்களாக இடம்பெற்ற அனர்த்தங்கள் மற்றும் கல்வித் திணைக்களத்தின் சில அதிகாரிகளினால் ஏற்படுத்தப்பட்ட புறக்கணிப்புக்கள், பௌதிக வளங்களின்மை, ஆசிரியர் பற்றாக்குறை போன்ற காரணங்களால், பாடசாலையின் விளைதிறன் குறைவடைந்து கொண்டு போனது. பல அதிபர்கள் இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை என இடமாறிச் செல்வதுமாக இருந்ததால், ஒரு உறுதியற்ற நிலையில பாடசாலையில் கல்வி அபிவிருத்தி மற்றும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் வீழ்ச்சிப் போக்குக் காணப்பட்டது. யுத்த காலத்தில் பல்வேறு அனர்த்தங்களைச் சந்தித்துக் கொண்டிருந்த நிலையில்,அந்தப் பாடசாலைக்கெனச் சேவையாற்றக் கூடிய அதிபர்களைத் தேடுவதே கடினமாக இருந்தது.

அந்த நேரத்தில், அயல் கிராமத்தில் உள்ள வேறு ஒரு உயர்தரப் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவரும், நாவலர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமான குணரத்தினம் என்பவர் அந்தப பாடசாலைக்கு அதிபராக வர விருப்பம் தெரிவித்து, கல்விப் பணிப்பாளருக்குக் கடிதம் எழுதியிருந்தார். அண்மையில் நடைபெற்ற கல்வி நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டதால், சில மாதங்கள் அதிபர் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற நடைமுறையின் காரணமாக நாவலர் இந்துக் கல்லூரிக்கு அதிபராக விண்ணப்பித்து நியமனம் செய்யப்பட்டார். அவருக்கு ஏற்கனவே அதிபராகக் கடமையாற்றிய அனுபவம் இல்லாத காரணத்தினால், அவரால் சுமுகமான நிலையில் அந்தப் பாடசாலையைக் கொண்டு நடத்த முடியாத நிலையில் பல சவால்களை எதிர்நோக்கினார். ஒரு பாடசாலையைக் கொண்டு நடத்துவதற்கான அடிப்படை வசதிகளையும், வளங்களையும் கொண்டிருக்காத 1 AB தரமுள்ள அந்தக் கல்லூரியை தனது காலத்திற்குள் பழைய நிலைக்குக் கொண்டுவருவதில் உள்ள இடர்பாடுகளை உணர்ந்த குணரத்தினம் அங்கிருந்து தானாகவே வெளியேறுவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார். அந்த நேரத்தில்தான் அவருடைய பிரதேசத்தில் இயங்கிய கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளருக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரப்பட்ட பொழுது, அந்தப் பதவிக்கு விண்ணப்பித்ததும் அவருக்கே அந்தப் பதவி கிடைத்தது. அவருக்கான பதவி உயர்வு கிடைத்ததைக் காரணமாகக் கூறிய குணரத்தினம் பழைய மாணவர் சங்கத்தினருக்கு அறிவிக்காமலேயே திடீரென அந்தக் கல்லூரியில் இருந்தும் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார். அதனால், ஏற்பட்ட நெருக்கடியான ஒரு சூழலில் சுமார் இரண்டு மாதங்கள் வரை அந்தக் கல்லூரிக்கு அதிபர் எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் அந்தப் பாடசாலையின் நிர்வாகச் செயற்பாடுகள் தளம்பல் நிலையை அடையத் தொடங்கியதால், பழைய மாணவர் சங்கத்தினரும், பாடசாலையின் பெற்றாரும் கவலையடையத் தொடங்கினார்கள். அவர்கள் எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும் அந்தக் கல்லூரிக்குப் பொருத்தமான ஒரு அதிபரைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாது போய்விட்டது.

அந்த நிலையிலேயே பல்கலைக்கழகப் பேராசிரியராகச் சமூகத்தில் நன்மதிப்புப் பெற்ற தமிழ்வேந்தனைத் தலைவராகக் கொண்டு செயற்பட்ட பழைய மாணவர் சங்கத்தினர் எடுத்த முயற்சியின் காரணமாக அயல் கிராமம் ஒன்றில் முதலாம்தர அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த சிவராஜா என்பவரை அணுகி, அவரை அதிபராக்குவதற்கான சம்மதத்தையும் பெற்றுக் கொண்டனர்.

அதற்கமைய கல்விப் பணிப்பாளரினால், சிவராஜா அந்தப் பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டுடன் அந்தப் பிரதேசத்தின் கொத்தணி அதிபராகவும் கடமையேற்றுக் கொண்டார். புதிய அதிபராகக் கடமையேற்ற சிவராஜாவும் அந்தப் பாடசாலையின் பழைய மாணவராக இருந்தவர் மட்டுமல்லாது, பாடசாலையின் இணைபபாட விதானச் செயற்பாடுகளான சாரணர் இயக்கம், விளையாட்டுத்துறை மற்றும கலை இலக்கியத் துறையிலும் தீவிரமாகப் பங்கு பற்றியிருந்த காரணத்தினால் அந்தக் கல்லூரியின் பாரம்பரியத்தையும், வழக்காறுகளையும், மரபுகளையும் நன்கு அறிந்து வைத்திருந்தார். அவர் அதிபராகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, அங்கே கடமையாற்றிய ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், பழைய மாணவர்களுடன் நல்ல உறவைப் பேணத் தொடங்கினார். அவர், எல்லோருடனும் அன்பாக இருந்த போதும், பாடசாலை வேலை நேரங்களில் சிறிது இறுக்கமான நிர்வாக முறைமைகளையும் கடைப்பிடிக்கத் தொடங்கினார். ஆயினும் கல்லூரியின் நலன்கருதி எடுத்துவரும் அவரது அந்தப் போக்கை ஆசிரியர்களும், உயர்தர வகுப்பு மாணவர்கள் உட்பட பாடசாலைச் சமூகத்தினரும் விரும்பி ஏற்றுக் கொண்டதால், அவருடன் சேர்ந்து எல்லோருமே கடுமையாக உழைக்கத் தொடங்கினார்கள். இதனால், மாணவர்களின் ஒழுங்கு கட்டுப்பாடுகளும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவைகளும் சிறப்பாக இருந்ததால், அக்கல்லூரியின் விளைதிறன்கள் மிக விரைவாக உயரத் தொடங்கின. அதேவேளை பழைய மாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், அந்தக் கிராமத்தில் சிறப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த விளையாட்டுக் கழகத்தின் இளைஞர்களும் தமது முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கத் தொடங்கினார்கள். அவர்களுடன் தோள் கொடுத்து உதவும் வகையில் எந்த நேரம் என்றாலும் பாடசாலைக்கு வருகைதந்து அதிபரையும் ஆசிரியரையும் ஊக்குவிக்கும் வகையில் பெற்றரும் செயற்பட்டதால், அந்தப் பாடசாலை அயலூரில் உள்ள வேறு பாடசாலைகளின் பெற்றாரினாலும் கவரப்பட்டது. இதனால் முன்னர் வேறு பாடசாலைகளில் கற்பதற்காக விலகிச்சென்ற மாணவர்களும் மீண்டும் அந்தப் படசாலையில் வந்து சேரத் தொடங்கினார்கள். அதேவேளை முன்னர் பாடசாலைக்கு வருகை தராமலும், இடைவிலகியும் சென்ற மாணவர்களின் வரவில் மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, மாணவர்களின் வரவும் 90 வீதத்திற்கு மேல் அதிகரித்துக் காணப்பட்டது.

சிவராஜா அதிபராகப் பொறுப்பேற்றபொழுது 800 மாணவர்களைக் கொண்டதாக இருந்த அந்தக் கல்லூரியில் அவர் பொறுப்பேற்ற ஆறு மதங்களுக்குள் 1400 மாணவர்களாக உயரத் தொடங்கியது. இதனால் ஏற்கனவே இடப்பற்றாக்குறை இருந்த நிலையில் சடுதியாக மாணவர்களின் தொகை இரு மடங்காக அதிகரித்து வந்ததால், மேலும் நெருக்கடிகளை அந்தக் கல்லூரி எதிர்நோக்கத் தொடங்கியது. இதனால் வகுப்பறைகளில் இடநெருக்கடி ஏற்படத் தொடங்கியதும், கல்லூரி ஆசிரியர்களுடன் கலந்துரையாடி அந்தப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். இது தொடர்பாக ஒழுங்கு செய்த ஆசிரியர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், பழைய மாணவர் சங்கத்தின் தலைவருக்கு இடப்பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிபரால் ஒரு கடிதம் அனுப்பபட்டது. அவரது வேண்டுகோளை ஏற்ற பழைய மாணவர் சங்கம் உடனடியாக ஒரு விசேட கூட்டத்தைக் கல்லூரியின் வகுப்பறை ஒன்றில் கூட்டியது. அந்தக் கூட்டத்திற்கு அதிபரும் அழைக்கப்பட்டிருந்தார். அதில் தலைவர் உரையாற்றும் பொழுது பின்வருமாறு குறிப்பிட்டார்.

"நாங்கள் இந்தக் கல்லூரியில் படித்த காலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிள்ளைகள் படித்தார்கள். எங்களுடைய முன்னாள் அதிபர் இராசதுரையின் காலத்தில் எங்களுடைய கல்லூரிதான் எல்லாத்துறையிலும் முன்னணி வகித்து வந்ததை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். அவருக்குப் பின்னர் வந்த ஒரு சில அதிபர்களைத் தவிர மற்றையவர்கள் நிலைத்து நிற்கவில்லை. பத்து வருடங்களுக்குள் ஏழு அதிபர்கள் வந்து போயிருக்கிறார்கள்.

இதனால் கல்வித் தரமும் வீழ்ந்து கொண்டு போனதுடன் பல பெற்றோர்களும் தங்களுடைய பிள்ளைகளை வேறு பாடசாலைகளில் சேர்க்கத் தொடங்கினார்கள். அதற்குப் பின்னர் பழைய மாணவர் என்ற வகையில் வேறு ஒரு பாடசாலையில் ஆசிரியராக இருந்த ஒருவரை இங்கு அதிபராக்கினோம். ஆனால் அவருக்கு அதிபராகக் கடமையாற்றிய அனுபவமின்மை காரணமாகவோ என்னவோ அவராலும் நின்று பிடிக்க முடியவில்லை. அவரும் மூன்று மாதத்தில் பதவி உயர்வு என்று கூறிக்கொண்டு கல்விக் கந்தோருக்குப் போய் விட்டார். அதனைத் தொடர்ந்து நல்ல ஒரு அதிபரைத் தேடிக் கொண்டிருந்த பொழுது தான் வேறு ஒரு பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த கல்வித் துறையில் நீண்ட அனுபவம் பெற்றிருந்த சிவராஜாவை அணுகி, அதிபராகப் பொறுப்பேற்க வருமாறு, பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொண்டதன் பேரில் அவரும் சம்மதம் தெரிவித்ததால், அவரை அதிபராகப் பெற்றிருக்கின்றோம். அவரை நியமித்துத் தந்ததற்காகக் கல்விப் பணிப்பாளருக்கு நன்றி கூறுகின்றோம். அவர் இங்கு வந்த ஐந்து மாதங்களுக்குள் கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளில் பாரிய முன்னேற்றம் ஏற்படத் தொடங்கி விட்டது. மீண்டும்பிள்ளைகளின்தொகை அதிகரிக்கத் தொடங்கியது. அவரும் இந்தக் கல்லூரியின் பழைய மாணவராக இருந்ததால், எங்களுடைய கல்லூரியின் பாரம்பரியம் மற்றும் வழக்காறுகள்,மரபுகள் என்பவற்றை நன்கு அறிந்து வைத்திருக்கின்றார்.இன்று பாடசாலையின் தேவைகள் பற்றி எங்களைக் கேட்டிருப்பதால் அவர் கேட்ட உதவிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இதுதொடர்பாக உங்களுடைய கருத்தையும் தெரிவியுங்கள்" என்று கூறி புதிய அதிபரை வரவேற்று, அவரால் கையளிக்கப்பட்ட கடிதத்தையும் வாசித்துக் காட்டினார். அங்கே சமூகமளித்திருந்த பழைய மாணவர்கள் மிகச் சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் பயிற்றப்பட்டவர்கள் என்பதால், தலைவரின் கருத்தை எல்லோரும் ஏகமனதாக ஏற்று பாடசாலையில் தற்காலிக வகுப்பறைகள் அமைப்பதற்கு முதற்கட்டமாக ஏழு இலட்சம் ரூபாய்களை வழங்குவது என்றும் பின்னர் தேவை அடிப்படையில் மிகுதிப்பணத்தையும் வழங்குவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

அன்றைய அந்தச் சந்திப்பு அதிபர் சிவராஜாவுக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்தது. மகிழ்ச்சியுடன் தனது, நன்றியைத் தெரிவித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்.இந்த விடயம் தொடர்பாகத் தனது பகுதித் தலைவர்களுக்கும் எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து, கல்விப் பணிப்பாளரிடம் அதற்கான அனுமதியையும் பெற்றுக் கொண்டார். அவர்களால் வழங்கப்பட்ட பணத்தைக் கொண்டு பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் சிரமதான உதவியுடன் 100 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்ட இரண்டு தற்காலிக வகுப்பறைகள் அமைக்கப்பட்டன.

பழைய மாணவர் சங்கத்தினரும்,பெற்றோரும் காட்டுகின்ற ஒத்துழைப்பினால் நெகிழ்ந்து போன அதிபர், பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைக்கும் தன்மையைப் பற்றி கல்விப் பணிப்பாளருக்கும் தெரிவித்த பொழுது, அவரும் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

சிவராஜா அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர்,கல்வித் திணைகள அதிகாரிகளும் அந்தப் பாடசாலையின் மீது அக்கறை காட்டத் தொடங்கினர்.இதனால் தனது சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்களையும்,பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும் அந்தப் பாடசாலைக்குச் சென்று உரிய ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்குமாறும் பணித்தார்.

முன்னைய அதிபர் இருந்த பொழுதும்,அந்தக் கல்லூரிக்கு அடிக்கடி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் வந்து போவார்கள். காலையில் 8.30 மணியளவில் வந்து தமது பாட ஆசிரியர்களுடன் சிறிது நேரம் கதைத்துக் கொண்டு இருந்துவிட்டு மு.ப.11 மணியளவில் பாடசாலையை விட்டு வெளியேறிவிடுவார்கள். ஆனால், அவர்களது நடவடிக்கையை எவரும் தட்டிக் கேட்பதில்லை. ஏனெனில் அவ்வாறு தட்டிக்கேட்கத் தொடங்கினால், கல்விப் பணிப்பாளருக்கு இல்லாததையும்பொல்லாததையும் சொல்லி அதிபருக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தி விடுவார்கள் என்ற அச்சம் காரணமாக எப்படியாவது அவர்கள் வந்துவிட்டுப் போகட்டும் என்று அதிபர்களும் மௌனமாக இருந்துவிடுவார்கள்.

(நாளை தொடரும்)

# என்னை நானே அடித்துக்கொள்ள வேண்டும்!

# மகிந்தவின் இராணுவப்பாதுகாப்பு நீக்கப்பட்டதை ஏற்கவே முடியாது

## கோத்தா குமுறல்



(கொழும்பு)

**சரத் பொன்சேகாவிற்கு இராணுவத் தளபதி பதவி வழங்கிய தன்னை தானே அடித்து கொள்ள வேண்டும் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து இராணுவ பாதுகாப்பு நீக்கப்பட்டமையை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.**

பாரிய ஊழல், மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிரசன்னமான போது, ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதியும், அவரது சகோதரருமான மகிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்டிருந்த இராணுவ பாதுகாப்பு நீக்கப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு பதிலளித்த கோத்தாபய ராஜபக்ஷ,

மகிந்த ராஜபக்ஷவிற்கு மாத்திரம் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும், உயிர் அச்சுறுத்தல் காரணமாக முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆனந்த சங்கரி, லக்ஷ்மன் கதிர்காமரின் மனைவி ஆகியோருக்கும் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததென அவர் சுட்டிக்காட்டினார். தொடர்ந்தும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கான அச்சுறுத்தல் நீடித்து வரும் நிலையில் அவரது பாதுகாப்பு நீக்கப்பட்டமை அநீதியானது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, பாதுகாப்பு செயலாளராக கோத்தபாய ராஜபக்ஷ கடமையாற்றிய போது, அவரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல் அவராலேயே திட்டமிடப்பட்ட ஒரு செயல் என முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ள கருத்து குறித்தும் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த கோத்தபாய ராஜபக்ஷ, இவ்வாறான கருத்து வெளியிடும் நபருக்கு இராணுவ தளபதி பதவி வழங்கிய தம்மை முதலில் அடிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (இ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பொற்றிலைப்பாவை/கையாந்தகரை/கரிசலாங்கண்ணி

**Botanical Name-** Eclipta prostata
**Family-** Asteraceae
**Sinh-** Kikirindi

இது சுமார் ஒரு அடி உயரம் வரைக்கும் வளரும். அடிவேரிலிருந்து சில தண்டுகள் செங்குத்தாகவும் வேறு சில பக்கம் நோக்கி படர்ந்தாற்போலவும் வளரும் ஒரு வகைச்செடி. இதில் சில தரையோடு ஒட்டிப் படர்ந்தும் வளரும். நல்ல பசுமை நிறக்கொடியாகையால் அழுத்தினால் நசுங்கும். செடிபூராகவும் ஒருவித சுணைகளிருக்கும். மெல்லிய காம்புகளில் ரம்பை வடிவ ஓரமுடைய நீள்கோள இலைகள் காணப்படும்.

கரிசலாங்கண்ணியில் நான்கு விதமுண்டு. வெள்ளைநிறமாக பூக்கும் செடி. இது சாதாரணமாக எளிதில் எங்கும் கிடைக்கும். இதை வேருடன் பிடுங்கி வேரால் பல் துலக்கலாம்.

நீலநிறம், சிவப்பு நிறம் உள்ள பூ பூக்கும் கரிசலாங்கண்ணியும் உண்டு. இலைகளை எங்கும் காணுவது அரிது. வளம் மிகுந்த மலைச் சாரல்களிலும் நதிகள், நீரோடைகளிலும்தான் மிகவும் அரிதாகக் கிடைக்கும்.

நான்காவதாக கூறப்படுவது மஞ்சள் நிறப்பூவையுடைய கரிசலாங்கண்ணி, இதைத்தான் பொறி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்ற 3 இனங்களைப் போல இது செடியாக வளராமல் கொடிபோல் படர்ந்து வளரும். மற்றைய இனங்களை விட மஞ்சள் கரிசலாங்கண்ணிக்குத்தான் மிகுந்த மருத்துவப்பயன்கள் உண்டு.

பொற்கொடியாகிய இதனை வேருடன் எடுத்து கொடி, இலை, பூ யாவும் பயன்படுத்தலாம். பொதுவாக இது கல்லீரல், மண்ணீரல், நுரையீரல், சிறுநீரகம் ஆகிய உறுப்புக்களில் வேலை செய்கிறது. இலைகளின் சுரப்பிகளைத் தூண்டி பித்தநீர், குருதி மற்றும் உடலுக்குத் தேவையான நீர்களை உற்பத்தியாக்கம் செய்கிறது. அந்தந்த உறுப்புக்களுக்கு சக்தியையும் ஊட்டத்தையும் அளிக் கிறது. அன்றியும் உடலில் இருக்கும் 7 உடற்கட்டுக்களை உரமாக்கி வலு வடையச் செய்து உயிரணுக்களை தேற்றி தங்கநிறம் போன்ற சருமத்தை உண்டாக்கும் குணமுடையது.

மஞ்சள் காமாலைக்கு கையாந்தகரை, தும்பையிலை, கீழாநெல்லி



இலைகளை சமமாக எடுத்து அரைத்து 5 கிராம் அளவு காலை, மாலை 7 நாட்கள் நோய் வன்மைக்கு ஏற்ப பசுவின் பாலில் எடுக்கவும். அல்லது கரிசலாங்கண்ணி இலைச்சாற்றில் 8 மில்லியில் தொடங்கி இரண்டாம் நாளில் 16 மில்லி. இப்படியாக நாளுக்கு நாள் 8 மில்லி ஆக அதிகரித்து 10 நாட்கள் வரை கொடுத்து வர வும். காமாலை நோய் நீங்கும்.

100 கிராம் இலையிலுள்ள

### சத்துக்கள்

புரதம்-4.4 கிராம், கொழுப்பு-0.8 கிராம், காபோவைதரேற்று-9.2கிராம்,கல்சியம்-306 மி.கிராம், பொஸ்பரஸ்-462 மி.கிராம், இரும்பு-8.9 மி.கிராம்.

5 கிராம் இலைய்யை வல்லாரை, கொத்துமல்லி, தேங்காய்ப்பூ சேர்த்து சட்னி செய்து அல்லது பல கீரையோடு சேர்த்துக் கூட்டுச் செய்து சோற்றுடன் சாப்பிட்டாலும் இரத்த விருத்தி உண்டாகும்.

கரிசாலை இலைகளை சுத்தம் செய்து சாறுபிழிந்து சம அளவு நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் சேர்த்து அடுப்பிலிட்டுக் காய்ச்சி தைலப்பதமாக வடிகட்டி சேகரித்து வைத்து தலைக்குத் தேய்த்துவர மயிர் கருமையாகவும் நன்கும் வளரும். தலைவலி, கண்ணெரிச்சல் தீரும்.

இலைகளைச் சுத்தப்படுத்தி வாயிலிட்டு மென்று பற்களைத் தேய்க்க் பல்நோய்கள் நீங்கி பற்கள் சுத்தமாகி வெள்ளை நிறம் பெறும்.

இதன் இலைச்சாற்றை படர்தாமரை, சொறி, சிரங்கு போன்றவற்றிற்கு பூசலாம்.

தீமைதரும் கண்மைகளுக்கு பதிலாக கரிசலாங்கண்ணியிலிருந்து கண்மை தயாரித்து பயன்படுத்தலாம். இது கண்களுக்கு குளிர்ச்சியையும் கண்பார்வையையும் தெளிவுறச் செய்யும். கண்ணெரிச்சல் நீங்கும்.

### கரிசலாங்கண்ணிகண்மை

கரிசலாங்கண்ணி இலைகளை சேகரித்து தண்ணீரில் சுத்தமாகக் கழுவி சாறுபிழிந்து ஒரு கிண்ணத்தில் வைத்துக்கொள்ளவும். இவ் இலைச்சாற்றில் மெல்லிய தூய்மையான வெள்ளைத்துணியை தோய்த்து காற்றில் உலர்த்தவும்.

உலர்ந்தபின் இதே துணியை மறுபடியும் கிணத்திலுள்ள காற்றில் தோய்த்து எடுத்து உலர்த்தவும். இவ்வாறு 5 முறை தோய்த்து உலர்த்திய துணியை நல்லெண்ணெய் விளக்கில் கரியாக்கி ஆமணக்கெண்ணெயில் குழைத்து வழித்து பத்திரப்படுத்தி கண்மையாகப் பயன்படுத்தலாம்.

கரிசலாங்கண்ணி இலைச் சாற்றை மோரில் சமபங்கு கலந்து அருந்த இரத்தச்சோகை குணமாகும்.

4 பங்கு கரிசலாங்கண்ணி சாற்றுக்கு 2 பங்கு பசுநெய் சேர்த்து அடுப்பிலிட்டுக் காய்ச்சி கற்கண்டு சேர்த்து காலை, மாலை ஒரு தேக்கரண்டி உண்ண மலச் சிக்கல், மூல நோய் நீங்கும்.

கரிசலாங்கண்ணி இலைச் சாறு எடுத்து அதிகாலையில் 30 மில்லி அளவுக்கு 48 நாட்கள் தொடர்ந்து எடுத்துவர பித்தப்பை கற்கள் கரையும்.

கரிசலாங்கண்ணி கீழா நெல்லி இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து அதில் மஞ்சள் தூள் சிறிது கலந்து அதிகாலையில் சாப்பிட்டால் மஞ்சள் காமாலை குணமாகும்.

கரிசலாங்கண்ணிச் சாற்றில் திப்பிலியை ஊறவைத்து உலர்த்தி பொடியாக்கி தினமும் காலை, மாலை இருவேளையும் 2 கிராம் அளவுக்கு சாப்பிட்டால் ஆஸ்துமா, இருமல் குணமாகும்.

கரிசலாங்கண்ணிச் சாற்றில் அதிமதுரத்தை ஊறவைத்து உலர்த்திப் பொடியாக்கி தினமும் காலை மாலை இருவேளையும் 2 கிராம் அளவுக்கு தேனில் குழைத்துச் சாப்பிட்டால் இருமல், புகைச்சல், தொண்டைக்கரகரப்பு நீங்கும்.

கரிசலாங்கண்ணியுடன் 2 கடுக்காய் தோலைத் தட்டிப்போட்டு குடிநீர் வைத்து 30 மில்லி எடுத்தால் மலச்சிக்கல் குணமாகும்.

கரிசலாங்கண்ணிச் சாற்றில் நெல்லி வற்றல், சீரகம் இரண்டையும் சம அளவு ஊற வைத்து உலர்த்திப் பொடியாக்கி தினமும் 2 கிராம் காலை மாலை சாப்பிட்டால் இளநரை மறையும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# முன்மாதிரியாக 5 வயதுச்சிறுவன்

(டொறண்டோ)

கனடா நாட்டில் ஏற்பட்ட காட்டுத்தீ விபத்தால் வீடில்லாமல் தவித்து வரும் பொது மக்களுக்கு 5 வயது சிறுவன் ஒருவன் சுமார் 3 இலட்சம் ரூபாய் நிதி திரட்டியுள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அல்பெர்ட்டா மாகாணத்தில் உள்ள ஃபோர்ட் மெக்முர்ரி என்ற நகருக்கு அருகில் உள்ள காட்டில் தீ விபத்து ஏற்பட்டு கடந்த ஒரு வாரமாக எரிந்து கொண்டு வருகிறது.

இந்த காட்டுத்தீ நகர மக்களையும் பாதித்துள்ளதால், ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடு, உடைமைகளை விட்டுவிட்டு அண்டை நகரங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

காட்டுத்தீயால் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு உதவும் வகையில் பல்வேறு தரப்பிலிருந்து நிதியுதவி கிடைத்து வருகிறது.

இந்நிலையில், ஒண்டாரியோ மாகாணத்தை சேர்ந்த அலெக்ஸாண்டர் டக் என்ற 5 வயது சிறுவனின் செயல் பொதுமக்களை நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (இ-5)

# அமெரிக்காவின் வியோமிங்கில் கரைபுரண்டோடும் பெருவெள்ளம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் வியோமிங் பிராந்தியத்தை நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஊடறுத்த புயலினால் அப்பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதோடு, வீடுகள் மற்றும் வீதிகள் என்பனவும் பெருமளவில் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக வியோமிங்கின் Fremont பகுதியில் அமைந்துள்ள வீதிகள் மற்றும் வீடுகள் பெருமளவில் சேதங்களுக்கு இலக்காகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் உள்ள விண்ட் நதியின் நீர்மட்டம் அதிகரித்தமையின் காரணமாக, மேலதிக நீர் வீதிகள் மற்றும் வீடுகளுக்குள் கரைபுரண்டோடியது. இதனால் அங்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பகுதியில் உள்ள மக்கள் தம் வீடுகளில் இருந்து வெளியேறி, பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தென் மத்திய வியோமிங் பகுதிகளில் நேற்று செவ்வாய்க்கிழமை வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், மக்கள் அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வீதிகளில் வெள்ள நீர் நிறைந்துள்ளமையை அடுத்து போக்குவரத்து பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதுடன், சில இடங்களில் வீதிகள் உடைவுற்றுள்ள நிலையில் சில விபத்து சம்பவங்களும் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அப்பகுதியில் பயணிக்கும் வாகன சாரதிகள் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும் தேசிய வானிலை ஆய்வு நிலையம் எச்சரித்துள்ளது. (இ-5)

# குழந்தைகளின் படங்களை பேஸ்புக்கில் பதிவு செய்தால் சிறைத் தண்டனை விதிப்பு

குழந்தைகளை புகைப்படம் எடுத்து, அதை சமூக வலைத்தளமான பேஸ்புக்கில் பதிவு செய்தால் சிறைத் தண்டனை அளிக்கப்படும் என பிரான்ஸ் அரசாங்கம் அறிவித்துள்ளது.

பேஸ்புக்கில் தங்களுக்கு பிடித்த விடயங்கள் அல்லது ஒரு செய்தியை பற்றிய தங்களுடைய கருத்துக்கள் ஆகியவற்றை பதிவு செய்வது என்பது போய், தன்னுடைய குடும்பப் புகைப்படங்கள், தங்களுக்கு பிறந்த பச்சிளம் குழந்தைகளின் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பேஸ்புக்கில் பதிவு செய்யும் பழக்கம் அநேகரிடம் உள்ளது.

மேற்கு நாடுகளில் இது இன்னும் அதிகம். ஆனால், அந்த நாட்டு அரசாங்கம் இதை சுலபமாக எடுத்துக் கொள்வதில்லை. குழந்தைகளின் தனிப்பட்ட உரிமைக்கு மதிப்பளிக்கிறார்கள். முக்கியமாக, பிரான்ஸ் நாட்டில் அதற்கு தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது.

அங்கு அநேக பெற்றோர்கள் தங்களது குழந்தைகள் செய்யும் வேடிக்கையான பல விடயங்களை வீடியோவாக எடுத்து பேஸ்புக்கில் பதிவு செய்கின்றனர். இது அந்த குழந்தையின் தனிப்பட்ட உரிமைகளை பாதிப்பதாக அந்த நாடு கருதுகிறது.

இதனால், தங்களுடைய குழந்தைகள் பற்றி அதிகமான, மோசமான புகைப்படங்களை பேஸ்புக்கில் பதிவு செய்யும் பெற்றோர்களுக்கு சிறைத் தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படும் என்று பிரான்ஸ் அரசாங்கம் எச்சரித்துள்ளது. (இ-5)

# ஜனாதிபதித் தேர்தலில் வன்முறை

## வாக்குச்சாவடிகள் சூறை; பத்துப்பேர் சுட்டுக்கொலை

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் நேற்றுமுன்தினம் தேர்தல் நடந்து கொண்டிருந்த போது வாக்குச்சாவடிகளை மர்ம நபர்கள் சூறையாடினர். இது தொடர்பாக நடந்த வன்முறையில் துப்பாக்கி ஏந்திய மர்ம நபர்கள் சுட்டதில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் ஜனாதிபதி மற்றும் 18ஆயிரம் பதவிகளுக்கான தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது. தலைநகர் மணிலா அருகே உள்ள புறநகர் பகுதியான ரோஸாரியோவில் வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன் திடீரென வன்முறை வெடித்தது. இதில 7 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதாக ரோஸாரியோ நகர முதன்மை பொலிஸ ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

கலவரத்தால் பாதிக்கப்பட்ட தெற்கு மாகாணமான மகுயின் டானாவோவில் உள்ள கிண்துலுகனில் உள்ள ஒரு வாக்குச் சாவடிக்குள் அரசியல்வாதிகளுக்கு இடையே மோதல் வெடித்தது. அப்போது ஒரு வாக்காளர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதே போல் தெற்கு மாகாணத்தின் முக்கிய நகரமான கோட்டா பேடோவில் உள்ள ஒரு சந்தைப் பகுதி மீது வன்முறையாளர்கள் கையெறி குண்டுகளை வீசியதில் ஒருவர் உயிரிழந்தார். அதன் அருகே உள்ள சுல்தான் குதாரத் நகரில் ஒரு வாக்குச்சாவடிக்குள் நுழைந்து 20இறகும் மேற்பட்டோர் வாக்குப்பதிவு இயந்திரங்களை சூறையாடி சென்றனர்.

வடக்கு மாகாணமான அப்ராவில் மேயர் வேட்பாளர்கள் பரஸ்பரம் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டதில் ஒருவர் உயிரிழந்தார். 2 பேர் படுகாயமடைந்தனர்.

எனினும் பிலிப்பைன்ஸ் முழுவதும் வாக்குப்பதிவு அமைதியாக நடந்திருப்பதாக அந்நாட்டு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸில் அரசியல் வன்முறை என்பது நீண்டகாலமாக தொடர்ந்து வருகிறது. துப்பாக்கி வைத்திருப்பதற்கு போதிய சட்டங்கள் இல்லாதது மற்றும் வாரிசு அரசியலே இத்தகைய வன்முறைகள் நிகழ்வதற்கு காரணம்என கூறப்படுகிறது. (இ-5)




# சிரியாவில் காற்பந்து விளையாடிய ஏழு வயது சிறுவன் சுட்டுக்கொலை

## ஐ.எஸ்.தீவிரவாதிகளின் வெறிச்செயல்

(பெய்ரூட்)

சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தனி நாடு உருவாக்கினார்கள். அங்கு கடுமையான சட்டங்களை விதித்தனர். தங்களது மதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை கொடூரமாக தண்டித்து வருகின்றனர்.

அண்மையில் சிரியாவில் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள ரக்கா நகரில் காற்பந்து விளையாடிய 7 வயது சிறுவனை பொதுமக்கள் முன்னிலையில் சுட்டுக்கொன்றனர்.

அவனது பெயர் முயாஷ் ஹசன். கடந்த 2 ஆம் திகதி ரக்கா நகரில் தனது நண்பர்களுடன் காற்பந்து விளையாடிக் கொண்டிருந்தான்.

எனவே மதத்துக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டதாக கூறி ஐ.எஸ். தீவிரவாதிகள் அவனை கைது செய்தனர்.

பின்னர் ஷரியா நீதிமன்றுக்கு அவனை இழுத்து சென்றனர்.

அங்கு நீதிபதி முன்பு நிறுத்தினர். குற்றச்சாட்டுகளை விசாரித்த நீதிமன்று சிறுவன் முயாஷ் ஹசனுக்கு மரண தண்டனை விதித்தது.

அவனை பெற்றோர் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் சுட்டுக்கொல்ல உத்தரவிடப்பட்டது.

அதைத் தொடர்ந்து அவன் துப்பாக்கி சுடும் அரங்குக்கு கொண்டு செல்லப்பட்டு, கூடி நின்று வேடிக்கை பார்த்த பொதுமக்கள் மத்தியில் ஈவு இரக்கமின்றி சுட்டுக்கொல்லப்பட்டான்.

முன்னதாக அலெப்போ நகரில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைக்கு உளவு பார்த்ததாக 2 இளைஞர்கள் சுட்டு படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கருணை காட்டவில்லை

# கடவுளுக்குத் தடை ஆணை கோரி நீதிமன்றத்தில் வழக்கு



கடவுள் தன்னிடம் சரியான கருணை காட்டவில்லை என்று கூறி இஸ்ரேலைச் சேர்ந்த ஒருவர், நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த சம்பவம் நடந்துள்ளது. இஸ்ரேலின் வடக்குப் பகுதியில் உள்ள ஹைஃபா நகரத்தைச் சேர்ந்த டேவிட் ஷோஷன் என்பவர், அந் நகர நீதவான் நீதிமன்றத்தில் கடவுளுக்குத் தடை ஆணை விதிக்கக்கோரி மனுத்தாக்கல் செய்தார்.

அதில், கடந்த சில வருடங்களாகக் கடவுள் தன்னிடம் கருணையற்ற முறையில் நடந்து கொண்டதாகவும், இதுகுறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறியிருந்தார். இதனால் கடவுளுக்கு எதிராகத் தடை ஆணை பிறப்பிக்கவும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார். அந்த கோரிக்கை நகைப்பிற்குரியது என்று கூறி நீதிமன்றம் அவரது மனுவைத் தள்ளுபடி செய்தது. (இ-5)

# இனக்காவலன் பிரபாகரன்



'வனக் காவலன் வீரப்பன், இனக் காவலன் பிரபாகரன்' என்ற வசீகரிக்கும் வசனங்கள் நாம் தமிழரின் மேடைகளில் எதிரொலிக்கின்றன.

'தமிழனின் வாக்கு தமிழனுக்கே' என சீமான் முன்வைக்கும் முழக்கத்தைப் பார்த்து, அதிர்ந்து கிடக்கின்றன திராவிடக் கட்சிகள்.

இதுவரையில் மாற்றத்தை முன்வைத்து தனித்துக் களமிறங்கும் கட்சிகளுக்கு மக்கள் ஆதரவு கொடுத்து வந்திருக்கிறார்கள். இந்தத் தேர்தலில் சீமானின் தமிழர் ஆட்சி முழக்கம் எடுபடுமா என்பதெல்லாம் கவனிக்கப்பட வேண்டியவை.

தேர்தல் பிரசாரங்களில் அவர் முன்னெடுக்கும் சில விடயங்களை ஆராய்ந்து சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை நிறுத்துவதற்கு முன்பு, பரவலாக இருக்கும் தமிழர் வாக்குகளை ஒன்று திரட்டும் முயற்சியில் இறங்கினார்.

அதன் ஒரு பகுதியாக, தலித் தலைவர்களான திருமாவளவனும், கிருஷ்ணசாமியும் அனைத்துத் தொகுதிகளிலும் போட்டியிடுவதில்லை. இவர்கள் போட்டியிடாத தொகுதிகளில் தலித் மக்களின் வாக்குகளைக் கவர்வதற்காக 20 தலித் வேட்பாளர்களை பொதுத் தொகுதிகளில் நிறுத்தியுள்ளார்.

'தமிழனுக்கு நீ வாக்கு போடவில்லை என்றால், என்னுடைய வாக்கு உன் மொழி பேசுபவனுக்குக் கிடையாது' என எச்சரிக்கிறார் சீமான்.

வட மாவட்டங்களில் பா.ம.க. வாக்குகளைக் கவர்வதற்காக 36 வன்னியர்களைக் களமிறக்கி இருக்கிறார். தேர்தல் பிரசாரத்தில், 'வீரப்பனுக்கு மணிமண்டபம்' என்ற சீமானின் கோரிக்கைக்கு வரவேற்புள்ளது.

வீரப்பனைப் பற்றி ஜெயலலிதா சில வார்த்தைகளைக் கூறியபோது, ராம்தாஸ் எதிர்ப்புக் காட்டவில்லை என்பதை தனக்குச்சாதகமாக்கிக்கொண்டு இருக்கிறார் சீமான்.

நகர்ப்புற பா.ம.க. வாக்குகளை அன்புமணி அறுவடை செய்யக் காத்திருக்கும் போது, கிராமப்புற வன்னியர்கள் மத்தியில், 'தமிழன்' என்ற முழக்கத்தைக் கொண்டு சேர்க்கிறார்.

இதன்மூலம், வட புலத்தில் வன்னியர் வாக்குகளை நாம் தமிழர் அறுவடை செய்யும் என உறுதியாக நம்புகிறார். அதிலும், நாடாளுமன்றத் தேர்தலில் விஜயகாந்தோடு ராமதாஸ் கூட்டுச் சேர்ந்து விட்டதால், தே.மு.தி.க-வை விமர்சிக்கும் தகுதியை பா.ம.க இழந்துவிட்டது என்ற அடிப்படையில் பிரசாரம் செய்கிறார்.

இதில், விஜயகாந்த்தை ரஜினி விமர்சித்ததையும் கடுமையாக எதிர்க்கிறார் சீமான்.

'நான் மராட்டி' என வெளிப்படையாகச் சொல்பவர் ரஜினி. அவரை எதிர்க்க விஜயகாந்த்துக்கு என்ன தகுதி இருக்கிறது?' எனப் பேசுவதன் மூலம் ரஜினி ரசிகர்களின் வாக்குகளையும் தன்பக்கம் திருப்ப முயற்சிக்கிறார் சீமான்.


தி.மு.க., காங்கிரஸ் கூட்டணியை, 'இன அழிப்பின் பங்காளிகள்' என்கிறார்.

'என் இனம் போரில் அழிந்த போது தூங்கினார் கருணாநிதி. என் இனம் நீரில் அழிந்த போது தூங்கினார் ஜெயலலிதா' என அவர் தாக்கிப் பேசும் போது விசில் பறக்கிறது.(இ-5)




## பிரதமர் மோடி எந்த ஊரில் பி.ஏ. தேர்வு எழுதினார்?

### ஆம் ஆத்மி புதிய கேள்வி





பிரதமர் நரேந்திர மோடி பி.ஏ., மற்றும் எம்.ஏ., பட்டங்களை பெற்றதற்கு ஆதாரமாக நேற்று முன்தினம் பா.ஜ.க. தலைமை வெளியிட்ட ஆவணங்களில் அவரது டிகிரி சான்றிதழ்களில் பெயர் மற்றும் ஆண்டுகளில் மாற்றம் காணப்படுவதை சுட்டிக் காட்டிய ஆம் ஆத்மி கட்சி, எந்த ஊரில் மோடி பி.ஏ. தேர்வை எழுதினார்? என கேள்வி எழுப்பியுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி பெற்ற கல்லூரி பட்டங்கள் பற்றி டில்லி முதலமைச்சர், ஆம்ஆத்மிகட்சிதலைவருமான அரவிந்த் கெஜ்ரிவால், மத்திய தகவல் ஆணையத்திடம் கேள்வி எழுப்பி இருந்தார்.

இந்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக மோடிக்கு டில்லி பல்கலைக் கழகம் அளித்த பி.ஏ. பட்டம் மற்றும் குஜராத் பல்கலைக் கழகம்அளித்தஎம்.ஏ. பட்டத்தை டில்லியில் நேற்று முன்தினம் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது பா.ஜ.க. தலைவர் அமித்ஷா, மத்திய அமைச்சர் அருண் ஜெட்லி பகிரங்கமாக வெளியிட்டனர். கல்விச் சான்றிதழ் களின் நகல்களையும்வெளியிட்டனர்.

ஆனால், இந்த சான்றிதழ்கள்அனைத்தும்போலியாக உருவாக்கப்பட்டவை என ஆம் ஆத்மி செய்தி தொடர்பாளர் அசுடோஷ் குற்றம்சாட்டியுள்ளார். இது தொடர்பாக, டில்லியில் நிருபர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது,

மோடியின் பி.ஏ. டிகிரி மதிப்பெண் பட்டியலில் கல்வியாண்டு 1977 என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பட்டச் சான்றிதழில் படிப்பை 1978 ஆம் ஆண்டு படித்து முடித்ததாக காட்டுகிறது. அவரது எம்.ஏ. டிகிரி பட்டச் சான்றிதழில் மாணவர் சேர்க்கை எண் குறிப்பிடப்படவில்லை. இது மிகப்பெரிய முரண்பாடாகவுள்ளது.

1975 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட கல்விச் சான்றிதழுடன் கூடிய மதிப்பெண் பட்டியலில் அவரது பெயர் நரேந்திர குமார் தாமோதர தாஸ் மோடி என்று காணப்படுகிறது. 1976 ஆம் ஆண்டில் நரேந்திர தாமோதரதாஸ் மோடி என்றும் உள்ளது. இதற்கான அத்தாட்சி உறுதி மொழி பத்திரத்தை (அபிடவிட்) தாக்கல் செய்யாமல் ஒரு பெயரின் ஒரு பகுதியை திடீர் நீக்கம் செய்ய முடியாது.

நாட்டில் அவசரநிலை சட்டம் (மிசா) நடைமுறையில் இருந்த (1975-1977) காலகட்டத்தில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்துவந்ததாக மோடி ஏற்கனவே பலமுறை கூறியுள்ளார். 1977 ஆம் ஆண்டில் பி.ஏ. பட்டம்பெற்றதாக கூறும் அவர், அப்போது எந்த ஊரில் உள்ள தேர்வு மையத்தில் பரீட்சை எழுதினார்? என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

மோடியின் கல்வித்தகுதி தொடர்பாக கேள்வி எழுப்பிய அரவிந்த் கெஜ்ரிவால் நாட்டு மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என கூறுவதை விட்டுவிட்டு, இதைப்போன்று மோசடியாக தயாரிக்கப்பட்ட போலி ஆவணங்களை வெளியிட்டதற்காக மக்களிடம் அமித்ஷாவும், அருண் ஜெட்லி யும் தான் மன்னிப்பு கேட்க வேணடும். ஏனென்றால், அமித்ஷா மற்றும் மோடியின் கடந்த காலம் என்ன? என்று இந்த நாட்டுக்கே தெரியும். (இ-5)

# இலங்கை அகதிகள் மறியல் போராட்டம்

## உதவித்தொகை வழங்கக்கோரி

**இந்தியாவின் ரமத்தி வேலூர் அருகே பரமத்தி இலங்கை அகதிகள் முகாமில் கடந்த இரண்டு மாதங்களாக உதவித்தொகை வழங்காததைக் கண்டித்து, அகதிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பரமத்தி - திருச்செங்கோடு வீதியை மறித்து திடீரென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

நாமக்கல் மாவட்டத்தில் வலையப்பட்டி அருகே மேட்டுப்பட்டியில் ஓர் இலங்கை அகதிகள் முகாமும், பரமத்தி வேலூர் அருகே பரமத்தியில் ஓர் இலங்கை அகதிகள் முகாமும் உள்ளது.

பரமத்தி இலங்கை அகதிகள் முகாமில் 400இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 2000இற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இந்த இலங்கை அகதிகள் முகாமில் வசிக்கும் குடும்பத் தலைவர்களுக்கு 1000 ரூபாவும் (இந்திய ரூபா), 12 வயதுக்கு மேற்பட்டோருக்கு 750 ரூபாவும், 12 வயதுக்குக் கீழ் உள்ளவர்களுக்கு 450 ரூபாவும் மாத உதவித்தொகையாக வழங்கப்படுகின்றன.

இந்த உதவித்தொகையை கடந்த இரண்டு மாதங்களாக வழங்காதது குறித்து முகாமைச் சேர்ந்தோர் வருவாய் ஆய்வாளர் மாயவனிடம் கேட்டுள்ளனர். அவர் உரிய பதில் கூறவில்லையாம். இதையடுத்து, பரமத்தி - திருச்செங்கோடு வீதியில் திடீர் மறியலில் இலங்கை அகதிகள் ஈடுபட்டனர்.

தகவலறிந்த பரமத்தி வேலூர் வட்டாட்சியர் லோகநாதன் நிகழ்விடத்துக்கு வந்து இலங்கை அகதிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். இதில், ஒரு மாத உதவித்தொகை உடனடியாக வழங்கப்படும் எனவும், எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் மற்றொரு மாத உதவித்தொகை வழங்கப்படும் எனவும் கூறினார் என தமிழக ஊடகமான தினமணி செய்தி வெளியிட்டுள்ளது.

இதையடுத்து, வீதி மறியலைக் கைவிட்டு இலங்கை அகதிகள் கலைந்து சென்றனர். மறியலால், சுமார் 30 நிமிடம் பரமத்தி - திருச்செங்கோடு வீதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. (இ-5)

## கடைசி மூச்சு வரை இங்கே இருப்பேன்

### சோனியா காந்தி பேச்சு

இந்தியாவில் தான் எனது கடைசி மூச்சு வரை இருப்பேன என காங்கிரஸ்தலைவர் சோனியா காந்தி பேசியுள்ளார். திருவனந்தபுரத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற காங்கிரஸ் தேர்தல பிரசாரக கூட்டத்தில் சோனியா காந்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் மேலும் பேசுகையில், இப்போது நான் பேசுவது அர சியல் அல்ல. எனனைப்பற்றிதனிப்பட்டமுறையில் பிரதமர் மோடி கூறி வரும் கருததுக்கு பதில் கூற விரும்புகிறேன.

என்னை இத்தாலிக்காரர் என மோடி அடிக்கடி கூறுகிறார. ஆம், நான் பிறந்தது இத்தாலியில்தான்.எனக்கு அங்கே 93 வயதில் தாய் இருக்கிறார். இதை நான் மறைக்கவில்லை. ஆனால், 1968இல் என் றைக்கு இந்திரா காந்தியின் மருமகளாக இந்தியாவுக்கு வந்தேனோ அன்றிலிருந்து இன்று வரை 48 ஆணடுகள் இந்தியப் பெண்ணாகவே வாழ்ந்து வருகிறேன். (இ-5)

## 'வாக்கிற்கு பணம் வாங்கமாட்டோம்' ஒருகோடி தமிழகமக்கள் உறுதிமொழி

தமிழக சட்டமன்றத் தேர்தல் எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெற உள்ள நிலையில், இதற்கான ஏற்பாடுகளை தமிழக தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது. இதற்கமைவாக 'வாக்கிற்கு பணம் வாங்க மாட்டோம்' என்று வாக்காளர்களை உறுதிமொழி ஏற்கச் செய்யும் செயற்றிட்டமொன்றையும் முன்னெடுத்துள்ளது. இதில் சுமார் ஒரு கோடிப் பேர் வரை நேற்று உறுதிமொழி ஏற்றுள்ளதாக கூறப்படுகின்றது.

மின்னணு எந்திரங்களை தயார்படுத்துதல், அதிகாரிகளுக்கு பயிற்சி கொடுத்தல், பாதுகாப்புக்கு 30 ஆயிரம் துணை நிலை இராணுவத்தினரை வரவழைத்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளும்தமிழக தேர்தல்ஆணையத்தினால்முடிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் வாக்காளர்களுக்கு பணம்கொடுப்பது இந்ததடவை அதிக அளவில் நடைபெற வாய்ப்பு இருப்பதாக தலைமை தேர்தல் அலுவலகத்திற்கு பல்வேறு தரப்பிடம் இருந்து புகார் வந்துள்ளன. இதனைக் கருத்திற் கொண்ட தேர்தல் ஆணையம் ஆயிரக்கணக்கான தேர்தல் கண்காணிப்புக் குழுக்களை அமைத்துள்ளது.

இதற்கிடையே வாக்காளர்களை 100 சதவீதம் வாக்களிப்பில் ஈடுபடச் செய்யவும், எந்த கட்சியிடமும் பணம் பெறாமல் வாக்களிக்கச் செய்யவும் தமிழ்நாடு முழுவதும் விழிப்புணர்வு பிரசாரத்தை தேர்தல் அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது. இதில தேர்தல் அதிகாரிகள் உருவாக்கிய 'வை ராஜா மை', 'மிஸ்டு கால்' போன்ற பிரசாரங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக 'வாக்கிற்கு பணம் வாங்க மாட்டோம்' என்று வாக்காளர்களை உறுதிமொழி எடுத்துக் கொள்ளச் செய்யும் புதிய நடவடிக்கையை மேற்கொள்ள தலைமை தேர்தல் அலுவலகம் திட்டமிட்டது.

அதன்படி நேற்று முற்பகல் 10 மணிக்கு தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிகளிலும் வாக்காளர்கள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.(இ-5)




# நேர்மை உயர்வு தரும்



...பணப்பை கிடைத்துவிட்டது, பணமும்சரியாக இருந்தது, இப்போ ஏன் இவனுக்கு சன்மானம் கொடுக்க வேண்டும். சன்மானம் கொடுக்காமல் தப்பிக்க என்ன செய்யலாம் என்று யோசித்தார் சோமன்.

கெட்ட மனம் கொண்ட சோமன் பூபாலனைப் பார்த்து 'நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய், நான் என்னுடைய பையில் வைர மோதிரம் ஒன்றையும் வைத்திருந்தேன். அது காணவில்லை. மரியாதையாக கொடுத்து விடு, உன்னை சும்மா விட மாட்டேன்' என்று கத்தினான்.

பூபாலனுக்கு ஒன்றுமே புரியவில்லை, ஒருவேளை இவர் சொன்னது போல் வைர மோதிரம் இருந்து தொலைந்து போயிருக்குமா, நாம் தான் எடுக்கவில்லையே இவரிடம் சன்மானம் வாங்குவதைவிட பிரச்சினையில் இருந்து தப்பிக்கலாம் என்று யோசித்தார்.

சோமனோ விடாமல் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தார். பூபாலன் பணப்பை கொண்டு வந்த செய்தியை ஊராருக்கு சொன்ன கடைக்காரர், கஞ்சப்பயல் சோமன் அப்படி என்னத்தான் பரிசு கொடுக்கப் போறான் என்று பார்ப்போம் என்று அனைவரையும் அழைத்து வந்தார். வந்த இடத்தில் பூபாலன் குற்றவாளி போல நிற்பதை கண்ட ஊரார் சோமனை சும்மா விடக்கூடாது, இந்த பிரச்சினையை மரியாதை ராமனிடம் தான் கொண்டு சென்று தீர்ப்பு கேட்க வேண்டும் என்று சொன்னார்கள்.

சிறிது நேரத்தில் சோமன், பூபாலன், ஊர்மக்கள் அனைவரும் மரியாதை ராமன் முன்னால் போய் நின்றார்கள். சோமன் தான் பணப் பையையும், அதில் இருந்த வைர மோதிரம் தொலைத்த கதையையும், பூபாலன் தான் பணப்பை கண்டு பிடித்த கதையையும் சொன்னார்கள்.

ஏற்கனவே சோமன் அறிவித்த தண்டோரா பற்றி மரியாதை ராமனுக்கு தெரியும். 'அப்போ தண்டோரா போடும் போது வைரமோதிரம் பற்றி ஒன்றும் சொல்லாததும் தெரிந்தது தான்.

ஆக மொத்தம் சோமன் ஏமாற்றுகிறான் என்பதை புரிந்துகொண்ட மரியாதை ராமன், சோமனுக்கு சரியான தண்டனை கொடுக்க நினைத்து இவ்வாறாக தீர்ப்பு கூறினார் 'சோமன் தொலைத்த பையில் பணமும், வைர மோதிரமும் இருந்தது என்று அவரே சொல்லியிருக்கிறார். இப்போது பூபாலன் கொண்டு வந்த பையில் பணம் மட்டுமே உள்ளது.

ஆக இது சோமனின் பையே இல்லை, வேறு யாரோ தொலைத்த பை. அப்படி தொலைத்தவர் இது வரை யாரும் புகார் கொடுக்கவில்லை, அவ்வாறு யாரும் புகார் கொடுக்காதவரை நம்ம ஊரு வழக்குப்படி கிடைத்த பணத்தில் 10 பங்கு அம்மன்கோயிலுக்குக் கொடுத்து விட்டு, மீதியை எடுத்தவரே வைத்துக்கொள்ளலாம்.

ஆக பூபாலன் அந்த பணத்தை தன் சொந்த உபயோகத்துக்கு வைத்துக்கொள்ளலாம், சோமனின் பணம் மற்றும் வைர மோதிரம் கொண்ட பையை கண்டுபிடித்தவுடன் சோமனே சன்மானம் கொடுப்பார், சபை கலையலாம்.'

மரியாதை ராமன் தீர்ப்பு சொன்னதும் சோமனுக்கு இதயமே நின்று போனது போல் ஆகிவிட்டது.

பூபாலன் கிடைத்த பணத்தில் 10 சதவீதம் அம்மன் கோயிலுக்கு கொடுத்துவிட்டு, மீதியை தன் சொந்த ஊருக்கு கொண்டு சென்று தொழில் செய்து நலமாக வாழ்ந்து வந்தார்.

(முற்றும்)




- 1502 - கொலம்பஸ் தனது கடைசியும் கடைசியுமான கடற் பயணத்தை மேற்கிந்தியத் தீவுகளுக்கு ஆரம்பித்தார்.
- 1812 - லண்டனில் நாடாளுமன்றத்தில் வைத்து பிரதமர் ஸ்பென்சர் பேர்சிவல் ஜோன் பெல்லிங்ஹம் என்பவனால் கொலலப்பட்டார்.
- 1857 - இந்தியக் கிளர்ச்சி, 1857: இந்தியப் புரட்சியாளர்கள் டில்லியை பிரித்தானியர்களிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1867 - லக்சம்பேர்க் விடுதலை அடைந்தது.
- 1891 - ஜப்பானில் பயணம் மேற்கொண்டிருந்த ரஷய மன்னர் இரண்டாம் நிக்கலாஸ் கொலை முயற்சி ஒன்றில் இருந்து தப்பினார்.
- 1905 - அல்பேர்ட் ஐன்ஸ்டீன் பிரௌனியன் இயக்கம் பற்றிய தனது விளக்கத்தை வெளியிட்டார்.
- 1924 - மெர்சிடிஸ்-பென்ஸ் நிறுவனம் காட்லீப் டைம்லர், கார்ல் பென்ஸ் ஆகியோரினால் ஆரம்பிக்கப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் அலூசியன் தீவுகளின் அட்டு தீவைக் கைப்பற்றினர்.
- 1949 - சியாம் நாடு தாய்லாந்து எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1949 - ஐக்கிய் நாடுகள் அவையில் இசுரேல் இணைந்தது.
- 1953 - டெக்சாசில் இடம்பெற்ற சூறாவளியில் 114 பேர் உயிரிழந்தனர்.
- 1960 - முதலாவது கருத்தடை மாத்திரை அறிமுகமானது.
- 1985 - இங்கிலாந்தில் உதைப்பந்தாட்ட போட்டியொன்றில் அரங்கில் இடம்பெற்ற தீயினால் 56 பார்வையாளர்கள் கொல்லபபட்டனர்.
- 1987 - முதலாவது இதய மாற்றுச் சத்திர சிகிச்சை மேரிலாந்தில் நடத்தப்பட்டது.
- 1997 - ஐபிஎம் இன் ஆழ் நீலக் கணினி முதன் முதலாக காரி காஸ்பரவை சதுரங்க ஆட்டத்தில் தோற்கடித்தது.
- 1998 - இந்தியா பொக்ரானில் மூன்று அணுச் சோதனைகளை நடத்தியது.

**பிறப்புக்கள**

- 1895 - ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி இந்தியத் தத்துவஞானி. (இ. 1986)
- 1897 - சுத்தானந்த பாரதியார், கவியோகி. (இ. 1990)
- 1897 - ஜார்ஜ் பீட்டர் மர்டாக், மானிடவியலாளர். (இ. 1985)

**இறப்புகள்**

- 1976 - அல்வார் ஆல்ட்டோ, பின்லாந்து கட்டிடக்கலைஞர். (பி. 1898)

### சுத்தானந்த பாரதியார்
**கவியோகி**



சுத்தானந்த பாரதியார் என பின்னாளில் அழைக்கப்பட்ட வேங்கட சுப்பிரமணியன் பனையூரைச் சொந்த ஊராகக்கொண்ட சிவிகுல ஜடாதரய்யர் காமாட்சி அம்மையார் இணையரின் நான்காவது குழந்தையாக 1897 மே 11 இல் தமிழ்நாடு சிவகங்கையில் பிறந்தார். ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது தான் "பாரத சக்தி" எனும் மகா காவியத்தைப் பாடத்துவங்கினார். இவர் இயற்றிய நூல்களில் யோகசித்தி, கீர்த்தனாஞ்சலி, மேளராகமாலை ஆகிய கவிதை நூல்கள் பிரபலமானவை. சுத்தானந்த பாரதியார் (மே 11, 1897 - மார்ச் 7, 1990) கவியோகி, மகரிஷி என்று போற்றப்பட்டவர் ஆவார். இவர் கவிதைகள், தமிழிசைப் பாடல்கள், உரைநடை நூல்கள், மேடை நாடகங்கள் எனப் பல நூல்களை இயற்றியவராவார். திருக்குறளை அதே ஈரடிகளில், அதே நடை, சந்தத்தில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் சுத்தானந்த பாரதியார், 1968 ஆம் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில், அப்புத்தகம் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த பதிப்பு கழகத்தாரால் வெளியிடப்பட்டது. 1984 தமிழக அரசும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகமும் நிறுவிய முதல் ராஜராஜன் விருதைப் (மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பெரும் பரிசு) பெற்றார் கவியோகி சுத்தானந்த பாரதி. அவர் எழுதிய ஆயிரக்கணக்கான நூல்களில், "பாரத சக்தி மகாகாவியம்" அவர், சுதந்திரம் கிடைக்கும் வரை பாண்டிச்சேரி அரவிந்தர் ஆசிரமத்தில் ஏறத்தாழ 20 ஆண்டுகள் மௌன விரதம் காத்தபோது மனதில் தோன்றிய காவியம் ஆகும். சோவியத் கீதாஞ்சலி என்னும் நூல் சோவியத் ஒன்றியத்தின் சோவியத் நாடு நேரு நினைவுப் பரிசு பெற்றது. தமிழின் வரலாற்றில் சிறப்பாக தொண்டாற்றிய இவர், தமது தொண்ணூற்று இரண்டாம் அகவையில் காலமானார்.

# நாட்டின் விவசாய பொருளாதாரத்தை நல்லாட்சி அரசு சீர்குலைத்துள்ளது

## மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு



(கொழும்பு)

**நாட்டின் விவசாய பொருளாதாரத்தை நல்லாட்சி அரசு எனக்கூறும் அரசாங்கம் சீர்குலைத்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.**

மக்களை தாக்கியோ அவர்களை இழிவுபடுத்தியோ நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது எனவும் பெரும்பான்மையான மக்கள் தற்போது தாங்கள் ஏமாற்றப்பட்டதாகவே உணர்கின்றார்கள் என அவர் தெரிவித்தார்.

நாட்டின் விவசாயத்துறைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதனையும் செய்யவில்லை என்றால் அது பற்றி தாம் ஆச்சரியமடையப் போவதில்லை என்ற போதிலும் ரஜரட்டவைச் சேர்ந்தவர் விவசாய அமைச்சராக இருந்த போதிலும் விவசாயிகள் உதாசீனம் செய்யப்படுவதே வருத்தமளிக்கின்றது என அவர் தெரிவித்தார்.

தாம் ஆட்சியிலிருந்த காலத்தில் உணவுப் பற்றாக்குறைக்கு தீர்வு வழங்கப்பட்டது ஆனால் தற்போதைய அரசாங்கம் நாட்டின் விவசாயத்தை மிகவும் மோசமான முறையில் சீர்குலைத்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-5)

# அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சிகள் வெற்றியளிக்காது

## அமைச்சர் ராஜித

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் எந்தவொரு முயற்சியும் வெற்றியளிக்கப் போவதில்லை என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அலரிமாளிகையில்நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தினை கவிழ்ப்பதற்கு பல்வேறு தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் அரசாங்கத்தினை கவிழ்ப்பதே சிலரின் நோக்கமாகவும் உள்ளது.

ஆனால் அரசாங்கத்தினை கவிழ்ப்பதானது அனைவரினதும் கனவு மாத்திரமே என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)



# வெளிநாட்டு மாஃபியாக்கள் முடக்கப்படுவர்-அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மாஃபியாக்களை முடக்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த பணிப்பெண்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து சவுதி அரேபிய அதிகாரிகளுடன் தாம் கலந்துரையாடியுள்ளதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இதன்போது சவுதி அரேபியாவில் தொழில்புரியும் இலங்கை பணிப்பெண்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினையை தீர்ப்பதற்கு புதிய கட்டமைப்பொன்றை உருவாக்குவது தொடர்பில் தாம் விடயங்களை முன்வைத்ததாக அவர் கூறியுள்ளார்.

பணிப்பெண்கள் இவ்வாறான பிரச்சினையை எதிர்நோக்குவதற்கு, சில வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களே காரணம் என சவுதி அரேபிய அதிகாரிகள் கூறியதாகவும் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாஃபியா வலையமைப்பு மற்றும் அதில் உள்ளவரகளை சமாளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து சவுதி அரேபியாவும் இலங்கையும் இணங்கியுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# ஜனாதிபதி - சம்பந்தன் நீண்ட நேரம் உரையாடல்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனுடன் நேற்று முன்தினம் நீண்டநேரம் உரையாடியுள்ளார்.

நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவின் புதல்வரது திருமண வைபவம் நேற்று முன்தினம் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்த திருமண வைபவத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பாரியார் சகிதம் கலந்துகொண்டார்.



இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ,அமைச்சர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, வஜிர அபேவர்தன, விஜித் விஜயமுனி சொய்சா, பாலித ரங்கே பண்டார, நிமால் சிறிபால டி சில்வா, திருமதி விஜயகலா மகேஸ்வரன் உட்பட பெருமளவானோர் பங்கேற்றிருந்தனர்.

முற்பகல் 11 மணியளவில் திருமண வைபவத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு அருகில் சென்று அமர்ந்துகொண்டார்.

இந்த வைபவத்திலேயே நீண்டநேரம்இருவரும்உரையாடியுள்ளனர். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### நீங்கள் கவரிமானினமா?

கவரிமான் என்று ஒருவகை மான் சங்க காலத்தில் வாழ்ந்து வந்ததாம். இதன் உடலில் இருந்து ஒரு முடி உதிர்ந்து விட்டால் கூட உடனே தன் உயிரை விட்டு விடுமாம். நம்மில் பலர் இப்படி இருக்கிறார்கள்.

இவர்களால் ஒரு கடுஞ்சொல்லைக் கூடத் தாங்க முடியாது. ஏற்படும் அவமானத்தை இவர்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள்.

இது வியக்கக் கூடிய அல்லது போற்றக் கூடிய அல்லது இந்தக் காலத்திற்குச் சரிப்பட்டு வரக் கூடிய பண்பே அல்ல.

இவர்களை ஒரு சொல் சொல்லி விட்டால் கூட அன்று பூராவும் மூடவுட்டாகி உட்கார்ந்து விடுவார்கள். ஒரு வேலையும் ஓடாது. சாப்பிடமாட்டார்கள், பேச மாட்டார்கள்,புன்னகை பறந்தோடிவிடும். சித்த பிரம்மை பிடித்தவர்கள் போல் ஆகிவிடுவார்கள். இத்தகைய இயல்பு உடையவர்கள் பெண்களாக இருந்து விட்டால் போதும்,அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுவார்கள். மூன்று நாட்களுக்கு முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வார்கள். சம்பந்தப்பட்டவர்களே வந்து சமாதானம் கூறினாலொழியச் சமனிலைக்கு சாமானியத்தில் வர மாட்டார்கள். தங்களின் மன அமைதியைக் கெடுத்துக் கொள்வதோடு மற்றவர்களுக்கும் நிம்மதி இல்லாமல் செய்து விடுவார்கள்.

ஆண்களாக இருந்து விட்டால் சிலர் பழிவாங்குவது என்ற நிலைவரை போய்விடுவார்கள்.

பரபரப்பும்,சுயநலப் போக்கும் மிகுந்து விட்ட இந்தக் காலத்தில் மேற்கூறிய பண்புகளும் மன நிலைகளும் ஒருக்காலும் சரிப்பட்டுவராது. இந்த மாதிரியான விடயங்களில் கொஞ்சம் மெத்தனமாகத்தான் இருக்க வேண்டும். இல்லையென்றால் தினமும் மனநிலை பாதிக்கப்படவே செய்யும்.

தவறு செய்து விட்டால் அதற்கான திட்டங்களை வாங்குவதற்கு மனத்தளவில் தயாராகுங்கள். விரைவில் திட்டு வாங்கப் போகிறோம் என்று எதிர்பாருங்கள். மாறாக நம் தவறு மறக்கப்பட வேண்டும். மன்னிக்கப்பட வேண்டும் என்று விரும்பாதீர்கள்.

அதே நேரத்தில் மற்றவர்களிடத்தில் நீங்கள் ரொம்பவும் பாதிக்கப்பட்டு விட்டதாகக் காண்பித்துக் கொள்ளுங்கள். இதன்மூலம் என்ன பயன்? உங்களைக் கண்டபடி பேச அடுத்த முறை தயங்குவார்கள்.

முன் பின் அறியாதவர்கள் மனம் புண்படும்படி பேசினால் நம்மை அறியாதவர்கள் நம்மிடம் இதமாகச் சொல்வார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? என்றோ அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான் !என்றோ சமாதானம் அடையுங்கள். அதை விட்டு விட்டு நம் வருத்தத்திற்குக் காரணமாய் இருந்த சம்பவத்தையே அசை போட்டுக் கொண்டிருக்காதீர்கள். சினிமாவில் வருகிற மாதிரித் திரும்பத் திரும்ப ஸ்லோமோசனில் ரீவைன்ட் பண்ணிப் பார்க்காதீர்கள்.

மிகவும் வேண்டியவர்கள் நம் மனம் புண்படும்படியாக நடந்து கொண்டு விட்டால் நம் நன்மைக்குத் தானே சொன்னார்கள் என்றோ, நல்லதற்குத்தானே சொன்னார்கள்? உண்மையைத் தானே சொன்னார்கள்?என்றோ எண்ணிச் சமாதானம் அடையுங்கள். அவர்கள் அநியாயமாக அப்படிப் பேசியிருந்தால் வேண்டியவர்கள்தானே பேசுகிறார்கள் என்று புறத்தே ஒதுக்கியோ ஒரு காலத்தில் அவர்கள் உண்மையை உணரத்தான் போகிறார்கள் என்றோ சமாதானம் அடையுங்கள்.

லேனா தமிழ்வாணன்

# பொதுவுடைமைத் தத்துவத்தின் தோற்றம், வளர்ச்சி, எதிர்நோக்கும் சவால்கள் ஒரு நோக்கு




அரிஸ்ரோட்டில்

18ஆம் 19 ஆம் நூற்றாண்டுகளில் தத் துவ ஞானம் வளர்த்த நாடு ஜேர்மன் ஆகும். அங்கு தோன்றிய வைப் னிட்ஷ் இம்மானுவேல் காண்ட், வில்லியம் ஹெகல், லூட்விக் பியர்பார்க் போன்ற தத்துவ ஞானிகள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களுள் ஹெகலின் இயங்கியல் கருத்து முதல் வாதம் இளம் தத்துவவாதிகள் மத்தி யில் பிரபலம் பெற்றது. ஹெகலின் தத்துவ ஞான வட்டத்தில் கார்ல் மாக்சும் ஒருவர். ஹெகல் மனம் பற்றிய தோற்றப்பாடு, வரலாறு பற்றிய தத்துவம், தர்க் கம் பற்றிய விஞ்ஞா னம் ஆகிய நூல்களை எழுதினார். ஆதி கிரே க்கத்தில் ஆத்மாவை இயக்கவியல் ரீதியாக ஆராய்ந்தவர் தத்துவ ஞானி அரிஸ்ரோட்டில் ஆவார். அதற்கு அடுத் தாற்போல் ஹெகல் அதி அகண்டிதமான, உன்னதமான கருத்தி லிருந்து இயங்கியல் தர்க்க நடையில் பிரப ஞ்சம், இயற்கை, சமூ கம், மனிதன் என்பன விரிவடைகின்றன எனவும் மானிட சமூ கம் விடுதலையை நோக்கிப் போராட் டங்கள் மூலம் வளர் ந்து நவீன அரசுகள் தோற்றம் பெறுகின்றன எனவும் இறுதியில் எல்லாமே அகண்டித ஆத்மாவுடன் அல்லது கருத்துடன் கலப்பதாக கூறுகின்றான். இத னைப் பல்வேறு மதம் சார்ந்தவர்கள் சிவனொ ளிபாதமாலை அடிவா ரத்திலிருந்து சுழற்சி முறையில் பிரபஞ்ச, இயற்கை, சமூக உணர் வுடன் ஏறி உச்சியை அடைந்து வணங்குவது போன்ற செயற்பாட் டிற்கு ஒப்பிடலாம். மார்க்ஸ் தனது குரு ஹெகலின் மூளையில் இடியப்பச் சிக்கலா யிருந்த இயங்கியல் முறையை விடுவித்தார். ஏனைய அவரின் கருத் தியல் ரீதியான புராணக் கதைகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

அவர் காலத்தில் வாழ்ந்த லூட்விங் பியர் பார்க்கின் தத்துவ ஞான த்தை ஆராய்ந்து பத்துக் குறிப்புக்களை எழுதி னார். மாயாவாதத்தில் சிக்கியிருந்த அவரின் பொருள் முதல் வாத த்தை ஹெகலிடம் பெற்றுக்கொண்ட இயங் கியலுடன் இணைத்து இயங்கியல் பொருள் முதல் வாதத்தை உரு வாக்கினார். இயங்கியல் பொருள்முதல் வாத கண்ணோட்டத்தில் வரலாற்றை ஆராய்ந்த மார்க்ஸ் ஆரம்பகால பொதுவுடைமைச் சமு தாயத்துடன் ஆரம்பித்த மானிட சமுதாயம் பின் னர் உற்பத்தி சக்தி, உற்பத்தி உறவு, வர்க்க வேறுபாடுகள் வளர ஆண்டான்- அடிமை சமுதாயம் என்றும் நிலப்பிரபு- பண்ணை அடிமை சமுதாயம் என்றும் முதலாளி, தொழிலாளி என்கின்ற முதலாளித்துவ சமுதா யமாக வளர்ந்துள்ளது என்கின்றார். இம் முத லாளித்துவ சமுதாயக் கட்டமைப்பு இறுதியில் பொதுவுடைமைச் சமு தாயமாக மாறும் எனக் கூறினார். உற்பத்தி சக்தி வளர வளர வர் க்க முரண்பாடுகள் மற்றும் இதர முரண் பாடுகளால் சமுதாயக் கட்டமைப்பு உடைந்து புதிய உற்பத்தி உறவு டன் கூடிய புதிய சமு தாயக் கட்டமைப்பு உதயமாகின்றது. இதுவே அவர் கண்டு பிடித்த வரலாற்றுப் பொருள் முதல் வாதமாகும். இதனை மார்க்சும் அவரது நண்பர் ஏங்கல்சும் ஹெகலுக்கு மாறாக பொருளில் இருந்தே பிரபஞ்சம், இயற்கை , சமூகம், மனித சிந் தனை, இயங்கியல் தர்க்கமுறையில் விரி வடைந்ததாகவும் அதன் ஒரு கட்டத்தில் அறிவு தோற்றம் பெறுவதா கவும் நீண்ட கால வ ர்க்கப் போராட்டத்தின் மூலம் வர்க்கமற்ற, அர சற்ற சமூகம் தோற்றம் பெறும் எனவும் அதுவே மனித னுக்கு பூரண விடுதலையை தரும் என நம்பினார்கள்.

பிரான்சில் 1789 தொடக்கம் 1799 வரை யான காலப்பகுதியில் நடந்த பிரெஞ்சுப் புரட்சியின் மூலம் மன்னராட்சி, நிலப்



கார்ல் மாக்ஸ்

பிரபுத்துவ சமுதாயம் ஒழிக்கப்பட்டு, சுதந் திரம், சமத்துவம், சகோ தரத்துவம் என்பவ ற்றின் அடிப்படையில் மனிதவுரிமைகள் பிரக டனம் வெளியிடப் பட்டது. பிரெஞ்சுப் புரட் சியின் கதாநாய கனாக நெப்போலியன் பொன பார்ட் 1799 இல் பிரான்சின் தலை வராகி சர்வாதிகாரி யானார். இப்புரட்சியின் மூலம் மார்க்ஸ் வர லாற்று ரீதியான பாடங் களைக் கற்றார். 1848 தொடக்கம் இங்கி லாந்தில் வாழ்ந்த இவர் அரசியல் தொழிற் சங்கப் போராட்ட ங்களில் பங்கு கொண்டதோடு வளர்ந்து வந்த அந் நாட்டின் அரசியல் பொருளாதாரத்தை நீண்ட காலம் ஆராய் ந்து 1867 ஆம் ஆண்டு மூலதனம் எனும் நூலை வெளியிட்டார். 1864 ஆம் ஆண்டு முதலாம் அகிலத்தை ஸ்தாபி த்தார். ஏங்கெல்ஸ் இயற்கையின் இயங்கு- இயல், குடும்பம், அரசு தனிச்சொத்து போன்ற நூல்களை எழுதினார். இவ்வாறாக இருவரும் தத்துவார்த்தமாகவும் செயற்பாட்டு ரீதியாக வும் பொதுவுடைமை வாதத்திற்கு முழுமை யாக வடிவத்தைக் கொடுத்தார்கள். அத் தோடு முதலாளித்துவம் உச்சமாக வளர்ந்திருந்த இங்கிலாந்து, ஜேர்மன் போன்ற நாடுகளி லேயே புரட்சியை எதிர் பார்த்தார்கள். மார்க்ஸ் 1883 இல் இறந்ததன் பின் அவரின் சிந்த னைகள் வேகமாகப் பரவின.

ஐரோப்பாவில் ரஷ்யா, றார் மன்னனின் கொடுங்கோலாட்சியில் கைத்தொழில் ரீதியாக பெரிதும் வளர்ச்சி யடையாத ஒரு பலவீ னமான நாடாகவிருந் தது. இந்நிலையில் லியோரோவ்ஸ்ரோய் எனும் மாபெரும் எழுத் தாளர் ரஷ்ய சமூக அமைப்புப் பற்றி தத்து வார்த்தமாக சர்வதேச தரத்திலான நூல்களை எழுதினார். மார்க்கிம் கார்க்கி தொழிலாள ர்களின் புரட்சி நடவ டிக்கைகள் தொட ர்பான தகவல்களை எழுதினார். கார்ல் கோட்ஸ்கி மார்க்ஸிஸ தத்துவத்தை அந் நாட் டில் விதைத்தார். போங் லுவிக் கட்சியின் தலை வரான லெனின் 1917 பெப்ரவரிப் புரட்சியை அடுத்து வியோன்ட் ரொஸ்கியையும் இணை த்து 1917 ஒக்டோபர் புரட்சி மூலம் சமதர்ம ஆட்சியை நிறுவினார். இருந்தும் இவரது காலம் போர்த்துக்கேய பொதுவுடைமையாகவே கொள்ளப்படுகிறது. இக்குழப்பான சூழ் நிலையிலேயே லெனின் தொழிற்சாலைகளை பொதுவுடைமையாக் கினார். புரட்சிக்கு எதிரான வர்க்கங்களை ஒடுக்கினார். இவ் வாறாக 20 ஆம் நூற் றாண்டிற்கு ஏற்ப இலக்கியப் பொருள் முதல் வாதத்தை ஆய்வு முறையில் ஏகாதிபத்தியம், முத லாளித்துவம், சோச லிசம் என்பவற்றை ஆராய்ந்து முதலா ளித்துவத்தின் உச் சக்கட்ட வளர்ச்சியை ஏகாதிபத்தியம் அரசும் புரட்சியும் பொருள் முதல் வாதமும் அனு பவவாத விமர்சனமும் எனும் நூல்களை எழுதினார். 1924 ஆம் ஆண்டு லெனின் மறைந்ததும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி க்குள் தலைமைத்துவப் போட்டியும் கோட்பாடு ரீதியான விவாதமும் முனைப்புப் பெற்றன. ஜோசப் ஸ்டாலின் தலைமையைக் கைப் பற்றியதும் 1928 ஆம் ஆண்டு ட்ரொஸ்கி நாடு கடத்தப்பட்டார். நாட்டின் பொருளா தாரத்தை உயர்த்து வதற்காக இறுக்கமான பொருளாதாரத் திட்ட ங்களை நடைமுறைப் படுத்தினார். ஐரோ ப்பாவில், இத்தாலி, ஜேர்மன் ஆகிய நாடுக ளின் பாசிசம், நாசி சத்தின் அச்சுறுத்தல், அமெரிக்காவின் ஆதிக்கம் என்பவற்றை எதிர்கொண்ட சோவியத் ஒன்றியம்



வில்லியம் ஹெகல்

ஆயுத உற்பத்தி, விண் வெளி ஆய்வு, சீன வியட்நாம் புரட்சிகளுக்கான உதவி, மார்க்சிச தத்துவ

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தனின் பதவியைப் பறிக்க மகிந்த அணி முயற்சி



(கொழும்பு)

**ஜனாதிபதி, பிரதமர் கனவுகள் கலைந்துள்ள நிலையில் சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையேனும் பறிக்கும் நோக்கத்திலேயே மகிந்த அணியினர் செயற்பட்டு வருகின்றனர்.**

பாராளுமன்றத்தில் குழப்பங்களை மேற்கொள்ளவும், பயங்கரவாத கதைகளை பரப்பவும் இதுவே காரணம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி பதவிக்காக தொடர்ச்சியாக மகிந்த அணியினர் போராடிவரும் நிலையிலும், மக்கள் விடுதலை முன்னணி மீது சுமத்திவரும் குற்றச்சாட்டுகளின் பின்னணி தொடர்பிலும் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தனது ஜனாதிபதி பதவியை தக்கவைக்க பல்வேறு நடவடிக்கைகளை மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டார்.

அவருடன் இருக்கும் அணியினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் எம்மால் அவதானிக்கக் கூடியதாக இருந்தன. எனினும் ஜனாதிபதி தேர்தலின் போது அவரது சர்வாதிகார ஜனாதிபதி பதவியை தக்கவைக்க முடியாது போய்விட்டது.

அதேபோல் அடுத்த பொதுத் தேர்தலின் போதும் தன்னை பிரதமராக்கிக் கொள்ள வேண்டும் என அவர் முயற்சித்தார். சகல அரசியல் மேடைகளிலும் தான் பிரதமராக வேண்டும் என்ற வகையில் கருத்துக்களை முன்வைத்தார். ஆனால் பொதுத் தேர்தலின் போதும் அவரால் பிரதமாக முடியாது போய்விட்டது.

தான் மீண்டும் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்ற கனவு நனவாகவில்லை. எனவேதான் அவரது அணியினரை வைத்து இப்போது எதிர்க்கட்சி பதவியையேனும் கைப்பற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் செயற்பட்டு வருகின்றார்.

சம்பந்தனின் எதிர்க்கட்சி நாற்காலின்ய கைப்பற்றும் தீவிர முயற்சியை இவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். அதற்காகவே பொது எதிரணியினர் என தம்மை அடையாளப்படுத்தி பாராளுமன்றத்தில் தனித்து செயற்படவும் முயற்சிக்கின்றனர்.

எனினும் அவர்களது செயற்பாடுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி தடையாக இருப்பதன் காரணத்தினால் தான் எம் மீதும் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்து குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

அதேபோல் வடக்கில் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது எனவும் சம்பந்தன் உள்ளிட்ட கூட்டமைப்பு உறுப்பினர்கள் பிரிவினைவாதத்தை உருவாக்குவதாக கூறியும் தமது காரியத்தை சாதிக்க முயற்சிக்கின்றனர்.

எவ்வாறு இருப்பினும் இவர்களின் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் நாம் இடமளிக்க மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## கங்கட்டாவுக்கு மீண்டும் தடுப்பு

கொழும்பு நூதனசாலையில் மில்லியன் கணக்கான ரூபாய் பெறுமதியான கலைப் படைப்புகள் திருடப்பட்ட கொள்ளைச் சம்பவம் தொடர்பான பிரதான சந்தேகநபரான "கங்கட்டா" என அழைக்கப்படும் பிரியந்த மெண்டிஸை, எதிர்வரும் மே 23ஆம் திகதி வரை மீளத் தடுத்து வைப்பதற்கு, கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் நேற்று உத்தரவிட்டார்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் இன்னமும் கிடைக்கப்பெறாத காரணத்தினாலேயே, அவரின் தடுப்புக் காலம் நீடிக்கப்படுவதாக, நீதவான் தெரிவித்தார்.

இந்த வழக்கில் ஏழாவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டவரே பிரியந்த என்பதோடு, ஏனைய சந்தேக நபர்கள் அனைவரும், பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

கொழும்பு நூதனசாலையில 2012ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தக் கொள்ளையில், தங்கம் பதிக்கப்பட்ட வாள்கள் 10, மணிக்கல் பொதிக்கப்பட்ட தங்க மோதிரம், தங்க நாணயங்கள் 93, வெள்ளி மோதிரங்கள் 18, வெள்ளிக் காசுகள் 50, ஈயக் காசுகள் 9, நாணயத்தாள்கள் 34, தங்க மற்றும் வெள்ளி வாள் ஒன்று, இரத்தினக்கல் பொதிக்கப்பட்ட கைத்தடிப் பிடிகள் இரண்டு, தங்க மற்றும் வெள்ளி வேலைகள் செய்யப்பட்ட இடுப்புப்பட்டி, பெறுமதிமிக்க தங்கம் மற்றும் வெள்ளி பொதிக்கப்பட்ட வாள்கள் என்பன கொள்ளையிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 717

Search for people, places and things Nagendram Home

றொகான்




றதி




செரோன் இளவாலை



மது




வின்ஜக்ஷன்



செரோன்

அதிகமா படிச்சவன் கிட்டேயும்
அதிகமா
குடிச்சவன் கிட்டேயும்
ரொம்ப நேரம் பேசக் கூடாது
ஏன்னா அவன்
நம்மள கிறுக்கன் ஆக்கிடுவான்.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

...நான் ஆணையிட்டால், அது நடந்து விட் டால்... என்று தொடங்கும் வாலி யின் பாடலைப் பாடியபடி எம். என். நம்பியாரை எம்.ஜி. ஆர். சவுக் கால் விளாசும் கட்டம் ரசிகர்களி டம் பெரும் கைதட்டலைப் பெற்றது.

# தமிழ் சினிமா வரலாறு

156

## எம்.ஜி. ஆர். இருவேடங்களில் நடித்த எங்க வீட்டுப் பிள்ளை

குமரிப்பெண்ணின் உள்ள த்திலே, நான் மாந்தோப்பில் நின்றிருந்தேன், மலருக்குத் தென்றல் பகையானால்... முதலான பாடல்களும் ஹிட் ஆயின.

### 7 தியேட்டர்களில் வெள்ளி விழா

சென்னையில் காசினோ, பிராட்டுவே, மேகலா ஆகிய 3 தியேட்டர்களிலும், மதுரை சென்ட்ரல், திருச்சி ஜுபிடர், கோவை ராயல், தஞ்சை யாகப்பா ஆகிய தியேட்டர் களிலும் இப்படம் 175 நாட்க ளுக்கு மேல் ஓடி, வெள்ளி விழா கொண்டாடியது.

திருச்சி ஜுபிடரில் 236 நாட்களும், சென்னை காசி னோவில் 211 நாட்களும் ஓடி, சாதனை படைத்தது. எங்க வீட்டுப் பிள்ளையின் மூலக் கதை டி.வி.நாகராஜு என்ற தெலுங்கு எழுத்தாளர் எழுதி யதாகும். முதலில் தெலுங்கு படம்தான் வெளிவந்தது. பிறகு எங்க வீட்டுப்பிள்ளை மகத்தான வெற்றி பெற்றபின் இக்கதையை ராம் அவுர் ஷியாம் என்ற பெயரில் இந்தியில் எடு த்தனர். இந்தியில் கதா நாயக னாக நடித்தவர் திலீப்குமார்.

இந்திப்படமும் வெற்றி வாகை சூடியது.

### இலாபத்தை திருப்பிக் கொடுத்தார்

எங்க வீட்டுப் பிள்ளையின் சென்னை நகர விநியோக உரிமையை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வாங்கி இருந் தது. படம் வெள்ளி விழாவைத் தாண்டி ஓடியதால் விநி யோகஸ்தர்களுக்கு நிறைய இலாபம் கிடைத்தது.

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் அதிபரான எம்.ஜி.ஆர் தனக்கு அதிக இலாபம் வந்ததால் ரூ.1 இலட்சத்தை பட அதிபர் களுக்கு வழங்க முடிவு செய் தார். விஜயா கம்பைன்ஸ் அதிபர்களான நாகிரெட்டி-சக்ரபாணி பெயரில் ரூ.1 இலட்சத்துக்கு செக் அனுப்பி வைத்தார். அத்துடன் நான் பேசிய தொகைக்கு மேல் இலாபம் வந்து கொண்டிருக் கிறது. எனவே இந்த ஒரு இலட்சம் ரூபாயை தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒரு கடிதத்தையும் இணைத்திருந்தார்.

ஆனால் அந்தப்பணத்தை



பட அதிபர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. செக்கை திருப்பி அனுப்பி விட்டார் கள். உங்க நல்ல உள்ளத் தைப் பாராட்டுகிறோம். எனினும் இந்தப்பணத்தை நாங்கள் ஏற்பதற்கில்லை. இந்தப்பணத்தை உங்கள் விருப்பப்படி தர்ம காரிய த்துக்கு பயன்படுத்துங்கள் என்று கடிதம் அனுப்பினார்கள்.

எம்.ஜி.ஆரும் ஜெயலலி தாவும் இணைந்து நடித்த முதல் படமான ஆயிரத்தில் ஒருவன் மாபெரும் வெற்றி பெற்று வசூலில் சாதனை படைத்தது.

### பந்துலு கோரிக்கை

சிவாஜி கணேசனை வைத்து பல படங்களை எடுத்தவர் பி.ஆர்.பந்துலு. அவரது வீரபாண்டிய கட்ட பொம்மன் மகத்தான வெற்றி பெற்றதுடன் பல பரிசு களையும் பெற்றது.

பின்னர் சிவாஜியை வைத்து அவர் தயாரித்த கர்ணன், கப்பலோட்டிய தமிழன் ஆகிய படங்கள் தரமானவையாக இருந்த போதிலும் போதிய வசூல் இல்லை. கடன் சுமையினால் பந்துலு தவித்தார்.

கடனிலிருந்து மீள எம்.ஜி. அரை வைத்து ஒரு படம் தயாரிக்கத் தீர்மானித்தார். எம்.ஜி.ஆரை சந்தித்தப் பேசினார். அவர் படத்தில் நடிப்பதற்கு எம்.ஜி.ஆர் ஒப்புக் கொண்டு, கால்ஷீட் கொடுத்தார்.

ஆயிரத்தில் ஒருவன் என்ற பெயரில் படத்தை பிரமாண் டமாக கலரில் தயாரிக்க பந்துலு ஏற்பாடு செய்தார்.


(தொடரும்)

# பொதுவுடைமைத் தத்துவத்தின் தோற்றம்...

16 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இலக்கியங்களை பல்வேறு மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்து பரப்புதல் போன்ற புறநிலைச் செயற்பாடுகளில் கூடு தலான நிதியைச் செல விட்டது.

1939 இல் இரண்டாம் உலக மகா யுத்தம் ஆரம்பித்ததும் ஸ்டாலின் ஜேர்மன் நாசிசவாதி அடொல்ப் ஹிட்லருக்கு எதிராக இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்காவுடன் ஒன் றிணைந்து யுத்தத்தை வெற்றி கொண்டு சோவியத் ஒன்றியத்தை



இம்மானுவேல் காண்ட்

காப்பாற்றினார். ஜேர் மன் துண்டாடப்பட்டு கிழக்கு ஜேர்மனி மற் றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலும் சோவியத் சார்பு ஆட்சி கள் நிலைநாட்டப் பட்டன.

தொடர்ந்து சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாக ஒழுங்கமை ப்பு, சுப்ரீம் சோவிய த்தின் நிர்வாக ஒழுங் கமைப்பு, அவற்றுக் கிடையேயான தொட ர்புகள் பின்பற்றப் படாமல் அதிகாரப் படிமுறை, ஊழல், கொலைகள், அடக்கு முறை, மூடிய தன்மை, பொருளாதாரச் சீர் திருத்தங்கள் இன்மை போன்ற காரணங்களால் 1991 இல் சோவியத் ஒன்றியம் மறைந்தது.

மக்கள். சீனக் குடி யரசில் 1949 இல் புதிய ஜன நாயகப் புரட்சியும் 1956 இல் சோசலிச நிர் மாணமும் 1968 இல் கலாசாரப் புரட்சியும் என துறை நோக்கில் பல பரீட்சார்த்த நடை முறைகள் தலைவர் மா.ஓ.சேதுங்கினால் மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் பின்னர் புதிய நெருக்கடிகளை யும் பின்னடைவுக ளையும் சீனா எதிர் கொண்டது.

மொத்தத்தில் இவை யாவும் தத்துவம் சார்ந்த கோளாறுகளா? நடைமுறை சார்ந்த கோளாறுகளா? அல்லது இரண்டும் சார்ந்தவையா என்பது ஆராயப்பட வேண்டும். மார்க்ஸ் தத்துவ ஞானம் பற்றிக் கூறுகையில், தத்துவ ஞானிகள் உலகத்தை பல வித்தியாசமான வழிகளில் வியாக்கி யானம் செய்திருக் கிறார்கள்.

ஆனால் பிரச்சினை என்ன வெனில் உல கத்தை எவ்வாறு மாற்றுவது என்பதே யாகும். இதனால் மார்க்கிச தத்துவம், சமூக மாற்றம், வறுமை ஒழிப்பு, அறிவார்ந்த கோட்பாடு உருவாக்கம் என்பவற்றுக்கு வழிகாட்டுகின்றது. இவ்வாறு செயலுக்கு வழிகாட்டும் தத்துவம் என்பதால் இதனைத் தத்துவ ஞானம் அல்ல எனவும் தத்துவத்திற்கு எதிரானது எனவும் எதிராளிகள் விமர்சனம் செய்கின்றார்கள். ஆனால் மார்க்ஸ் காலத் திற்கு முன்னர் தத்துவ ஞானம் என்பது உயர் குழாத்திற்குரிய துறை யாகவே இருந்தது. ஆனால் மார்க்ஸ், ஏங் கெல்ஸ்,லெனின், மா.ஓ போன்றவர்கள் சாதா ரண உழைக்கும் மக்கள் தத்துவ ஞானத்தைக் கற்று அதனைத் தமது விடு தலைக் கான ஆயுதமாக பயன்படு த்தவேண்டும் எனக் கூறினார்கள். அவுஸ் திரேலிய கல்வியிய லாளர் கூறுகையில்,

அமெரிக்கா விஞ் ஞானத்தைக் கற்றது, சோவியத் ஒன்றியம் விஞ்ஞானத்தைச்



ஹிட்லர்

செய்தது எனக் கூறு கின்றார். மதவாதிகள் மற்றும் கருத்து முதல்வாதிகள் இந்த உலகத்திற்கு அப்பால் ஒரு சொர்க்க அல்லது தேவலோகத்தை சித் தரிக்கிறார்கள். ஆனால் மார்க்ஸ்ஸோ இந்த உலகத்தை எவ்வாறு சொர்க்கமாக, வர்க்கபேதமற்ற, அரச ற்ற, சமுதாயமயமாக்க ப்பட்ட மானிடமாக மாற்றலாம் என்பதையே சிந்தித்தார். (முற்றும்)

பி.முத்துலிங்கம்
ஓய்வு நிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
தென்மராட்சி.

# தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இனவிடுதலைக்காகப் போராட வேண்டும்

## விக்கிரமபாகு கருணாரட்ன வலியுறுத்தல்



(கொழும்பு)

தமிழ்மக்களின்விடுதலைக்காக அனைத்து நாடுகளையும் ஒன்றிணைத்து போராட வேண்டும் என நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறி சபாரத்தினத்தின் 30 ஆண்டு நிறைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த ஆட்சி காலத்தில் நாம் எல்லோருமே பல்வேறு இன்னல்கள், துன்பங்களை அனுபவித்திருக்கிறோம். எங்களுடைய நாட்டில் வாழக்கூடிய ஒரு சிலர் யுத்தம் தங்களுக்கு நன்மை அளித்ததாக கூறுகிறார்கள். ஆனால் அது அப்படியல்ல .சாதாரண மக்களே பெரிதும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் இந்த யுத்தத்தின் விளைவாக பல இலட்சக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். உண்மையிலே எமது நாட்டின் சிறந்த நாகரிகம் அனைத்தும் ஒரு சீரற்ற நாகரிகமாக மாறியுள்ளது. எங்களுடைய நாடு மிகவும் பின்தங்கிய நிலையை எட்டி இருக்கிறது.

ஒரு கொடூரமான யுத்தம் நாட்டு மக்கள் மீது திணிக்கப்பட்டது.

நீண்டகாலமாக நடைபெற்ற யுத்தமானது பாரிய அழிவுகளை ஏற்படுத்தி உலக ரீதியாக பெரும் கடன்காரர்களாக மாறி இருக்கிறோம். எங்களுடைய நாட்டிலே அரசியல் ரீதியான கள்வர்களை உருவாக்கி இருக்கிறோம். கொடியவர்களை உருவாக்கி இருக்கிறோம். இதுதான் யுத்தத்தால் எமக்கு கிடைத்த மிச்சம் என சொல்ல வேண்டும். கடந்தகால அரசாங்கம் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக நாடு பூராக உள்ள மக்களுக்கு ஒரு சுதந்திரம் கிடைத்துள்ளது.

ஆனால் நாங்கள் எதிர்பார்த்த சுதந்திரம் இங்கு கிடைக்கவில்லை. ஆகவே இந்நாட்டிலே உள்ள அரசாங்கத்தை முற்றுமுழுதாக மாற்ற அமைக்கும் வரை நீண்டகால போராட்டத்தை செய்ய வேண்டியிருக்கிறது.

தமிழ் மக்களின் விடிவை நோக்கிய போராட்டத்தை இலங்கையில் மட்டும் நடத்தாது அனைத்து நாடுகளிலும் விடுதலைக்காக நாம் போராட வேண்டியுள்ளது.

தற்போது அரசியல் அமைப்பிலே மாற்றம் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனவே தமிழ் மக்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதனூடாக சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9-95)

## பெண் மீது பாலியல் துஷ்பிரயோகம்

# புலனாய்வாளர்கள் இருவருக்கும் 24ஆம் திகதி வரை விளக்கமறியல்

(மட்டக்களப்பு)

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி - கர்பலா பிரதேசத்தில் 24.04.2016 அன்று இரவு பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட பொலிஸ் புலனாய்வு உத்தியோகத்தர்கள் இருவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி எம்.ஐ.எம். றிஸ்வி உத்தரவிட்டார்.

இது தொடர்பான குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட இருவரும் காத்தான்குடிப் பொலிஸாரினால் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி எம்.ஐ.எம். றிஸ்வி முன்னிலையில் நேற்று செவ் வாய்க்கிழமை ஆஜர்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த இரு பொலிஸ் புலனாய்வு உத்தியோகத்தர்களில் ஒருவர் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைப் பொலிஸ் பிரிவிலும் மற்றவர் கல்கிஸைப் பொலிஸ் பிரிவிலும் புலனாய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

இவர்கள் குறித்த பெண்ணை ஆட்டோ ஒன்றில் ஏற்றி கர்பலா பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதான குற்றச் சாட்டில் கைது செயயப்பட்டிருந்தனர்.

பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளானதாக கருதப்படும் இரு பிள்ளைகளின் தாயான 38 வயதுடைய பெண், காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற கொண்டுள்ளனர். (இ-5)

# ராஜாக்களின் உடையில் வந்த அமைச்சர்களும் எம்.பிக்களும்

(கொழும்பு)

அண்மையில் நுவரெலியாவில் நடைபெற்ற வசந்த கால நிகழ்வில், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ராஜாக்களின் உடையில் வலம் வந்தமை, பார்ப்போரை வியக்க வைத்துள்ளதோடு, சுவாரஸ்யமாகவும் அமைந்திருந்தது.

நுவரெலியா குதிரைப் பந்தய திடலில் நடைபெற்ற வசந்த கால நிகழ்வின் ஒரு அங்கமாக, ராஜாக்களின் உடையணிந்த நிகழ்வு இடம் பெற்றது.



இதன்போது, சபா நாயகர் கரு ஜயசூரிய, சுற் றுலாத் துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவலக அமைச்சர் ஜோன் அமரதுங்க, விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திசாநாயக்க, நாடாளு மன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமான், நுவரெலிய மாநகர மேயர் மகிந்த தொடம்பே கமகே உள்ளிட்ட பிரமுகர்கள், ராஜாக்களின் உடைகள், தொப்பிகள், கண்ணாடிகள் என்பவற்றை அணிந்து குதிரைப் பந்தய திடலில் வலம் வந்தமை சுவாரஸ்யமாக அமைநதிருந்தது.

அத்தோடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆடை வடிவமைப்பாளர்களின் கைவண்ணத்தில் உருவான ஆடைகளை அணிந்தவாறு, உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த இருபாலாரும் கலந்துகொண்டமை சிறப்பம்சமாகும். வருடாந்தம் நுவரெலியாவில் நடைபெறும் வசந்த கால நிகழ்வில் கலந்துகொள்வதற்காக, வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் பிரத்தியேகமாக வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# செய்தித்துளிகள்

## புகையிரதம் மோதி ஒருவர் பலி

வாதுவ, பொஹத்தரமுல்லப் பிரதேசத்தில் புகையிரதத்தில் மோதி 40 வயதுடைய நபரொருவர், நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6.45க்கு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர், புகையிரதக் கடவையினைக் கடக்கும் போது அளுத்கமையில் இருந்து வந்த புகையிரதம் மோதுண்டு உயிரிழந்துள்ளதாகப் பாணந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். சடலம், பாணந்துறை வைத்தியசாலை யின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பாணந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## 1670 அடி ஆழத்தில் 50பேர் ஆர்ப்பாட்டம்

போகல சுரங்கப் பணியாளர்கள் சுமார் 50பேர் 1670 அடி ஆழம் கொண்ட சுரங்கத்துக்குள் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தங்களுடைய சம்பளம் உயர்த்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இவர்கள் இவ்வாறு நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (இ-5)

## பாடசாலை சேவை வாகனங்களில் பிரேக்கில் குறைபாடுகள் கண்டுபிடிப்பு

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் 32 வான்கள் மற்றும் பேருந்துக்களின் வாகன நிறுத்தும் கருவியில் (பிரேக்) குறைபாடுகள் இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது சுமார் 100 வாகனங்கள் இவ்வாறு வாகன நிறுத்தும் கருவிகளில் குறைபாடுகளுடன் இயங்கி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## வைத்தியசாலையில் மூட்டைப்பூச்சிகளை ஒழிக்க நடவடிக்கை

தம்புள்ளை வைத்தியசாலையில் மூட்டைப் பூச்சிகளை ஒழிக்கும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இரசாயன மருந்துகளை தெளித்து இதனை இல்லாதொழிக்கும் நடவடிக்கையை மத்திய மாகாணசபை நேற்று முன்தினம் முதல் முன்னெடுத்ததாக மத்திய மாகாண சபை ஆளுநர் நிலுகா ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். (இ-5)

## 1008 சங்காபிஷேகமும் பாற்குடப் பவனியும்

யாழ்.அல்வாய் வேவிலந்தை அருள்மிகு முத்துமாரி அம்மாள் கோவில் மஹாகும்பாபிஷேகத்தின் 1008 சங்காபிஷேகமும் பாற்குட பவனியும் எதிர்வரும் 20 ஆம் திகதி இடம் பெறும். (இ-5-60)

## நற்கருணை விழாவும் திருநாள் திருப்பலியும்

யாழ். பண்டத்தரிப்பு தூய பத்திமா அன்னையின் வருடாந்த திருவிழாவில் நாளை 12 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருச் செபமாலையுடன் நற்கருணை விழா இடம் பெறும்.நாளை மறுதினம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருநாள் திருப்பலியும் இடம்பெறும். (இ-5)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

வல்வெட்டி வேவில் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ்வர சுவாமி தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை 12 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழாவும் 18 ஆம் திகதி புதன் ழமை இரவு கைலாச வாகனமும் ,19 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (இ-5)

## சிறுத்தையின் உயிரிழப்புக்கு விசம் கலந்தமையே காரணம்

அக்கரபத்தனை பகுதியில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட சிறுத்தை விஷம் கலந்த உணவு உட்கொண்டதன் பின்னரே உயிரிழந்துள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சுமித் பிலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

குறித்த சிறுத்தை உயிரிழந்திருந்த இடத்திற்கு அண்மையில் நாய்கள் இரண்டும் உயிரிழந்துகிடந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்த நாய்களுக்கு விஷம் கலந்து உணவை வழங்கி சிறுத்தையை கொலை செய்திருக்கலாம் என திணைக்களத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# திருமண வீட்டில் தாக்குதல் முன்னாள் சிப்பாய் காயம்

திருகோணமலை, கல்கடவெலப் பகுதியில் திருமண வீடு ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்கடவெலப் பகுதியைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வீரரான கே.சீலரத்ன (வயது 53) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இவர் கோமரங்கடவெல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நண்பர்களுடன் சேர்ந்து மதுபானம் அருந்திவிட்டு பகல் உணவை உட்கொள்வதற்காக தனது கணவர் சென்ற போது, பழைய கோபத்தையிட்டு பீங்கானால் தாக்குதல் மேற்கொண்டதாக மனைவி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருமண வீட்டில் இரண்டு குழுவினர்களாக இருந்து உரையாடிக் கொண்டிருந்ததாகவும் இதன்போது, அது முறுகலாக மாறியதாகவும் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-10.05.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 143.59 | 147.40 |
| பிரிட்டன் | பவுண்ட் | 206.20 | 213.52 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 162.46 | 168.93 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 146.88 | 153.01 |
| கனடா | டொலர் | 110.01 | 114.60 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 104.15 | 109.09 |
| சிங்கப்பூர் | டொலர் | 104.32 | 108.30 |
| இந்தியா | ரூபா | 2.1845 | ------- |
| சீனா | யுவான் | 22.3429 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.6914 |
| குவைத் | டினார் | 483.7012 |
| ஓமான் | ரியால் | 378.4854 |
| கட்டார் | ரியால் | 40.0261 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8522 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6709 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 | 100 | 50 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 50 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 80 | 100 | 100 | 120 | 100 |
| தக்காளி | 160 | 100 | 150 | 150 | 140 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 45 | 50 | 60 | 80 | 50 |
| கோவா | 100 | 100 | 80 | 100 | 80 | 120 | 100 |
| கரட் | 100 | 100 | 70 | 100 | 90 | 120 | 80 |
| பூசணி | 40 | 40 | 15 | 40 | 20 | 40 | 30 |
| புடோல் | 80 | 40 | 50 | 80 | 40 | 100 | 80 |
| வாழைக்காய் | 40 | 40 | 25 | 40 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 100 | 100 | 120 | 160 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 70 | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 200 | 100 | 140 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 100 | 60 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 90 | 120 | — | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 50 | 90 | 80 | 100 | 100 |
| லீக்ஸ் | 130 | 100 | 100 | 120-160 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 100 | 160 | 70 | 160 | 100 |
| கறிமிளகாய் | 140 | 100 | 130 | 140 | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 160 | 200 | 120 | 180 | 140 | 200 | 200 |
| போஞ்சி | 180 | 200 | 180 | 200 | 240 | 200 | 180 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 60 | 80 | — | 80 | 80 |
| கீரை-1பிடி | 30 | 20 | 20 | 40 | 30 | 25 | 30 |
| தேசிக்காய் | 500 | 400 | 350 | 400 | 360 | 500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 15-30 | 50 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 150 | 200 | 140 | 180 | 140 | 120 | 160 |
| வெங்காயப்பூ | 350 | 200 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 120 | — | 100 | 60 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 20 | 30 | 40 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | — | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## சந்திரிகா அறிவித்த புதிய சமரசத் திட்டம் 177

...இதற்கு ஒரு முடிவு கட்டும் வகையில் சமரசத் திட்டம் தயாரிக்கப்படும் என்று நான் அளித்த உறுதிமொழியை ஏற்று, கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மக்கள் அமோக ஆதரவுடன் என்னை வெற்றி பெறச் செய்தனர்.

### சவாலைச் சந்திக்க தயார்

எதிர்கட்சியினரும் இந்த சமரசத்திட்டத்தை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன். நமது நாட்டின் அரசியல் நாகரீக வளர்ச்சியில் முக்கிய முடிவை எடுக்கும் தருணத்தை அடைந்து இருக்கிறோம். வகுப்பு வாதம், குறுகிய அரசியல் இலாபங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

நாட்டை எதிர் நோக்கியுள்ள சவால்களைச் சந்திக்க எனது தலைமையிலான மக்கள் கூட்டணி அரசு தயாராக உள்ளது. தீவிரவாதிகள், சதிகாரர்கள், இந்த நாட்டை அழிக்க முயல்வதை ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்.

மேற்கண்டவாறு சந்திரிகா கூறினார்.

### தொண்டமான் கடிதம்

பொதுவாகத் தமிழர் கட்சிகள் சமரசத்திட்டத்தை வரவேற்றுள்ளன என்றாலும் சிங்களவர், தமிழர்களின் தீவிரவாத அமைப்புக்கள் இந்தத் திட்டத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

புதிய சமரசத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்பு அவசியம் என்று தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் வற்புறுத்தினார். இது குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அவர் எழுதிய கடிதம் ஒன்றில் கூறப்பட்டிருந்ததாவது,

விடுதலைப்புலிகள் இயக்கம் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக இராணுவத்தை எதிர்த்துப் போராடி வருகிறது. வடக்கு மாகாணத்தின் பெரும் பகுதி அவர்களது நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றது.

எனவே புதிய திட்டம் பற்றி விடுதலைப்புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்துவது அவசியமாகும். வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகப் பொறுப்பை 5 ஆண்டுகளுக்கு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்து, அங்கு ஜனநாயகப் பணி தொடர மத்திய அரசு ஆதரவு அளிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு அந்தக் கடிதத்தில் தொண்டமான் கூறியிருந்தார்.

### டக்ளஸ் தேவானந்தா

தொண்டமனின் இந்த யோசனையை மற்றொரு தமிழர் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி எம்.பி. யுமான டக்ளஸ் தேவானந்தா நிராகரித்து விட்டார்.

அவரது கட்சிக்குப் பாராளுமன்றத்தில் 9 எம்.பி.க்கள் இருந்தனர். வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளை சர்வாதிகாரிகளாக மாற்றுவதற்குதான் தொண்டமானின் யோசனை உதவி செய்யும் என்று டக்ளஸ் தேவானந்தா கருத்து தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தை விஷேட பிராந்தியம் என்று அழைக்க வேண்டும் என்றும் அந்தப் பகுதிக்கு சுயாட்சி உரிமை வழங்க வேண்டும் என்றும் அவர் சார்ந்துள்ள ஈழமக்கள் ஜன நாயக கட்சி கருத்து தெரிவித்தது. பல்வேறு இன மக்களைக் கொண்ட நாடு இலங்கை என்பதைப் பிரதி பலிக்கும் வகையில் இராணுவத்தில் தமிழர்களைக் கொண்ட தேசிய ரெஜிமெண்ட் படை ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் கூறியது.

### தமிழர் இயக்கங்கள் வரவேற்பு

மாநிலங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கி வடக்கு-கிழக்கு மாநிலங்களை ஒன்றாக இணைக்க அரசாங்கம் உறுதி மொழி தருமானால் இந்தத் திட்டம் வரவேற்கத் தக்கதுதான் என்று தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தலைவர் எம்.சிவசிதம்பரம் கருத்துத் தெரிவித்தார்.

இந்தக் கட்சிக்கு பாராளுமன்றத்தில் 5 உறுப்பினர்கள் இருந்தனர்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பொதுச் செயலாளர் சுரேஷ்ராமச்சந்திரனும் இந்தத் திட்டத்தை வரவேற்றார்.

சந்திரிகாவின் சமரசத் திட்ட அறிவிப்பைத் தொடர்ந்து கலவரம் ஏற்படலாம் என இதனால் கொழும்பு நகர் உட்பட அனைத்து பகுதிகளிலும் பாதுகாப்பு படையினரும் பொலிஸாரும் உஷார் படுத்தப்பட்டனர்.

1987 ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் அரசுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டபோது கலவரம் மூண்டதைக் கருத்தில் கொண்டு இப்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பொலிஸார் உஷார் படுத்தப்பட்டுள்ளனர் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா அறிவித்த சமரசத்திட்டத்தை விடுதலைப்புலிகள் நிராகரித்தனர். எனவே போர் நீடித்தது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி விட்டதாகவும் ஒரே நாளில் 117 விடு தலைப்புலிகள் பலியாகி விட்டதாகவும் இராணுவம் அறிவித்தது.

முன்னோக்கிய பாய்ச்சல் என்ற பெயரில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற கிளம்பிய இராணுவம் விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் பின்வாங்கியது.

### சந்திரிகா நிபந்தனை

இந்த நிலையில் புதிய சமரசத்திட்டத்தை அறிவித்த ஜனாதிபதி சந்திரிகா நிருபர்களிடம் சமரசத்திட்டம் பற்றி விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம் என்று திட்ட வட்டமாக அறிவித்தார்.



(தொடரும்)

உங்களுக்குத் தெரிந்த கல்வியை, கலையை அடிக்கடி உபயோகித்தால் அறிவும் செல்வமும் உயரும். – ஆபிரிக்கப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பொருளாதார அபிவிருத்தி வட புலத்திற்கு இல்லையா?

யுத்தத்துக்குப் பின்பான வடபுலத்தின் நிலைமைகள் குறித்து விசேடமாக ஆராய வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தம் பேரழிவுகளைத் தந்தது என்ற உண்மையை எவரும் நிராகரித்து விட முடியாது.

எனவே யுத்த அழிவுகளில் இருந்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீட்டெடுப்பதென்பது அரசின் தலையாய கடமையாகும்.

இருந்தும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் இன்னமும் மீளக்கட்டி எழுப்பப்படவில்லை. இதனால் அப்பகுதி மக்களின் வாழ்வியல் என்பது மிகவும் கடின்மானதாகவே இருந்து வருகிறது.

பொதுவில் யுத்தத்தால் பாதிப்பை சந்தித்த மக்களும் அவர்கள் சார்ந்த பிரதேசங்களும் உரிய முறையில் கவனிப்புக்கு உட்படுத்தபட வேண்டும். இல்லையேல் அந்த மக்களின் வாழ்வியல் மிகவு ம் பாதிப்புடையதாக இருக்கும்.

இது தவிர யுத்தத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம், தொழில் முயற்சிகள், பிரதேச அபிவிருத்தி, அடிப்படை வசதிகள், உட்கட்டமைப்புக்கள் என்பன தொடர்பில் கவனம் அற்ற நிலைமை இருக்குமாயின் வறுமையின் தாக்கம் சமூகச் சீரழிவுகளை ஏற்படுத்துவதுடன் வறுமையைச் சாதகமாக்க வல்லமை உள்ளவர்கள் துணிந்து கொள்வர்.

குறிப்பாக நடந்து முடிந்த போர் என்பது தமிழ் மக்களுக்கு எதிராக அரசு நடத்தியது என்பதால் வடபுலத்தில் இருக்கக் கூடிய படையினர் போரில் பாதிக்கப்பட்டவர்களை தவறாக வழிப்படுத்த முற்படலாம்.

இதற்காகப் படையினர் தமக்கு இருக்கக் கூடிய பதவிப் பலத்தை பிரயோகிக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு.

இது தவிர புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபடுகின்றவர்களும் போரில் பாதிக்கப்பட்ட பெண்களை தவறான வழிப்படுத்தலுக்கு உட்படுத்த முனையலாம்.

வீடமைப்புத் திட்டத்தின் போது பாலியல் இலஞ்சம் கோரப்பட்டதற்கான முறைப்பாடுகள் இதற்கு தக்க சான்றாகின்றன.

எனவேதான் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் அரசின் உதவித் திட்டமும் அபிவிருத்தி நோக்கிய திட்டமுன்னெடுப்புக்களும் தேவைப்படுகின்றன.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அநீதி நடக்குமாயின்– அவர்களை தவறான பாதைக்கு வழிப்படுத்த யாரேனும் முற்படுவார்களாயின் அது தொடர்பில் உடனடியாக முறையீடு செய்து அதில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு உரிய ஏற்பாடுகளை அரசு செய்து கொடுப்பது கட்டாயமானது.

அதே நேரம் போர் நடந்த பிரதேசத்தில் பொருளாதார அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என்பவற்றை ஏற்படுத்துவதும் கட்டாயமானதாகும்.

போருக்குப் பின்பான வேலையின்மை என்பதன் விளைவு சாதாரணமானதல்ல. அது இளைஞர்களை சமூக சீரழிவுக்கு இட்டுச் செல்லும் என்பதுடன் கொள்ளை, களவு, வாள்வெட்டு போன்ற நாசகாரங்களையும் அந்த பிரதேசத்தில் வழமைப்படுத்தி விடும். ஆகையால் போரினால் பாதிக்கப்பட்ட வட புலத்தின் பொருளாதார அபிவிருத்தி– தொழிற்சாலைகளின் உருவாக்கம் – வேலைவாய்ப்பு என்பன தொடர்பில் பலரும் கருத்துக் கொள்வது கட்டாயம்.

இதில் வடபுலத்து அரச நிர்வாகம் வடக்கு மாகாண அரசு என்பவற்றின் வகிபங்கு காத்திரமாக இருப்பது அவசியமானதாகும்.

# ஜனாதிபதி மைத்திரி தவிர்த்த நிகழ்ச்சியில் மகிந்த பங்கேற்பு

(கொழும்பு)

தேசிய தாதியர்தின கொண்டாட்டத்திற்கு வருகைத் தந்த மகிந்த ராஜபக்ஷவிற்கு பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாரஹேன்பிட்டி விகாரையின் விகாராதிபதி முருதொட்டுவாவே ஆனந்த தேரர தலைமையில் அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தேசிய தாதியர் தினக் கொண்டாட்டங்கள் நேற்று காலை 9 மணி முதல் பண்டாரநாயகக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதற்கு பிரதம விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைக்கப்பட்டதோடு, குறித்த நிகழ்விற்கான அழைப்பிதழிலும் ஜனாதிபதியின் பெயரே குறிப்பிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஜனாதிபதி மைத்திரிபால இந்த நிகழ்விற்கு சமுகமளிக்கவில்லை என்பதோடு, முற்பகல் 11:13 மணியளவில் குறித்த நிகழ்விற்கு பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ வருகை தந்துள்ளதுடன் அவருக்கு பலத்த வரவேற்பும் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் மகிந்த அந்த இடத்திற்கு வந்தபோது "சாதகமான சிந்தனைகள்" என்னும் தலைப்பில் சுங்கப்பிரிவின் பணிப்பாளர் சூலானந்த பெரேராவால் உரை நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், "கடவுளாக மாறிய கற்களுக்கு மனிதர்கள் பூஜை செய்வதாகவும், மாறாத கற்களுக்கு மனிதன் தேங்காய் உடைப்பதாகவும்" கூறி தனது உரையை முடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த நிகழ்விற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், மகிந்த ராஜபக்ஷவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

## மகோற்சவம்

நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்தமகோற்சவவிஞ்ஞாபனம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடை பெறவுள்ளன. இதற்கமைய 19 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் இரவு 9 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 21 ஆம் திகதிசனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குதீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (5)

## இந்து சமயப் பேரவையின் தீருமுறைவிழா ஞாயிறன்று

(யாழ்ப்பாணம்)

இந்து சமயப் பேரவையின் திருமுறை விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிதொடக்கம் மாலை 5 மணி வரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமயப் பேரவை துணைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வானது காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

காலை நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.. சிவஞானம் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார்.

மாலை நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக வடமா காண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# பசிலுடன் எனக்கு எந்தவித கருத்து முரண்பாடும் இல்லை

## விமல் வீரவன்ச விளக்கம்

மகிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியில் பசில் ராஜபக்ஷவின் செயற்பாடு குறித்து தனக்கு எந்தவித கருத்து முரண்பாடும் இல்லையென விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக் காட்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசியல் நிகழ்வ் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போது இந்த தகவலை வெளியிட்டார.

நாடு செல்லும் போக்கிலிருந்து நாட்டை மீட்டெடுக்க எந்த ஒருவருக்கும் பங்களிப்பு செய்யலாம். எமது முயற்சியும் அதுவே. எம்முடன் இணைந்து பசில் ராஜபக்ஷ தனது ஒத்துழைப்பை வழங்குவதை பிழையாகப் பார்க்க முடியாது.

கடந்த மே தின நிகழ்வுக்காக அவர் பாரியளவில் முயற்சி எடுத்தார். இருப்பினும், மே தின மேடையில் அவர் ஏறவில்லை. அவர் நினைத்திருந்தால் தான் இந்த மே தினத்தை ஏற்பாடு செய்வதற்கு பிரதான பங்காற்றியவர் என மேடையில் பிரகாசித்திருக்கலாம்.

ஆனால், அவர் பாதையில் எங்கோ நடைபெற்ற மே தினக் கூட்டமொன்றிலிருந்து வெறும் வாழ்த்து ஒன்றைத் தெரிவித்திருந்ததை ஊடகங்கள் வாயிலாக கண்டு கொள்ள முடிநதது. பசில் தனக்குரிய இடம் எது என்பதை விளங்கிச் செயற்படுகின்றார் என்பதையே இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

குற்றச்சாட்டை யாரும் முன்வைக்கலாம். அது நிரூபிக்கப்பட வேண்டும். அதுவரைக்கும் யாரைப் பற்றியும் தீர்மானிக்க முடியாது. வெற்றிக்கு பலர் உரிமை கோர இருக்கின்றார்கள். தோல்விக்கு அவ்வாறல்ல எனவும் வீரவன்ச மேலும் தெரிவித்தார். (இ-5)

## சொற்பொழிவு

நாரந்தனை– சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் மகோற்சவ காலச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

இதற்கமைய இன்று புதன்கிழமை சமூக சேவை உத்தியோகத்தர் வே.சிவராசாவின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். (5)

## பாடசாலைகளுக்கிடையிலான வெசாக்கூடு அமைக்கும் போட்டி

யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையால் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்ற நான்கு சமயங்களிலும் உள்ள முக்கியமான நிகழ்வுகளில் சமயம் சார்ந்த போட்டிகள் நடைபெறுவது வழமை. அதுபோன்று இவ்வருடமும் வெசாக் தினத்தை 20, 21 ஆம் திகதிகளில் பாடசாலை மட்டத்தில் வெசாக்கூடு அமைக்கும் போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் அதிபரின் ஊடாக யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையின் இணைப்பாளருடன் தொடர்பு கொண்டு 18 ஆம் திகதிக்கு முன்பு பங்குபற்றுதலை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இப்போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டும் பாடசாலைகளுக்கு பெறுமதியான பரிசில்களும் மற்றும் பங்குபற்றும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் பெறுமதி மிக்க சான்றிதழ்களும் வழங்கப்படும். பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வெசாக் வெளிச்சக் கூட்டுப்போட்டி எனக் குறிப்பிட்டு இணைப்பாளர், ஸ்ரீ நாகவிகாரை, ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 18 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இணைப்பாளர், யாழ். மாவட்ட சர்வமதப் பேரவை, தொலை பேசி இலக்கம் 077 6260731 தொடர்பு கொள்ளவும். (இ-5)

## கண் வில்லைகள் பெறும் பயனாளிகள்

கரவெட்டி பிரதேச செயலக முதியோர் செயலகம் ஊடாக பிரதேச செயலகத்திற்குட்பட்ட 15 பயனாளிகளுக்கு கண்வில்லைகள் வழங்கப்படவுள்ளதாக கரவெட்டி உதவி பிரதேச செயலர் எஸ்.ராஜீவ் அறிவித்துள்ளார். 15 பயனாளிகளின் பெயர் விபரமும் வெளியிடப்பட்டுள்ளன.

எஸ்.நற்குணராசா, எஸ். நல்லதம்பி, எஸ்.யோகதாஸ், வி.கந்தப்பு, கே.ஆழ்வான், ஜே.உசாமலர், எஸ். வேலுப்பிள்ளை, கே.சீனியன், கே.தவமணி, எஸ்.சரஸ்வதி, கே. செல்வரட்ணம், ஏ.யோகநாதன், கே.ஞானசேகரம், எஸ். இலட்சுமி, வி.கந்தன்.

மேற்குறிப்பிட்ட 15 பயனாளிகளும் கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5,60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை யாழ்.பிரதேசத்தில அல்லைப்பிட்டி, மண் கும்பான், மண்டைதீவு, சோளாவத்தை, வங்களாவடி, மண்கும்பான் தேசிய நீர்வழாங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம், மண்டைதீவு கடற்படை முகாம ஆகிய இடங்களிலும்வவு னியா பிரதேசததில ஆதிவிநாயகர் கோவில் பிரதேசம், குருமனகாடு பிள்ளையார்கோவில் பிரதேசம், நேரியகுளத்திலிருநது செட்டி குளம் வரை, செட்டிகுளம் வைத்தியசாலை, பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் வி.சி.கே ஆலை ஆகிய இடத்திலும மன்னார் பிரதேசத்தில முதலைக்குத்தி ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும். (இ-9)

# தமிழர்களின் காணிகளை முஸ்லிம்கள் பிடிக்கவில்லை

## உலமா கட்சித் தலைவர் கூறுகிறார்

திருகோணமலை மாவட்ட த்தின் தோப்பூர் பகுதியிலுள்ள தமிழ் வேடுவர்களின காணிகளை, முஸ்லிமகள் அபகரிப்பதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் இல்லையென்றும், இது தமிழ் முஸ்லிம் மக்களுக்கு இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்கும் செயற்பாடு எனவும் உலமா கட்சித் தலைவர் கலாநிதி முபாறக் மௌலவி தெரிவித்துள்ளார்.

தோப்பூர் முஸ்லிம்களின் பல காணிகள், யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் அபகரிக்கப்பட்டிருந்தாகவும், யுத்தம் முடிவடைந்ததையடுத்து குறித்த காணிகளிலேயே முஸ்லிம்கள் குடியேறியதாகவும், அதற்கான உறுதிப்பத்திரங்கள் உள்ளதாகவும் உலமா கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# வடமாகாண வல்லவன் தொடர் மன்னார் சென்.லூசியஸ் வெற்றி







பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் மன்னார் சென்.லூசியஸ் வி.கழகத்தினை வரணி யூத் வி.க. எதிர்த்தாடியது.

ஆரம்பம் முதல் தமது ஆதிக்கத்தை செலுத்திய சென்.லூசியஸ் 10 ஆவது நிமிடத்தில் பிங்கோவினால் முதலாவது கோலைப் பெற்றது.

அதனைத் தொடர்ந்து இரண்டாவது பாதியாட்டத்தில் 35, 41, 59 ஆவது நிமிடங்களில் பிரங்கிளின், டினு, பிங்கோ ஆகியோர் கோல்களைப் பெற ஆட்டநேர முடிவில் 4:0 என சென்.லூசியஸ் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக சென்.லூசியஸ் வி.க.வீரர் பிங்கோ தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பதக்கம் மற்றும் பணப்பரிசினை கழக உறுப்பினர் ஶ்ரீ.கோபிநாத் வழங்கிக் கௌரவித்தார். (க)

## ஊரெழு றோயல் வெற்றி

நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரின் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற முதலாவது காலிறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணி சென். நீக்கிலாஸ் அணியுடன் மோதியது.

இப்போட்டியில் ஊரெழு றோயல் அணி 3:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

றோயல் அணி சார்பில் நட்சத்திர வீரர்களான கோபன், நிதர்சன், சயந்தன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றனர். (க)

## அடுத்த சுற்றில் அளவெட்டி மத்தி

தும்பளை நாவலர் வி.க. வடமாகாண ரீதியாக நடத்தும் மென்பந்து சுற்றுப்போட்டியில் அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகம் தனது முதலாவது போட்டியில் புதுக்குடியிருப்பு உடையார்கட்டு விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. ஆட்டநாயகனாக அஜித் தெரிவானார். (க)

## ஞானமுருகன் வெற்றி

புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 3 ஆம் இடத்திற்கான போட்டியில் கரணவாய் கொலின்ஸ் அணியை 7:0 என்ற கோல்கணக்கில் ஞான முருகன் அணி வெற்றி பெற்றது. (க)

# தேசியமட்ட சதுரங்கப் போட்டிக்கு கிளிநொச்சியிலிருந்து 14 பேர் பங்கேற்பு



இலங்கைப் பாடசாலைகள் சதுரங்கச் சங்கத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான தனியாள் சதுரங்கப் போட்டிகளின் தேசியமட்டப் போட்டிகள் 15, 17, 20 வயதுப் பிரிவுகளுக்கான போட்டிகள் கேகாலை தோலாங்கமுவ மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றது.

இப்போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 14 பேர் பங்கு பற்றியுள்ளனர்.

வீரர்களது விபரம்.

**15 வயது ஆண்கள்**

தே.சபில்சன்-கிளிநொச்சி ம.வி. ச.வருணன் - கிளிநொச்சி ம.வி. க.கீதசஞ்சாரன் - கிளிநொச்சி மத்திய ம.வி. சி.விக்னேஷ் - கிளிநொச்சி ம.வி. கே. துவாரகன் - கிளிநொச்சி ம.வி.

**15 வயது பெண்கள்**

சு. தனுஷா - உருத்திரபுரம் ம. வி. அ. பவித்திரா - பளை மத்திய கல்லூரி.

**17 வயது ஆண்கள்**

ஜீ. குகப்பிரியன். - கிளிநொச்சி ம.வி. ரீ. தஜீகன் - கிளிநொச்சி ம.வி

**17 வயது பெண்கள்**

கே. ஶ்ரீதாரணி -தருமபுரம் மத்திய கல்லூரி. கே.பவனியா - உருத்திரபுரம் ம. வி. என். டிலானி- தருமபுரம் மத்திய கல்லூரி.

**20 வயது ஆண்கள்**

ஜெ.சஞ்சீவராஜா-கிளிநொச்சி மத்திய ம.வி. சி. டிலக்சன் - கிளிநொச்சி மத்திய ம.வி. (க)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கு மாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



# நாமகள் வெற்றிக்கிண்ணம் ஞான வைரவர் சம்பியன்

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 9 பேர் கொண்ட 8 ஓவர்கள் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் ஞானவைரவர் அணியை விநாயகர் கழக அணி சந்தித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஞான வைரவர் அணி 8 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் சஜீவன் 12, சுகந்தன் 10, கிரான்சிஸ் 11 ஓட்டங்களைப் பெற்றனர். இலக்கை துரத்திய விநாயகர் கழக அணி 7.4 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்த நிலையில் 52 ஓட்டங்களை பெற்றபோது தோல்வியை ஏற்றுக்கொண்டு போட்டியிலிருந்து விலகினர். இதனால் 12 ஓட்டங்களால் கிண்ணத்தை சுவீகரித்தது ஞானவைரவர். (க)

# பனாமா ஆவணப் பெயர் பட்டியல் அவன்ட் கார்ட் தலைவர் சிக்கினார்

(கொழும்பு)

மொசாக் பொன்சேகா நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட நிதி பதுக்கல் தொடர்பிலான பனாமா இரகசிய ஆவணங்களில் சர்ச்சைக்குரிய அவன்ட் கார்ட் நிறுவனத்தின் சிலரது பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த ஆவணத்தில் உள்ளடங்கியுள்ள இலங்கை நிறுவனங்கள் மற்றும் இலங்கையுடன் தொடர்புடைய முகவர்கள் உட்பட சுமார் 60 இற்கும் அதிகமானோரின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், இந்த தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கமைய, அவன்ட் கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிசாங்க சேனாதிபதி மற்றும் நிறுவனத்தின் நான்கு பங்குதாரர்களின் பெயர்கள் பனாமா ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், அவன்ட் கார்ட் நிறுவனம் இரகசிய கணக்குகளைப் பேணுவதற்கு சிங்கப்பூரின் Mossack Fonseca's நிறுவனம் உதவிகளை வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

நிசாங்க சேனாதிபதி நிதிச் சலவையில் ஈடுபட்டார் என ஏற்கெனவே குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில், பனாமா ஆவணத்திலும அவரது பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இரகசியமான முறையில் சேகரிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் சட்டவிரோதமான பணச் சலவையில் ஈடுபடுவது தொடர்பிலான ஆதாரங்களை அண்மையில் 'ஜோன் டோய்' என்கின்ற ஜேர்மனியை தளமாக கொண்டு வெளிவருகின்ற ஊடகம் ஒன்று வெளியிட்டிருந்தது.

குறித்த ஆவணங்களில் உலகின் சக்தி வாய்ந்த பல நாடுகளின் தலைவர்கள் மற்றும் செல்வந்தர்களின் பெயர்கள் உள்ளடங்கி இருந்தமையினால் சர்வதேச ரீதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## வடக்கு அமர்வில்...

வடக்கு மாகாண சபையின் 52 ஆவது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன்போது, வடகக்கு மாகாண சபையினால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வு திட்ட வரைபு வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஆகியோரினால் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட விடயத்தினை தூக்கிப் பிடித்த உறுப்பினர் ஆனல்ட், வடகக்கு மாகாண சபையினால் தயாரிக்கப்பட்ட தீர்வு திட்டம் செல்லுபடியற்றது என கூறி மீளபெறப்பட வேண்டும் என சபையில் கூறினார். இதற்கு உறுப்பினர்களான சுகிர்தன், அஸ்மின், சயந்தன் ஆகியோரும் ஆதரவு தெரிவித்து பேசினார்கள். இதனால் ஏனைய உறுப்பினர்கள் கடும எதிர்ப்பு தெரிவிக்கதொடங்கினர்.

**தமிழ் மக்கள் பேரவை**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக சதி செய்வதற்காக எவ்வாறு தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டதோ, அதேபோலதான் எதிர்க் கட்சி தலைவர் இரா.சம்பந்தனிடம் வடக்கு மாகாண சபையின் தீர்வுத்திட்ட வரைபு சமர்ப்பிக்காமல் சபாநாயகரிடம் முதலில் கையளிக்கப்பட்டுள்ளது. இதுவும் அதே போன்ற ஒரு சதி தான் என கூறிய உறுப்பினர் சயந்தன்,

வடக்கு மாகாண சபையில் தீர்வுத்திட்டம் உருவாக்கப்பட்டதன் பின்னர் முதலில் எதிர்க்கட்சி தலைவரிடமும் பின்னர் சபாநாயகர், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம் கையளிக்கப்படுவது, என்றே சபையில் முடிவெடுக்கப்பட்டது. ஆனால் யாருக்கும் தெரியாமல் சபாநாயகரிடம் தீர்வுத்திட்டம் கையளிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவரிடம் வடகக்கு மாகாண சபையின் தீர்வுத்திட்டம் கையளிக்கப்படும் நிகழ்வு பிற்போடப்பட்டமை அரசியல் ஆகிவிடக்கூடாது என்ற காரணத்திற்காக மறுதினமே எதிர்க்கட்சி தலைவரிடம் சமர்ப்பிக்கலாம் என அவைத் தலைவரிடம் நான் கோரினேன்.

கொழும்பில் கையளிக்கப்பட்டமை தொடர்பில் எனக்கு தெரியாது. ஆனால் இது பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில் நாம் தெளிவாக இருந்தோம்.

ஆகவே இத்தனை ஒரு பிரச்சினையாக எடுத்து விவாதிக்காமல், இன்னொரு நாள் எதிர்க்கட்சி தலைவரிடம் கையளிக்க முடியும் என உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இதன் பின்னர் அவைத்தலைவர் தனது கருத்துக்களை கூறி சபையை சமாதானப்படுத்தினார். வடக்கு மாகாண முதலமைச்சரும் தான் இந்த கையளிப்பு நிகழ்விற்கு வர முடியாமல் இருந்தமைக்கான காரணத்தை விளக்கி கூறி சம்பந்தனிடம் குறித்த தீர்வு திட்டம் கட்டாயம் சமர்ப்பிக்கப்படும் என அவர் உறுதியளித்தார்.

**சம்பந்தன் தமிழினத்தின் விடிவெள்ளி**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் தீர்வு திட்டம் சமர்ப்பிக்கப்படாமையால் அவர் ஏமாற்றமடைந்துள்ளார் என அடிக்கடி நேற்று உரையாற்றிய சில உறுப்பினர்கள் குறிப்பிட்டு கொண்டே இருந்தனர். இதன் போது எழுந்த உறுப்பினர் சயந்தன், நாங்கள் தீர்வுத்திட்டத்தினை தலைவர் சம்பந்தனிடம் சமர்ப்பிக்காததனால், அவர் ஏமாற்றமடையவில்லை நாங்கள் தான் ஏமாற்றம் அடைந்துள்ளோம். அவர் இங்கு வேறு ஒரு நிகழ்வுக்காக வருகை தரும் நிலையிலேயே அவரிடம் தீர்வு திட்டத்தை கையளிக்க கேட்டிருந்தோம். ஆகவே நாங்கள் தான் ஏமாந்துள்ளோம். அவர் ஏமாறவில்லை. சம்பந்தன் தமிழினத்தின் விடிவெள்ளியே தவிர மின்மினிபூச்சி அல்ல என கூறி அவையை தமிழால் பூரிக்க வைத்தார்.

**சம்பந்தன் இனியாவது வரட்டும்**

இதன் பின்னர் எழுந்த உறுப்பினர் அன்ரனி ஜெகநாதன், சம்பந்தன் அவர்கள் வடக்கிற்கு வருவது குறைவு, ஆகையால் தீர்வு திட்டத்தை கையளிக்கும் நிகழ்வை நாங்கள் இடைநிறுத்தி மீண்டும் ஒரு நாள் அதனை நடத்துவதன் மூலம் மீண்டும் ஒருமுறை இங்கு அவர் வரமுடியும்.

அவருக்கு நல்ல சொகுசு கார் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே அவர் வரட்டும், என கூறியதுடன் இங்குள்ளவர்கள் சிலர் சொந்த மூளையில சிந்திக்காமல் கதைக்கின்றனர் என தன்பக்கம் இருந்த சிலருக்கு குத்தல் போட்டார்.

இதனை அடுத்து எழுந்த உறுப்பினர் சயந்தன், ஓம் எங்களுக்கு சொந்த மூளை இலலை தான், எங்களுடைய தலைக்குள் அறிவு தான் உள்ளது. உங்கள்மூளைகளை போல் ஒன்றும் இல்லாமல் இல்லை என குத்துக்கு குத்து போட்டார்.

**வெளியேறிய விந்தன்**

இவ்வாறு குத்தல்களும், கண் சிமிட்டல்களும் தொடர்ந்து கொண்டிருக்க, ஏதோ கருத்து கூறுவதற்காக நீண்ட நேரத்திற்கு பின்னர் எழுந்து நின்ற உறுப்பினர் விந்தனை பேச விடாது, ஆனல்ட் இடையிடையே குறுக்கிட்டு ஏதோ கூற, கடுப்படைந்த விந்தன் சபையை விட்டு வெளியேற முயன்றார். இதனால் ஆனல்ட் அடங்க, விந்தனை உள்ளே அமருமாறு அவைத் தலைவர் கோரினார்.

எனினும் வெளியேற முயன்ற விநதனை ஆசுவாசப்படுத்தி உள்ளே அமர வைத்தார் லிங்கநாதன், சிறு இடைவேளையின் பின்னர் தனது உரையை தொடர்ந்தார் விந்தன். இவ்வாறு உறுப்பினர்களின் மோதல்கள் நடந்து கொண்டிருக்க எதிர்த்தரப்பிலிருந்து ஒரு கடும் குரல் ஆளுங்கட்சி இளைஞர்களை எச்சரித்தது.

**இளைஞர்கள் குழப்புகின்றனர்**

இங்கு உள்ள சிலர் தமது நோக்கங்களுக்காக அனைவரும் பேசும் போது எழுந்து நின்று குழப்பி கொண்டு உள்ளனர். இதை அவைத தலைவரும் ஏற்று நடக்கின்றார் எனறு குற்றஞ்சாட்டினார் தவநாதன். இந்த குற்றச்சாட்டினை ஆளும் தரப்பில் சிலரும் முன்வைத்தனர்.

**நான் செம்மறியல்ல**

இவ்வாறு உறுப்பினர்களிடையே சுழன்று கொண்டிருந்த மோதல் பந்து அவைத்தலைவரிடம் சென்றது. இதன் போது அவைத்தலைவர் சரியான முறையில் அவையை நடத்தி செல்கின்றார் இல்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதோடு, வடக்கு மாகாண சபையின் தீர்வு திட்டத்திற்கு தாம் ஆதரவு அளிக்கப் போவதில்லை என சில உறுப்பினர்கள் கூற அவைத் தலைவர் தனது பாணியில் மிரட்ட தொடங்கினார்.

வடக்கு மாகாண சபையின் தீர்வுத்திட்ட வரைபு திருத்தப்பட்ட பின்னர் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனாலும் அதனை தற்போது ஏற்றுக்கொள்ள மறுப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

நான் ஒன்றும் செம்மறியல்ல என தனது ஆதங்கத்தை தன்னை பேசியே வெளிப்படுத்தினார் அவைத் தலைவர். அவைத்தலைவர் செம்மறி எனக் கூறியதனை சபை குறிப்பேட்டிலிருந்து நீக்குமாறு உறுப்பினர் சயந்தன் நக்கலுடன் கூறினார்.

**தமிழக மக்கள் கொந்தளிக்க வேண்டும்.**

இடையில் நடக்கும் விடயங்களை மாற்றிய சிவாஜிலிங்கம், இந்தியாவின் உத்தர பிரதேசத்திற்கு செல்லவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சி தலைவருமான தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு எதிராக தமிழக மக்கள் கொந்தளிக்க வேண்டுமென தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட உறுப்பினர் சயந்தன் "உணர்ச்சிவசப்பட்ட பேச்சுக்களை பேசி வன்முறைகளை ஏற்படுத்த வேண்டாம். முள்ளிவாய்க்காலில் மக்கள் மடியும் போது, தமிழக மக்கள் கடல் தாண்டி வந்து எங்கள் மக்களை காப்பாற்றினார்களா? சுயஇலாப அரசியலில் அவர்கள் பேசுகின்றனர். ஆகவே சிவாஜிலிங்கம் சொன்ன விடயம் கன்சாட்டில் இருந்து நீக்கப்படவேண்டும்" என்றார். அதனை ஏற்றுக்கொண்ட சீ.வீ.கே.சிவஞானம், கன்சாட்டில் இருந்து நீக்குவதாக அறிவித்தார்.

**ஜனாதிபதி என்றால் தப்பு! சம்பந்தன் என்றால் தப்பில்லை!**

இதன்போது கருத்துக்கூறிய தவநாதன், இதுவரைகாலமும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதி தொடர்பான அவதூறாக பல்வேறு விடயங்கள் இந்தச் சபையில் கதைக்கப்பட்டும் அவை கன்சாட்டில் இருந்து நீக்கப்படவில்லை. ஆனால் ஜனாதிபதியுடன் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனும் செல்கின்றார் என்பதற்காக சிவாஜிலிங்கம் சொன்ன விடயத்தை கன்சாட்டில் இருந்து நீக்குகின்றீர்களா?" என கேட்டார்.

அதனை இலாவகமாக சமாளித்த அவைத்தலைவர் நீங்கள் நீக்குமாறு கோரினால் அந்தத் தருணங்களில் நீக்க வேண்டியவற்றை நீக்குவோம். மற்றப்படி எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார். இனி மேல் சுட்டிக்காட்டுங்கள் நாங்கள் நீக்குவோம் என அவைத்தலைவர் கூறினார்.

இவ்வாறு நேற்றைய அமர்வு உறுப்பினர்களின் மிரட்டல் தொனியுடனும், நேரத்தை வீணடித்தும், சபை நடந்து முடிந்தது. இவர்களது இந்த நடவடிக்கைகளை பாடசாலை மாணவர்களும்பாரவையிட்டு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## இந்திய இராஜ...

இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சின் முன்னாள் உயர் அதிகாரியும் இராஜதந்திரிகளில் ஒருவருமான ஜீ.பார்த்தசாரதி மற்றும் பிரபல பத்திரிகையாளர் அசோக்மேத்தா ஆகியோர் நேற்றையதினம் வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேயை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது உ்த்தியோக பூர்வ இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவது மற்றும் வட பகுதி மக்களின் பொருளாதார நிலைமைகள் உட்பட யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் வடக்கு பகுதியின் நிலைமைகள் தொடர்பாக இச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. (செ-9)

## நாமல், யோஷித...

இவர்கள் இருவரும் பாரிய மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்று சமுகமளித்துள்ளனர்.

கால்ட்டன் விளையாட்டு வலையமைப்பில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக யோசித ராஜபக்ஷ அழைக்கப்பட்டிருந்தார்.

அதேபோன்று, விமானப்படை விமானங்களை தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணைகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இவர்களிடம், நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவும், பாரிய மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவும் விசாரணைகளை நடத்தியுள்ளன. (செ-12)

## சிறைச்சாலை...

மாற்றம் செய்யப்படும் என சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் போதிய ளவு குடிநீர், அடிப்படை சுகாதார வசதிகள் உள்ளிட்ட அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன்,

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள அடிப்படை தேவைப்பாடுகளுக்கு அமைய சிறைச்சாலைகளில் வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## "ராஜபக்ஷ...

இந்த நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையைச் சேர்ந்த பலரது பெயர்கள் இந்த ஆவணத்தில் கசியவிடப்பட்டுள்ள போதிலும் ராஜபக்ஷ குடும்பத்தினரில் எவரும் அதில் இல்லை என்று மகிந்த ராஜபக்ஷ இதன்போது கூறினார். (செ-12)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## உளவளத் துணை விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பெண் தலைமைத்துவக் குடும்ப பெண்களுக்கான உளவளத்துணை தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு, அமைச்சின் கிளிநொச்சி இணைப்பு அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை உளவள வைத்திய அதிகாரி ரி.ஜெகரூபன், உளவளத்துணை நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர் ரி.சுவர்ணமுகி ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு, பெண்களுக்கான விழிப்புணர்வுகளை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பெண் தலைமைத்துவப் பெண்கள் உடல், உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், பெண்கள் தற்கொலை செய்யும் சம்பவங்களும், அவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன.

இதனைக் கருத்திற் கொண்டே இந்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது. (செ-15)

## மணல் அகழ்ந்தால் வாகனம் அரசுடமையாகும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்ந்து கடத்துவதற்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் இனிவரும் காலங்களில் அரசுடமையாக்கப்படும் என கிளிநொசசி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா நேற்று செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதிகளில் இருந்து அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற 3 உழவு இயந்திரங்கள் தொடர்பான வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது 3 உழவு இயந்திர உரிமையாளர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்த நீதவான், மணலை அரசுடமையாக்குமாறு உத்தரவிட்டார்.

இனிவரும் காலங்களில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றினால் வாகனம் அரசுடமையாக்கப்படும் என நீதவான் எச்சரிக்கை விடுத்துள்ளார். (செ-15)

## சொந்த மூளையில்...

வடக்கு மாகாண சபையினால் ஒரு தீர்வு திட்டம் தயாரிக்கப்பட்டு அதனை எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன், சபாநாயகர், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம் கையளிப்பது என தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலையில் ஜனாதிபதியை சந்திப்பதற்காக கொழும்பு சென்றிருந்த முதலமைச்சர் சபாநாயகரிடம் அந்த தீர்வு திட்டத்தினை சமர்ப்பித்திருந்தார்.

இந்த நிகழ்வு தற்செயலாக இடம்பெற்றதாகும். இங்கே கூறுவது போன்று யாரும் திட்டமிட்டு செய்யவில்லை. ஆகவே இதனை பெரிதுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை. எதிர்க்கட்சி தலைவரிடம் கையளிப்பது என தீர்மானிக்கப்பட்டது உண்மை. ஆனால் அவரிடம் தான் முதலில் கையளிப்பது என எந்த தீர்மானமும் இல்லை. ஆகவே முதலமைச்சரோடு முட்டிமோதுவது எந்த வகையிலும் அழகல்ல.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தான் தமிழினத்தின் தலைவர். அதனை நாங்கள் அனைவரும் ஏற்கினறோம். நாங்கள் அவரை விமர்சிப்பதால் அவருக்கு எதிரானவர்களாக கருதி விட கூடாது. தற்போது இங்கு பேசிக்கொண்டு சபையை குழப்பிக்கொண்டு இருக்கும் சிலர் சொந்த மூளையில் இயங்குவதாக தெரியவில்லை.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைமைகள் மாகாண சபையை மதிப்பதாக தெரியவில்லை. வடக்கு மாகாண சபையின் தீர்வுத் திட்டத்தை அவர்கள் கவனத்திலெடுப்பதாக தெரியவில்லை. இவ்வாறு தல பல தடவைகள் நடைபெற்றுள்ளன. ஆகவே நாங்கள் எதிர்க்கட்சி தலைவரிடம் முதலில் சமர்ப்பித்து விடவில்லை என்பதற்காக, தீர்வுத் திட்டத்தையே தவறு என கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாது.

தென்னிலங்கையில் எமது தீர்வுத் திட்டத்திற்கு எதிராக பேரினவாதிகள் குரல் கொடுத்து வரும் நிலையில் நாங்களும் அதற்கு ஆதரவாக இங்கு அந்த தீர்வுத் திட்டம் மீள பெறப்பட வேண்டும். என கூச்சலிடுகின்றோம். ஆகவே இதெல்லாம் ஒரு சாதாரணமான விடயமாக கருதி நாங்கள் இருந்து விட முடியாது.

இன்னொருநாள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான இரா சம்பந்தனிடம் கையளிக்கலாம், சில வேளைகள் தவறுகள் நடைபெற்றிருக்கலாம். ஆனால் அவற்றை தூக்கி பிடித்து கொண்டு நிற்பதால் எந்த பயனும் இல்லை.

அவைத்தலைவர் தனது நிலையிலிருந்து கீழே இறங்கி வருகின்றார் இல்லை. எல்லோரும் இவ்வாறுதான் நிற்கின்றார்கள். ஆகவே இதெல்லாம் சரியான நடைமுறையாக இருக்க முடியாது. நாங்கள் ஒருவருக்கொருவர் பிரிந்து அடிபடுவதனால் ஒன்றும் நடக்க போவதில்லை என பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன் குறிப்பிட்டார்.(செ-4)


CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

(C-4574)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

பிரெஞ்சு மொழி




- பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது.தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
- எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA ( DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை.
- இலவசம் படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
- யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்



ஆரம்பம் விரைவில், உடன் அழைத்துப் பதியவும்.

021 222 8093 61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(4400)


## மீனவர் பிரச்சி...

முடிவை எடுக்க வேண்டும் என யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் மீனவ சங்கத் தலைவர்கள் ஒன்றிணைந்து கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

நேற்றைய தினம் ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இந் திய இழுவைப் படகுகளின் அத்துமீறலால் தொடர்ச்சியாக எமது கடல் வளம் அழிக்கப்பட்டு வருகிறது. பல பேச்சுவார்த்தைகள் ஆர்ப்பாட்டங்கள் என்பவற்றை மேற்கொண்டும் எதுவித முன்னேற்ற நடவடிக்கைகளும் நடைபெறவில்லை. அத்துமீறும் மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கை ஓரளவு ஆறுதலாக உள்ளது.

போர் முடிந்த காலத்தில் இருந்து இன்று வரை நவீன வசதிகள் இன்றி பாரம்பரிய முறையில் தொழிலை மேற்கொண்டு வருகிறோம். எனவே ஜனாதிபதி இந்திய அரசுடன் பேசும் போது எமது கோரிக்கைகளை உள்ளடக்கி கடல் வளங்களை அழித்து, பல கோடிக்கணக்கான குஞ்சு மீன்களை சாகடித்து கடல் தொழில் உபகரணங்களை சேதப்படுத்தி எமது வாழ்வாதாரத்தை சீரழிக்கின்ற இழுவைமடித் தொழில் முறையை முற்று முழுதாக நிறுத்துதல், அனுமதியின்றி எல்லை தாண்டுகின்ற மீனவர் மற்றும் படகுகளை கைது செய்து விசாரித்து தண்டனை வழங்குதல், தனுஸ்கோடியில் இருந்து கோடிக்கரை வரையும் தலைமன்னாரில் இருந்து பருத்தித்துறை வரையான இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான எல்லைக் கோட்டை அடையாளப்படுத்துதல், ஒவ்வொரு கிலோ மீற்றர் தூர இடைவெளிகளிலும் படகுகள் எல்லை தாண்டுவதை இனம் காட்டக்கூடிய வகையில் இயல்பாக ஒலி எழுப்பி ஒளிரக்கூடிய மிதப்புகளை போடவேண்டும், பாரம்பரிய முறையில் வளிவலைத் தொழிலில் ஈடுபடுகிறவர்களின் படகு மற்றும் வலைகள் கடல நீரோட்டத்தின் வேகம் மாறும் பொழுது எல்லை தாண்டுவது நிரூபணமாகும் பட்சத்தில் அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல், அத்தோடு கடல் வளங்களை அழித்து மீன் பெருக்கத்துக்க பங்கம் விளைவிக்கின்ற அனைத்து தொழில் முறைகளையும் மாற்றத்தை செய்தல், இந்த செயன்முறைகளை கண்காணிகதும் வகையில் இந்திய-இலங்கை இரு நாட்டு கடற்கண்காணிப்பு படையை கூட்டு ரோந்து கடமையில் ஈடுபடுத்துதல் போன்ற கோரிக்கைகளை ஊடகங்கள் ஊடாக முன்வைத்துள்ளதாகவும் நேற்றைய தினம் இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த உயர் அதிகாரி ஜி.பார்த்தசாரதியிடமும் இது தொடர்பாக கலந்துரையாடியிருப்பதாகவும்தெரிவித்தனர். (செ-9-95)

## ஜனாதிபதி மைத்...

பயணமாகியுள்ளார்.

இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளின் தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர். இந்த மாநாட்டின் ஒரு பக்க நிகழ்வாக, பிரித்தானியப் பிரதமர்டேவிட்கமரூனை, மைத்திரி சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அத்துடன், இலங்கையில் ஊழலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்குத் தேவையானநிபுணத்துவஉதவிகளை வழங்குமாறும் அவர், பிரித்தானியப் பிரதமரிடம் கோரவுள்ளார்.

பிரித்தானியப் பயணத்தை முடித்துக் கொண்டு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கிருந்து வரும் 13ஆம் திகதி இந்தியத்தலைநகர்புது டில்லிக்கு செல்லவுளளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## கிரீடம் சூட்டியவ...

ஆளுங்கட்சி உறுப்பினர்களிடையே நேற்றைய தினம் இடம்பெற்ற மோதல்களை அடுத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையின் தீர்வுத் திட்டத்திற்கு தென்பகுதி இனவாதிகள் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில்,

தற்போது அதனை நாமே செல்லுபடியற்றது என கூறுவது எந்த வகையில் நியாயமாகும்? இவ்வாறு தமக்கு வாக்களித்த மக்கள் தொடர்பில் சிந்திக்காமல், தமது சுயநல அரசியல் இலாபங்களுக்காக செயற்படுவது வேதனையளிக்கின்றது. இதனை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் புரிந்து கொண்டு ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என அறிவுரை கூறினார்.

மேலும் தென்பகுதியில் வழக்கு தொடரும் நிலைக்கு கூட வடக்கின் தீர்வுத் திட்டம் உள்ள நிலையில், எம்மவர்கள் தற்போது தங்களுக்குள்ளே அடிபட்டு கொண்டு தாம் தயாரித்த தீர்வுத் திட்டத்தையே பிழையானது என கூறுகின்றார்கள். இதெல்லாம் மக்கள் பிரதிநிதிகள் செய்யும் செயற்பாடுகளா?

தவறுகள் நிகழ்ந்து இருக்கலாம். ஆகவே இது தொடர்பில் நாங்கள் முரண்படக் கூடாது. எமக்கு வாக்களித்த மக்களுக்காக செயற்பட வேண்டும் என தமக்குள்ள அடிபட்ட ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு உறைக்கும்படி அறிவுரை கூறினார். (செ-4)

## இளைஞர்கள்...

கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது. நேற்றைய அமர்வு மாகாணசபையின் இரண்டரை வருட காலத்தில் நடைபெற்ற ஒழுங்கற்ற அமர்வு எனவும் சாடியுள்ளனர்.

இதன்போது வடக்கு மாகாண சபையினால தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டம் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தனிடம் கையளிக்காமல் சபாநாயகரிடம் கையளித்தமை தொடர்பில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. இதில் சுகிர்தன், ஆனல்ட், அஸ்மின் ஆகியோர் அடிக்கடி எழுந்து தமது கருத்துக்களை கூறிக் கொண்டே இருந்தனர்.

அவைத்தலைவர் இவர்களை கட்டுப்படுத்த முயன்ற போதும் இது தொடர்ந்து கொண்டே சென்றது. ஏனைய உறுப்பினர்கள் பேசிக் கொண்டு இருக்கும் போதும் தாம் இடையிடையே குறுக்கிட்டு பேசிக்கொண்டே இருந்தனர். இவ்வாறு உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் பேசிக்கொண்டு இருக்கும் போது உறுப்பினர் ஆனல்ட் பலதடவைகள் குறுக்கிட,

கோபமடைந்த விந்தன் கனகரத்தினம் சபையினை விட்டு வெளியேற முயன்றுள்ளார். இதன் போது எழுந்த உறுப்பினர் லிங்கநாதன் எழுந்து சென்ற விந்தனை இடைமறித்து சமாதானம் செய்து மீண்டும் சபையில் இருத்தினார். பின்னர் எதிர்க்கட்சி தலைவர் தவராசாவும் இது தொடர்பில் அடிக்கடி சுட்டிக் காட்டி கொண்டே இருந்தார்.

சிவாஜிலிங்கம், சர்வேஸ்வரன், பசுபதிப் பிள்ளை, அன்ரனி ஜெகநாதன் ஆகியோரும் இது தொடர்பிலும் தமது கண்டிப்புக்களை கூறினார்கள். இந்த நிலை தொடர்ந்து கொண டிருக்க ஒரு அணி இங்கு இருந்து எல்லாவற்றையும் குழப்பி கொண்டு உள்ளனர். சிலர் தமது சொந்த மூளையை பயன்படுத்தாமல் வேறு யாருடைய நிகழ்ச்சி நிரலில் செயற்பட்டு வருகின்றனர் என பிரதி அவைத் தலைவர் குறைகூறியிருந்தார். (செ-4)

## பொருளாதார மத்...

அமர்வில் அமைச்சர் ப.சத்தியலிங்கம், பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர விடயத்தைச் சபைக்குத் சமர்ப்பித்தார். வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு 200 மில்லியன் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருந்தது. இதற்கான காணியை அடையாளப்படுத்துவதில் இழுபறி நிலை நீடித்து வருகின்றது. இந்த விடயத்தை சபைக்குள் கொண்டு வருவதில்லை என்பதில் நான் உறுதியாக இருந்தேன். இதனைச் சபைக்கு கொண்டு வருமாறு பலரும் கேட்ட போது நான் அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தேன்.

ஆனால் இன்று (நேற்று) கொண்டு வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சற்று முன்னர் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஹரிசன் என்னுடன் தொடர்பு கொண்டார். நாம் காணியை அடையாளப் படுத்தாமையினால் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கும் திட்டத்தை வேறு மாவட்டத்திற்கு மாற்றவுள்ளதாகவும் இதற்காக அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்க ஜனாதிபதி பணித்துள்ளதாகவும் தெரிவித்தார். திட்டம் கை நழுவிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனாலேயே இதனைத் தற்போது சபையில் சமர்பிக்கின்றேன் என்றார்.

ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன், ஏற்கெனவே இவ்வாறான பல திட்டங்களை தடுத்திருக்கின்றோம். சூழலியல் பூச்சாண்டி காட்டி எல்லாவற்றையும் புறக்கணித்துக் கொண்டிருக்கின்றோம். இதனால் பல மக்கள் நலத் திட்டங்கள் மக்களுக்கு கிடைக்காமல் போகின்றது. தாண்டிக்குளம் காணியை வழங்காவிட்டால், இந்தத் திட்டம் வடக்கை விட்டு கை நழுவிச் சென்றால், வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோரை சபைக்குள் நுழைய விடமாட்டோம் என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் அமைச்சர் ஐங்கரநேசன் கருத்துத் தெரிவிக்க எழுந்த போது, ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன் தான் வெளிநடப்புச் செய்யப் போவதாகத் தெரிவித்தார். இருப்பினும் ஏனைய உறுப்பினர்கள் அவரை சபையில் இருக்கச் சொன்னார்கள். இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஐங்கரநேசன், தாண்டிக்குளத்தில் மத்திய அமைச்சு விடாப்பிடியாக இருப்பது உறுத்தலாக இருக்கின்றது. நகரை அண்டிய பிரதேசத்தில் வேறு காணி அடையாளப்படுத்தி முதலமைச்சரால் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான நிலையில், ஹரிசன் சபை அமர்வு நேரத்தில் அமைச்சர் சத்தியலிங்கத்துடன் இந்த விடயம் சம்பந்தமாகப் பேசியது சந்தேகமாக இருக்கின்றது. முதலமைச்சர் மாற்றுக் காணி அடையாளப்படுத்தி வழங்கிய பின்னர், முதலமைச்சருடன் பேசாமை சந்தேகத்தை தோற்றுவிக்கின்றது. எதிர்காலத்தில் மத்திய அமைச்சுக்கள் இவ்வாறு நெருக்குதல் வழங்கி தங்களுக்கு தேவையானத்தைப் பெற்றுக் கொள்வார்கள் என்றார். இதன் பின்னர் சபையில் குழப்ப நிலை ஏற்பட்டது. இதன் போது அவைத் தலைவர் சீ.வீ. கே.சிவஞானம்,

அமைச்சர்கள் நான்கு பேரும் முதலமைச்சருடன் இந்த விடயம் தொடர்பில் பேசி உடனடியாக சபைக்கு முடிவை அறிவியுங்கள். அதுவரையில் சபையை மதிய போசன இடைவேளைக்காக ஒத்தி வைப்பதாகத் தெரிவித்தார். சபை மதிய போசன இடைவேளையின் பின்னர் மீளவும் கூடியது. இதன போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் ப.சத்தியலிங்கம், முதலமைச்சர் பேருந்து நிலையத்தின் பின்புறமாகவுள்ள காணியை அடையாளப்படுத்தியுள்ளார். அந்தக் காணி 30 வருடக் குத்தகைக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

எனவே, அதனை மீளப் பெற்றுதான் இதனைச் செய்ய முடியும். அதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்பது தெரியாது. எனவே, தாண்டிக்குளம் காணியை பொருளாதார மத்திய நிலையம் அமைக்க வழங்குவது என்றும், குத்தகைக்கு வழங்கப்பட்ட காணி மீளப் பெறப்பட்டால் அதில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பது என்ற தீர்மானத்தை முன்மொழிந்தார். இதற்கு உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். தாண்டிக்குளத்தில் அமைப்பது என்பதை மாத்திரம் தீர்மானமாக நிறைவேற்ற வேண்டும். மற்றைய விடயங்கள் தேவையில்லை என்று குறிப்பிட்டனர்.

இதன் பின்னர் சபையில் நீண்ட விவாதம் இடம்பெற்றது. இறுதியில் சபையில், தாண்டிக்குளம் காணியை பொருளாதார மத்திய நிலையம் அமைக்க வழங்குவது என்றும், அதனை வடக்கு மாகாணசபையே பொறுப்பெடுக்கும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (செ-4)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.